விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள நாடுங்கள்
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
உறவுகளிடமிருந்து WESTERN-UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 புரட்டாதி 14 ஞாயிற்றுக்கிழமை (30.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285

# நாட்டில் சட்டத்தை அமுல்படுத்த மேலதிக அதிகாரங்களை —
# இராணுவத்துக்கு வழங்க அரசு தயார்



## இராஜாங்க அமைச்சர் அஜித் பீ பெரேரா

(கொழும்பு) நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சரியான முறையில் சட்டத்தை அமுல்படுத்த இராணுவத்தினருக்கு மேலதிக அதிகாரத்தை வழங்க அரசு தயார் என இராஜாங்க அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார். (15-ம் பக்கம் பார்க்க...)

இந்தோனேசியாவில்

## நிலநடுக்கத்துடன் சுனாமி பேரலை; 384 பேர் மரணம்



06

## கிளிநொச்சியில் கஞ்சா மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மலையாளபுரம் பகுதியில் சுமார் ஒரு தொகுதி கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மலை 16

மின் கட்டணத்துக்கு

## புதிய விலை சூத்திரம் அமைக்க தீர்மானம் - நிதி அமைச்சர்

(கொழும்பு)

மின் கட்டண்த்துக்கும் விலை சூத்திரம் ஒன்றை உருவாக்குவதற்குரிய வேலைத்திட்டங்கள் 15

## மானிப்பாயில் பட்டப்பகலில் வாள்வெட்டுக்குழு அட்டூழியம்

### ஒருவர் படுகாயம்; உடமைகள் சேதம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் வீடு புகுந்து வாள்வெட்டுக் கும்பல் நடத்திய தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானத்துக்கு அருகாமையில் உள்ள வீட்டுக்குள் புகுந்து நேற்று சனிக்கிழமை நண்பகல் இந்த அட்டூழியத்தை வாள்வெட்டுக் குழு நடத்தியது.

3 மோட்டார் சைக்கிள்களில் இலக்கத் தகடுகளை மறைத்தும் முகங்களை மூடியும் வந்த 9 பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை நடத்தியது. 16

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி

கொட்டும் மழையில் யாழில் கவனயீர்ப்பு



03

கடைக்கு சென்ற பெண்ணிடம்

## கத்தியைக்காட்டி மிரட்டி தங்கச் சங்கிலி அபகரிப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

கடையில் பொருட்கள் வாங்கச் சென்ற பெண்ணிடம் கத்தியைக்காட்டி மிரட்டி கழுத்தில் அணித்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று பகல் புன்னாலைக்கட்டுவன் வடக்கு நிலாவரை வீதியிலுள்ள கடை ஒன்றிலேயே இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

புன்னாலைக்கட்டுவன் வடக்கு நிலாவரை வீதியில் உள்ள கடை ஒன் 15

## இறுதி யுத்தத்தின் போது நாம் ஓடி ஒளியவில்லை

### மைத்திரிக்கு பொன்சேகா பதிலடி



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது தாமோ, மகிந்தவோ, கோத்தபாயவோ ஓடி ஒளியவில்லை என முன்னாள் இராணுவ தளபதியும், அமைச்சருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். 15

## வாகனங்கள் இறக்குமதிக்கு இடைக்காலத் தடை விதிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்பாடு ஒரு வருட காலத்திற்கும் அரச ஊழியர்களுக்கான வாகன அனுமதிப் பத்திரம் வழங்கும் செயற்பாடு 6 மாதங்களுக்கும் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நிதி மற்றும் ஊடக அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சுக்கள், 15

உடல் மோசமடைந்த நிலையில்

## தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து சாதகமான முடிவாக தமது விடுதலையை எதிர்பார்த்து 17 ஆவது நாளாக உடல் மோசமடைந்த நிலையில் தமிழ் அரசியல் கைதிகளின் உணவு தவிர்ப்பு போராட்டம் தொடர்கின்றது.

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருவாரங்களாக மேலாக தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகள் நேற்று முன்தினத்திலிருந்து தமக்கான மருத்துவ சிகிச்சைகளை நிறுத்தியுள்ளார்கள்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது விடுத 15

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்

## அரசியல் கைதிகளின் நிலையை சர்வதேசத்துக்கு கூறுங்கள்

### ஜனநாயகப் போராளிகள்கட்சி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வை புறக்கணித்து அநுராதபுரம் சிறைச்சாலை முன் நின்று போராடி அரசியல் கைதிகளின் நிலையை சர்வதேசத்துக்கு எடுத்துக்கூறுங்கள் என ஜனநாயக போராளிகள் கட்சியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில்,

தமிழர் தரப்பில் பல தசாப்த காலங்களாக புரையோடிப் 15

## நாடு முழுவதும் சுற்றிவளைப்பு

2 ஆயிரத்து 501 பேர் கைது

(கொழும்பு)

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட 6 மணிநேர விசேட சுற்றிவளைப்புக்களில் 2 ஆயிரத்து 501 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகியிருந்தவர்களும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்களும் உள்ள 16

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**கட்டார் வேலைவாய்ப்புக்கள்**
வடக்கின் 1வது & ஒரேயொரு வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்
ஐந்து நட்சத்திர விருதுவென்ற ஒரே நிறுவனம்
Emerald Isle
Manpower & Travel Services
The Sri Lankan Recruitment Specialists
License No. 2268
முற்றிலும் இலவச பயணம்
பதிவுக் கட்டணம் 200/- மட்டுமே
**இப்போது யாழ்ப்பாணத்தில்**
மத்திய கிழக்கு - ஐரோப்பா - மேலைத்தேய நாடுகள்
077 00 38 215 ☎ 021 222 00 11
221-1/1. மின்சார நிலைய வீதி. (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்
www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk
(கி-4003)

# நாடாளுமன்றை அவசரமாக கூட்டும் அதிகாரம் பிரதமருக்கே-லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

நாடாளுமன்றத்தை அவசரமாக கூட்டும் தேவை இல்லை என அமைச்சரும் நாடாளு மன்ற அவை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டு மாறு கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் தினேஷ் குணவர்தன விடுத்துள்ள கோரிக்கை குறித்து ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இந்த கோரிக்கையை பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் பொருளாதார நிலைமை சம்பந்தமாக கலந்து ரையாட உடனடியாக நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும் என தினேஷ் குணவர்தன கோரிக்கை விடுத்திருந்தார்.

எனினும் நிலையியல் கட்டளைச்சட்டங்களுக்கு அமைய நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டும் அதிகாரம் பிரதமருக்கே இருப்பதாக லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார். (ம)

PSP RENT A CAR



நாள், கிழமை, மாத, வருட அடிப்படையில் அனைத்து விதமான கார்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
நிறுவனங்களின் பாவனைக்காகவும், ஒப்பந்த அடிப்படையிலும் எம்மிடம் இருந்து பெற்றுக்கொண்டு உங்கள் வசதிக்கு ஏற்ப எடுத்துச் செல்லலாம்.
➡Prius ➡Aqua ➡Premio ➡Axio ➡Vitz
➡Vios ➡Wagonar ➡Yaris ➡Alto ➡Indika ➡Kdh and Dolpin
தொடர்பு:0773777502, 0777852456
(5858)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

Mayil
Modeling Beauty Care
அழுகுக்கலை அக்கடமி
புதிய பிரிவுகள் ஆரம்பம் 10.10.2018
- Basic course
- Advance Course
- Diploma in Beauty culture
- Advance Diploma in Beauty Therapy And Hair Dressing
- Type of Bridal Makeup HD, 3D, Air brush, Comouflage, Dance make up,..etc....
- Cake Iceing



முதல் இணையும் 10 பேருக்கு 30% Off.
வகுப்பில் மாணவர்களுக்கு தனித்தனி கவனம் செலுத்தப்படும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில் வருகை தரவும்.
காரியாலயம்: இல.137,
தபால்பெட்டிச்சந்தி பலாலி வீதி, திருநெல்வேலி.
T.P:- 077 691 4123, 077 474 9101
(கி-4011)



BOC Travels (Pvt) Ltd
SUBSIDIARY OF BANK OF CEYLON
**விசேட முறையில் வடிவமைக்கப்பட்ட தென் இந்திய திருத்தல யாத்திரை**
இது ஓர் இலங்கை வங்கியின் துணை நிறுவனம்




- 16 பேர் கொண்ட குழுக்கள்
- தங்குமிட, உணவு வசதி (10 நாட்கள்)
- விசா பயணச்சீட்டு ஒழுங்குகள்
- அனைத்து போக்குவரத்து ஒழுங்குகள்

(யாழ்ப்பாணம் - கொழும்பு - யாழ்ப்பாணம் உட்பட)
(கி-3989)
பிரயாண திகதி ஐப்பசி மாதம் 19ஆம் திகதி முதல்
நம்பகரம், பாதுகாப்பு, உத்தரவாதம்
(நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
தொடர்புகளுக்கு : இலங்கை வங்கி, (மேற்தரக் கிளை)
1ம் மாடி, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்
021 222 4575 - 76 / 070 384 9335 / 070 395 1794

## மரண அறிவித்தல்

## நல்லதம்பி சுப்பிரமணியம்

(ஓய்வுநிலை நில அளவையாளர்)



புற்றளை புலோலி தெற்கினை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி சுப்பிரமணியம் 28.09.2018 அன்று இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி-ஆழ்வாத்தை தம்பதியினரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், தில்லைநாயகியின் அன்புக் கணவரும், தில்லைநாதன் (தரக்கட்டுப்பாட்டாளர், கனடா), மனோகரி (ஆசிரியை-தி/செல்வநாயகபுரம் இ.ம.வி), கலைச்செல்வி (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நிகேதினி (கால்நடை வைத்தியர், முல்லைத்தீவு), ஞானசேகர் (திட்டப்பணிப்பாளர், விவசாய அமைச்சு), கனகானந்தன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் மாமனாரும், அம்பலவாணர், காலஞ்சென்றவர்களான வேதாசலம், இலக்குமிப்பிள்ளை, நல்லம்மா மற்றும் தங்கம்மா ஆகியோரின் சகோதரரும், பார்வதிப்பிள்ளை காலஞ்சென்ற லோகநாதன், கணேசலிங்கம், இரங்கநாதன், சகுந்தலா தேவி ஆகியோரின் மைத்துனரும், ஹரிணி, அபிரா, ஆதிரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2018) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் புலோலி ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"தில்லையம்பதி"
உபயகதிர்காமம்,
புலோலி தெற்கு, புலோலி.

தகவல்:சு.தில்லைநாதன்
(மகன்) 0212264925
ஞா.மனோகரி (மகள்)-0778171930
(கி-4009)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக கொட்டும் மழையிலும் யாழில் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி கொட்டும் மழையிலும் நேற்றுக் காலை யாழில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. யாழ். பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் ஒன்றாக இணைந்து தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தனர்.**

குறுகிய கால புனர்வாழ்வு அளித்து தம்மை விடுதலை செய்யக்கோரி அநுராதபுரம் சிறைச்சாலையிலுள்ள 8 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த 14 ஆம் திகதியில் இருந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

தமது கோரிக்கைக்கு எந்தவிதமான பதிலும் அரசிடம் இருந்து கிடைக்காத காரணத்தினால் தமக்குரிய மருத்துவ உதவிகளையும் புறக்கணித்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இவர்களுக்கு ஆதரவு தெரிவித்து நாடு முழுவதும் பொது அமைப்புக்கள் போராட்டம் நடத்திவரும் நிலையில் அரசியல் கைதிகளின் உயிர்களைக் காக்கவேண்டும், அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனையற்ற வகையில் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை விலக்கிக்கொள்ள வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து கோசங்கள் எழுப்பிய வண்ணம் நேற்று யாழ். பேருந்து நிலைய முன்றலில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இப் போராட்டத்தில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு, யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், சமூக விஞ்ஞான ஆய்வு மையம், புதிய அதிபர்கள் சங்கம் ஆகிய பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி, தமிழீழ விடுதலை இயக்கம் ஆகிய அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (இ-9-60)

### பயங்கரவாதிகளை வெளியேயும்

# பயங்கரவாதத்தை தோற்கடித்தவர்களை சிறையில் வைத்திருக்கும் மைத்திரி அரசு

## நாமல் எம்.பி.குற்றச்சாட்டு



(ஏறாவூர்)

பயங்கரவாதிகளை வெளியிலும் பயங்கரவாதத்தை தோற்கடிக்க உதவியவர்களை உள்ளேயும் வைத்திருக்கும் மைத்திரி அரசு என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்றுச் சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் மட்டக்களப்பு சிறையில் இருக்கும் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை பார்வையிட்ட பின்ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

3 வருடங்கள் பிள்ளையானை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் தடுத்து வைத்துள்ளனர். எம்மைப் பொறுத்தவரையில் அவர் பயங்கரவாதியாக இருந்து அரசுடன் இணைந்து பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க உதவியவர்.

இன்று பார்த்தோமானால் பயங்கரவாதிகளாக இருந்தவர்களை விடுதலை செய்துள்ளனர். பயங்கரவாதத்தை முறியடிக்க உதவி செய்தவர்களுக்கு தண்டனை வழங்குகின்றனர்.

உண்மையிலே எமது அரசாங்கத்துக்கு பல வழிகளிலும், உதவி செய்தவர் என்ற முறையிலும் யுத்த வெற்றிக்கு காரணமாக இருந்தவர் என்ற ரீதியிலும் பிள்ளையானை பார்வையிட வந்துள்ளேன் .

நாங்கள் பல தடவை வந்து பார்த்து சென்றுள்ளோம் ஊடகங்களுக்கு அது தெரியாது இந்த அரசுக்கு ஒரு கொள்கை இல்லை பிள்ளையான் மட்டுமல்ல பல அரசியல் வாதிகளை சிறைக்கு அனுப்பி அரசியல் செய்ய பார்க்கின்றது என்னையும்3 தடவைகள்அடைக்க முற்பட்டதை அனைவரும் அறிந்திருப்பீர்கள்.

இந்த அரசாங்கத்தை யார் விமர்சனம் செய்தாலும் சிறைச்சாலைக்கு செல்லும் நிலைதான் அதிகமாக உள்ளது. நீதித் துறைகூட இன்று அடிமட்ட நிலைக்கு சென்றுள்ளது. அரசாங்கம் எதை செய்யநினைக்கின்றதோ அது தான் இங்கு நடக்கிறது.

இலங்கையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் ஒருவரை நாம் ஜனாதிபதியாக நியமிப்போம்.எனக்கு அதற்கான வயது இல்லை 100 நாட்களில் ஜனாதிபதி முறைமையை ஒழிப்போம் என்று கூறிய இந்த அரசு அடுத்த ஜனாதிபதி யார் என்ற போட்டியில் தற்போது உள்ளது என நாமல் மேலும் தெரிவித்துள்ளார். (இ)


11 To Elevan

Hotel and Family Restaurant Kohulam

ஒக்டோபர் முதலாம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை

10% விசேட விலைக்கழிவு

✠ இந்தியன் மசாலா தோசை, ஊத்தப்பம், பூரி, பரோட்டா, சில்லி பரோட்டா Etc....
✠ சைனீஸ் சூப், பிரைட்றைஸ், நூடில்ஸ் வகைகள்
✠ இத்தாலியன் பீட்சா வகைகள்
✠ கொத்து பிரியர்களுக்கான கொத்து றொட்டி வகைகள்
✠ யாழ்ப்பாண முறையிலான சாப்பாடு (Rice and Curry) வகைகள்
✠ உடன் பழச்சாறு மற்றும் சிற்றுண்டி வகைகள் உட்பட மேலும் பல உணவு வகைகள்



புதுப் பொலிவுடன் தினந்தோறும் முற்பகல் 11 மணி முதல் இரவு 11 மணி வரை

உயர்தரத்திலான உணவு வகைகளை உறவினர்கள் மற்றும் நண்பர்களுடன் உண்டு மகிழ, விசாலமானதும் நாகரிகமானதுமான 11 To Elevan இற்கு விரையுங்கள்.

உங்களருகாமையில் உணவுப் பொதிகளை பெற்றுக் கொள்ள அழையுங்கள் 077 744 4225

திருமணம், பிறந்தநாள் மற்றும் விசேட தினங்களுக்கான ஓடர்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

128, பலாலி வீதி, (பரமேஸ்வரா சந்தி அருகாமை)

021 221 6700

(5451)

## ● வாவ்... ஜாதவ், யாதவ்! ● திக்... திக் இறுதியில்

# மீண்டும் இந்தியா வசமானது ஆசியா

## லிட்டன் தாஸ், பங்களாதேஷின் போராட்டம் வேஷ்டானது

இரசிகர்களை இறுதிப் பந்து வரை இருக்கையின்நுனிக்கு கொண்டு சென்ற திக்... திக்... ஆசிய கிண்ண இறுதியில் இந்திய அணி 3 விக்கெட்டுக்களால் 'திரில்' வெற்றி பெற்றது. இதன்மூலம் கிண்ணத்தை தக்கவைத்துக்

**காயம் தந்த திருப்பம்**

தோனி, கேதர் ஜாதவ் இணைந்து பங்களாதேஷின் இலக்கை துடுப்பாட்டத்தை நகர்த்திக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு ஓட்டம் எடுக்க ஓடிய கேதர் ஜாதவ், தொடையின் பின் பகுதியில் காயம் ஏற்பட, ஓட முடியாமல் அவதிப்பட்டார். கடந்த ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணிக்காக முதல் போட்டியில் விளையாடியபோது, இப்படித்தான் காயம் ஏற்பட்டது. பாதியில் கிளம்பிய இவர் கடைசி நேரத்தில் களமிறங்கி வெற்றி பெற்றுக் கொடுத்தார். அடுத்து நடந்த சத்திர கிசிச்கைக்குப் பின் இந்த ஆசிய கிண்ண தொடரில் வாய்ப்பு பெற்றார். இறுதியில் மீண்டும் காயம் அடைய பாதியில் வெளியேறினார்.

கொண்டது. பங்களாதேஷின் போராட்டம் (வேஷ்ட்) வீணானது.

14ஆவ்து ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஷில், நடந்தது. நேற்று முன்தினம் டுபாயில் நடந்த இறுதியில் 'நடப்பு சம்பியன்' இந்திய அணி, பங்களா தேஷை எதிர்கொண்டது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய பொறுப்புத் தலைவர் ரோகித் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**ஜொலித்த ஜாதவ்**

பங்களாதேஷ் அணிக்கு லிட்டன் தாஸ், மெகிடி ஹசன் ஜோடி ஆரம்பம் வழங்கியது. பவுண்டரிகளாக விளாசிய லிட்டன், சகாலின் இரண்டாவது ஓவரில் இரண்டு சிக்சர்கள் அடித்தார். இதனால் 17.4 ஓவர்களில் பங்களாதேஷ் 100 ஓட்டங்களை எட்டியது.

இந்நிலையில் ஆபத்பாண்டவனாக வந்த கேதர் ஜாதவ் திருப்பு முனை ஏற்படுத்தினார். இவரது 5ஆவது பந்தில் மெகிடி (32) ஆட்டமிழந்தார். சகாலிடம், இம்ருல் (2) சிக்கினார். மீண்டும் 'சுழலில்' ஜொலித்த ஜாதவ், 'சீனியர்' முஷ்பிகுரை (5) 'பெவிலியன்' அனுப்பினார். ஜடேஜாவின் துடிப்பான களத்தடுப்பில் மொஹமட் மிதுன் (2) ரன் அவுட்டானார். மறுபக்கம் லிட்டன் தாஸ் ஒருநாள் அரங்கில் முதல் சதம் எட்டினார். மகமதுல்லா (4) ஏமாற்றினார்.

**குல்தீப் கலக்கல்**

ஒரு கட்டத்தில் 20.4 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 120 ஓட்டங்கள் எடுத்திருந்த பங்களா தேஷ் அணி, அடுத்து 19 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுக்களை இழந்தது. இதன்பின் அணியின் ஓட்டவேகம் குறைந்தது. குல்தீப் 'சுழலில்' லிட்டன் தாஸ் (121), மொர்டசா (7) வீழ்ந்தனர். நஜ்முல் (7), சௌமியா சர்க்கார் (33) ரன் அவுட்டாகினர்.

இறுதியில் பங்களாதேஷ் அணி 48.3 ஓவர்களில் 222 ஓட்டங்களுக்கு சுருண்டது. முஸ்தபிசுர் (2) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் குல்தீப் 3, கேதர் ஜாதவ் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

**தவான் 'அவுட்'**

எளிய இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு ஷிகர் தவான், ரோகித் சர்மா ஜோடி ஆரம்பம் கொடுத்தது. முதல் ஓவரில் மெகிடி ஹசன் பந்தை சுழற்றினார். இதில் தவான், ரோகித் தலா ஒரு பவுண்டரி அடித்தனர். தவான் 15 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அம்பதி ராயுடு (2) அதிர்ச்சி கொடுத்தார். ரூபெல் பந்துகளில் சிக்சர் விளாசிய ரோகித், 48 ஓட்டங்கள் எடுத்து அரைச்சத வாய்ப்பை இழந்தார்.

**தோனி ஏமாற்றம்**

பின் தினேஷ் கார்த்திக், தோனி இணைந்தனர். நஜ்முல் பந்தில் சிக்சர் அடித்த கார்த்திக், மகமதுல்லா பந்திலும் பவுண்டரி அடித்தார்.

நிதானமாக துடுப்பாட்டத்தை ஆரம்பித்த தோனி, அவ்வப்போது பவுண்டரிகள் அடித்து நம்பிக்கையைக் கொடுத்தார். 4ஆவது விக்கெட்டுக்காக 54 ஓட்டங்கள் சேர்த்த போது தினேஷ் கார்த்திக் (37) ஆட்டமிழந்தார்.

நீண்ட நேரம் தாக்குப்பிடித்த தோனி அணியை கரை சேர்ப்பார் என நம்பப்பட்டது. இவர் 36 ஓட்டங்களுடன் (67 பந்து) ஆட்டமிழக்க இந்திய அணிக்கு சிக்கல் ஏற்பட்டது.

தொடை பின்பகுதி காயத்தால் அவதிப்பட்ட கேதர் ஜாதவ் (19) 'ரிட்டையர்ட் ஹேர்ட்' முறையில் வெளியேறினார். பின் வந்த புவனேஷ்வர் ஒரு சிக்சர், பவுண்டரி அடிக்க கடைசி 18 பந்தில் 13 ஓட்., தேவைப்பட்டன. இந்நிலையில் ஜடேஜா (23), புவனேஷ்வர் (21) அடுத்தடுத்த ஓவரில் ஆட்டமிழக்க, கேதர் ஜாதவ் மீண்டும் களமிறங்கினார்.

**'திரில்' வெற்றி**

கடைசி ஓவரில் வெற்றிக்கு 6 ஓட்டங்கள் தேவைப்பட்டன. மகமதுல்லா வீசிய முதல் 2 பந்துகளில் குல்தீப், கேதர் ஜாதவ் தலா ஒரு ஓட்டம் எடுத்தனர். 3ஆவது பந்தில் 2 ஓட்டங்கள் எடுத்த குல்தீப், 4 ஆவது பந்தை வீணடித்தார். 5வது பந்தில் குல்தீப் ஒரு ஓட்டம் எடுக்க, வெற்றிக்கு ஒரு ஓட்டம் தேவைப்பட்டது. கடைசி பந்தில் உதிரியாக ('லெக் பை) ஒரு ஓட்டம் கிடைக்க,

இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை 223 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. கேதர் ஜாதவ் (23), குல்தீப் (5) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.



வெற்றிக் கிண்ணத்துடன் இந்திய அணியினர்

**342**

அதிக ஓட்டங்கள் எடுத்த துடுப்பாட்ட வீரர்களுக்கான வரிசையில் இந்தியாவின் ஷிகர் தவான் முதலிடம் பிடித்தார். இவர், 5 போட்டிகளில் 2 சதம் உட்பட 342 ஓட்டங்கள் குவித்தார். அடுத்த இரண்டு இடங்களை இந்தியாவின் ரோகித் சர்மா (317 ஓட்., 5 போட்டி), பங்களாதேஷின் முஷ்பிகுர் ரஹிம் (302 ஓட்., 5 போட்டி) கைப்பற்றினர்.

**10**

அதிக விக்கெட்டுக்கள் கைப்பற்றிய பந்துவீச்சாளர்களுக்கான பட்டியலில் இந்தியாவின் குல்தீப் யாதவ், ஆப்கானிஸ்தானின் ரஷிட் கான், பங்களாதேஷின் முஷ்தபிசுர்" ரஹ்மான் முதலிடத்தை பகிர்ந்து கொண்டனர். இவர்கள் மூவரும் தலா 10 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இவர்களை அடுத்து இந்தியாவின் பும்ரா (8 விக்கெட்) உள்ளனர்.

**7**

இறுதிப் போட்டியில் அசத்திய இந்திய அணி 7ஆவது முறையாக (1984, 1988, 1990-91, 1995, 2010, 2016, 2018) ஆசிய கிண்ணம் வென்றது. இதன் மூலம் இத்தொடரில் அதிக முறை சம்பியன் பட்டம் வென்ற அணி களுக்கான பட்டியலில் தொடர்ந்து முன்னிலையில் உள்ளது. அடுத்த இரண்டு இடங்களில் இலங்கை (5 முறை), பாகிஸ்தான் (2) உள்ளன.

◆ பங்களாதேஷ் அணி 3ஆவது முறையாக (2012, 2016, 2018) இறுதியோடு திரும்பியது.

## கேரளா கலக்கல்





ஐ.எஸ்.எல்., கால்பந்து தொடரை கேரளா அணி வெற்றியுடன் ஆரம்பித்தது. நேற்று நடந்த லீக் போட்டியில் 2-0 என்ற கோல் கணக் கில்,கொல்கத்தாவை வீழ்த்தியது.

இந்தியன் சுப்பர் லீக் (ஐ.எஸ்.எல்.,) கால்பந்து தொடரின் 5ஆவது சீசன் நேற்று ஆரம்பமானது. கொல்கத்தாவில் நடந்த முதல் லீக் போட்டியில் கொல்கத்தா - கேரளா அணிகள் மோதின.

ஆட்டத்தின் 4, 9வது நிமிடத்தில் கேரள அணியின் லால்ருத்தராவின் கோலடிக்கும் முயற்சி வீணடிக்கப்பட்டது. பின் 15ஆவது நிமிடத்தில் கொல்கத்தாவின் மானுவல் லான்சரோட் தூக்கி அடித்த பந்து 'கோல் போஸ்டில்' பட்டு வெளியே சென்றது. முதல் பாதி முடிவு கோல் எதுவுமின்றி சமநிலையில் இருந்தது.

இரண்டாவது பாதியில் எழுச்சி கண்ட கேரளா அணிக்கு 77ஆவது நிமிடத்தில் மேட்ஜ் பாப்லட்னிக் தலையால் முட்டி முதல் கோல் அடித்தார். தொடர்ந்து அசத்திய கேரளாவுக்கு 86ஆவது நிமிடத்தில் ஸ்லாவிசா ஸ்டோஜனோவிச் ஒரு கோலடித்தார்.

இரண்டு முறை கிண்ணம் வென்ற கொல்கத்தா அணியினரால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

ஆட்டநேர முடிவில் கேரளா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

## சென்னை அசத்துமா?

ஐ.எஸ்.எல்.. கால்பந்து தொடரின் இன்றைய லீக் போட்டியில் சென்னை, பெங்களூரு அணிகள் மோதுகின்றன. சென்னை அணி தொடரை வெற்றியுடன் ஆரம்பிக்க தயாராக உள்ளது.

இந்தியாவில் ஐ.எஸ்.எல்., கால்பந்து தொடரின் 5வது 'சீசன்' நடக்கிறது. இன்று பெங்களூருவில் நடக்கும் லீக் போட்டியில் சென்னை, பெங்களூரு அணிகள் மோதுகின்றன.

சென்னை அணி 'நடப்பு சம்பியன்' அந்தஸ்துடன் களமிறங்குகிறது. கடந்த முறை சென்னை அணிக்காக அதிக கோல் (9) அடித்த ஜீஜே மிரட்ட காத்திருக்கிறார்.





கடந்த 22.09.2018 சனிக்கிழமை அன்று கொக்குவில் மேற்கு கேணியடி ஒழுங்கையில் உள்ள ஞானவைரவர் தேவஸ்தானத்துக்கு மாகாண சபை உறுப்பினர் கௌரவ பொன்னுத்துரை ஐங்கரநேசனால் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து ஒலிபெருக்கிச் சாதனம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் தலைவர் பொ.தவராசலிங்கம், செயலாளர் சி.கனகரத்தினம், பொருளாளர் சு.கருணாகரன் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களுடன் கோவில் பக்தர்களும் கலந்து சிறப்பித்தனர். (ம)

# இலங்கையில் முதலாவது இயற்கை திரவ வாயு மின் நிலையம்

# இந்தியா கைவிட்டதால் மீண்டும் நுழைந்தது சீனா

(கொழும்பு)

சம்பூரில் இயற்கை திரவ வாயு மின் நிலையத்தை அமைக்கும் திட்டத்தை இந்தியா கைவிட்டதையடுத்து, இலங்கையின் முதலாவது இயற்கை திரவவாயு மின் நிலையத்தை சீனா அமைக்கவுள்ளது.

இந்த மின் நிலையம் அம்பாந்தோட்டையில் அமைக்கப்படும் என்றும் இதற்கான கட்டுமானப் பணிகள் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என்றும் மின்சக்தி அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். அம்பாந்தோட்டை இயற்கை திரவ வாயு மின் நிலையத்தை இலங்கை சீன அரசாங்கங்கள் மற்றும் இலங்கை மின்சாரசபை ஆகியன இணைந்து கூட்டு முயற்சியாக அமைக்கவுள்ளன. இதன் மூலம், 300 மெகா வோல்ட் மின் உற்பத்தி செய்யப் படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது தொடர்பான முத்தரப்பு புரிந்துணர்வு உடனபடிக்கை கையெழுத்திடப்பட்டுள்ளது. இதற்காக, சுமார் 400 மில்லியன் டொலர் அல்லது 64 பில்லியன் ரூபா செலவு ஏற்படும். எனினும், சாத்திய ஆய்வு முடிந்த பின்னரே, சரியான தொகை தெரிய வரும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சம்பூரில் 500 மெகாவோல்ட் திறன் கொண்ட அனல் மின் நிலையத்தை அமைக்க இந்தியா இணங்கியிருந்தது. அதற்கு, திருகோண மலை மக்களிடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து, அங்கு இயற்கை திரவ வாயு மின் நிலையத்தை அமைக்கத் திட்டமிடப்பட்டது. அதற்கு இந்தியா இணங்கிய போதும், மின்சாரசபை பொறியாளர்கள் அதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்த நிலையில், திருகோணமலையில், இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் உதவியுடன் இரண்டு இயற்கை திரவ வாயு மின் திட்டங்களை அமைக்கும் திட்டம் இலங்கை அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. இதையடுத்து, சம்பூர் இயற்கை திரவ வாயு மின் திட்டத்தை இந்தியா கைவிட்டது. அதை யடுத்தே, அம்பாந்தோட்டையில் சீனாவின் உதவியுடன் முதலாவது இயற்கை திரவ வாயு மின் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)


## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஹோட்டல் ஒன்றுக்கு சுத்திகரிப்பாளர், உதவி முகாமையாளர், வரவேற்பாளர் (ஆண், பெண்) போன்ற பணியாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு:- 077 763 2454


## அவன்கார்ட் விவகாரம் நீதவான் நீதிமன்றில் விசாரிக்க தடை நீடிப்பு

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய அவன்கார்ட் ஆயுதக் கப்பல் விவகாரம் தொடர்பாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிரான வழக்கை கொழும்பு நீதவான் நீதிமன்றில் விசாரிக்க தடை விதிக்கப்பட்ட உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் 5ஆம் திகதி வரை இந்த தடையை நீடித்து மேன் முறையீட்டு நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் உத்தரவு பிறப்பித்துள்ளது. (இ)









## முகாமைத்துவம் மற்றும் கணக்கியல் தொடர்பான CIMA கற்கைநெறி

யாழில் அனைத்து CIMA பரீட்சைகளுக்கும், கற்பித்தல் நடவடிக்கைகளுக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஒரே ஒரு நிறுவனமாகிய EP Academyயில் CIMA Certificate level க்கான புதிய பிரிவிற்கான அறிமுக வகுப்புகள் இன்று 30/09/2018 ஞாயிறு காலை 10.00 இற்கு நடைபெறும். அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 05/10/2018 வரை புதிய பிரிவிற்கான பதிவுகள் உள்வாங்கப்படும் என்பதனை எதிர்கால ஒளிமயமான வாழ்வை எதிர்பார்த்திருக்கும் அன்பு மாணவர்களுக்கும் அவர் தம் பெற்றோர்க்கும் அறியத்தருகின்றோம்.

இலகுவாக வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். வெளிநாடுகளில் பணியாற்ற இலகு விசா வசதிகள் உள் நாட்டிலேயே அதி உயர் வருமானத்தை ஈட்டக்கூடிய சிறந்த கல்வி.



EP Academy , 286 1/1, Palaly Road, Kantharmadam, Jaffna .

Hotline: 077 628 4845
021 221 6400


## இராசி பலன்

**மீனம்:** நேற்றைய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும், பயணங்களால் பலனுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு.

**மேடம்:** இனிய தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு, வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் வாய்ப்புண்டு.

**இடபம்:** கற்பனை மிகுதியான நாள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்:** பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, சஞ்சலங்கள் கூடும் நாள்.

**கும்பம்:** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தாய்வழி உறவில் ஆதரவு கூடும், முயற்சிகளில் அதிக ஈடுபாடு காட்டுவீர்கள்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

இராசி பலன்

கிரகநிலை: சந் | ராகு | சூரி, புத | குரு, சுக் | சனி | கேது, செவ்

சந்திராஷ்டமம்: விசாகம், அனுசம்

30.09.2018

புரட்டாதி 14, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
பஞ்சமி காலை 6.29 மணிவரை
சஷ்டி பின்னிரவு 4.47 மணிவரை
ரோகினி பின்னிரவு 1.37 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 4.32-6.02 மணிவரை
கபில சஷ்டி

வளவன்

**கடகம்:** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**சிம்மம்:** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள்.

**தனுசு:** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், களஸ்திர நன்மையுண்டு.

**துலாம்:** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

**கன்னி:** வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், நண்பர்களிடையே நிலவிய கசப்புணர்வு விலகும், பாக்கிகள் வசூலாகலாம், ரோக பயமுண்டு.

# இந்தோனேசியாவில் பாரிய நிலநடுக்கம்

# சுனாமிப் பேரலையில் சிக்கி 384 பேர் பலி


## உயிரிழப்பு மேலும் அதிகரிக்குமென அச்சம்





(ஜகார்த்தா)

**இந்தோனேசியா நாட்டின் வடக்குப் பகுதியை நேற்று முன்தினம் தாக்கிய நிலநடுக்கம், சுனாமிப் பேரலைகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 384 ஆக உயர்ந்துள்ளது.**



இந்தோனேசியா நாட்டின் வடக்குப் பகுதியிலுள்ள சுலசேசி தீவின் மத்தியில் உள்ள டோங்காலா நகரில் 6.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை மத்திய பகு தியிலுள்ள பாலு நகரில் 7.5 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதில் கட்டடங்கள் கடுமையாக சேதமடைந்தன.

இந்த நிலநடுக்கத்தை யடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால், சுனாமி எச்சரிக்கை திரும்பப் பெறப்பட்ட சிறிது நேரத்தில் கடலோரப்பகுதிகளில் சுனாமி தாக்கியது.

சுமார் 2 மீற்றர் உயரத்திற்கு எழுந்த பேரலைகள் கரையை நோக்கி சீறிப் பாய்ந்தன. பல்வேறு கிராமங்களிலுள்ள வீடுகள் சுனாமி பேரலையில் சிக்கி இடிந்து விழுந்தன. ஏராளமானோர் தண்ணீரில் அடித்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில், நேற்றுப் பிற்பகல் நிலவரப்படி நிலநடுக்கம் மற்றும் சுனாமியில் சிக்கி உயிரிழந்தோர் எண்ணிக்கை 384 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டின் பேரிடர் மீட்புப் படையினர் தெரிவித்தனர்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் பலர் காயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ)

# நம்பகத்தன்மை இல்லை


## ஜனாதிபதியின் வாக்குறுதி நிறைவேற்றப்படாது

## பிக்குகள் சங்கம் விமர்சனம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சர்வதேச சமூகத்தின் முன் எடுத்துரைத்த விடயத்திற்கு எதிராகவே ஏதாவது நடைபெறும் என தேசிய புத்திஜீவிகள் பிக்குகள் சங்கம் விமர்சித்துள்ளது.





ஜனாதிபதியின், ஐ.நா. உரை குறித்து தேசிய புத்திஜீவிகள் பிக்குகள் சங்கத்தின் அமைப்பாளர் பேராசிரியர் வண.மாதுறுஓயே தம்மிஸ்ஸர ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஜனாதிபதியின் அறிவிப்பில் நம்பகத்தன்மை இல்லை. இவர் இதற்கு முன்பும் இதுபோன்ற பல கூற்றுக்களை முன்வைத்திருந்ததுடன், அதனால் எவ்வித பயனும் இல்லை.

இராணுவத்தினருக்கு எதிராக சட்டங்களை அமுல்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என ஜனாதிபதி உத்தரவாதம் அளித்துள்ளார்.

ஆனால், சர்வதேச சமூகத்தின் குறுக்கீடு இன்றி தாமே தமது பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வோம் என்ற ஜனாதிபதியின் உறுதி எதிர்காலத்தில் எதிர்மறையாக நிகழும்" எனத் தேரர் மேலும் தெரிவித்தார். (இ)

# தகவல் அறியும் உரிமைச்சட்டம் குறித்து செயலமர்வு வவுனியாவில்



(குருமன்காடு)

அரசாங்க தகவல்திணைக்களத்தினால் வன்னி மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான செயலமர்வு வவுனியாவில் இடம் பெற்றது.

வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று மாவட்ட செயலக ஊடக இணைப்பாளர் உப்புல் பாலசூரிய தலைமையில் இடம்பெற்றது.

தகவல் அறியும் உரிமை தொடர்பிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை பயன்படுத்தி நாட்டின் அபிவிருத்தி நோக்கிய தகவல்களைப் பெற்றுக் கொண்டு அதனை வெளிப்படுத்துதல் தொடர்பாக இதன்போது கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

இந்நிகழ்வில் விசேட அதிதியாக அரசாங்க தகவல் பணிப்பாளர் சட்டத்தரணி சுதர்சன குணவர்த்தன, மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர். (2-250)

# சட்டவிரோத அகழ்வு ; 7 பேர் கைது

(இரத்தினபுரி)

சட்டவிரோத மாணிக்கக் கல் அகழ்வில் ஈடுபட்ட 07 பேர் நேற்று அதிகாலை இரத்தினபுரி பிரதேசத்தில் வெவ்வேறு இடங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

**இரத்தினபுரி, மல்வல** மற்றும் வட்டவல ஆகிய பிரதேசங்களில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்த அகழ்வுக்குப் பயன்படுத்தப்படும் பொருட்களும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் இரத்தினபுரி இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபையினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் ஒவ்வொருவருக்கும் 5000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (இ)

# வாகன நெரிசலால் பாரிய நட்டம்

(கொழும்பு)

வீதிகளில் ஏற்படும் வாகன நெரிசல் காரணமாகவே பாரிய நட்டம் ஏற்படுவதாகவும் இத்தகைய நெரிசலால் ஏற்படும் இழப்பு வருடாந்தம் 360 பில்லியன் ரூபாய் வரை உயர்வதாக போக்குவரத்து பட்டய நிறுவகத்தின் தலைவி கயனி டீ அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தொழில்துறை சார்ந்தோர் சங்கத்தின் 31 ஆவது வருடாந்த மாநாட்டில் அவர் தனது உரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். குறித்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு சின மன் லேக்சைட் ஹோட்டலில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# இலங்கையை புதிய கண்ணோட்டத்தில் பார்க்குமாறு ஐ.நாவிடம் கோரிக்கை

(நியூயோர்க்)

ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் வலுப்படுத்தப்பட்டுள்ளதால் அனைத்துலக சமூகம் இலங்கையை இனியாவது புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார்.





ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குட்ரேரசை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார். நியூயோர்க்கில் ஐ.நா. தலைமையகத்திலுள்ள ஐ.நா. பொதுச்செயலரின் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது ஜனாதிபதி, கடந்த மூன்றரை ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்கள் குறித்து ஐ.நா. பொதுச்செயலருக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்தவதற்காக தமது அரசாங்கம் தொடர்ந்து பணியாற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் வலுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அனைத்துலக சமூகம் இலங்கையைப் புதிய கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கேட்டுள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலரை மீண்டும் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறும் அதன் மூலம் நாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நேரில் காணும் வாய்ப்பு கிட்டும் என்றும் இலங்கை ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அழைப்பை ஏற்றுக் கொண்டு ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குட்ரேரஸ், கூடிய விரைவில் இலங்கைக்கு பயணம் மேற்கொள்வதாகவும் உறுதியளித்துள்ளார்.

நல்லிணக்கத்துக்கான இலங்கையின் முயற்சிகளுக்கு ஐ.நா. தொடர்ந்தும் ஆதரவு அளிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

அமைதியைக் கட்டியெழுப்புதல், மனித உரிமைகள், ஐ.நா. அமைதிகாப்புப் போன்ற பணிகளில், இலங்கை நல்ல முறையில் பணியாற்றுவதற்காக ஐ.நா. பொதுச்செயலர் பாராட்டும் தெரிவித்துள்ளார். (இ)

### ஜனாதிபதியைக் கொல்லச் சதி

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலகவிடம் குரல் சோதனை



(கொழும்பு)

பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக சில்வாவிடம் நேற்று முன்தினம் அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தில், குரல் சோதனை நடத்தப்பட்டது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உள்ளிட்டோரைப் படுகொலை செய்யும் சதித்திட்டம் தொடர்பாக, பிரதி பொலிஸ்மா அதிபர் நாலக சில்வா மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் நிலையில், அரசாங்க பகுப்பாய்வுத் திணைக்களத்தில், நேற்று முன்தினம் முற்பகல் 10 மணிக்கு, நாலக சில்வாவிடம் குரல் சோதனை நடத்தப்பட்டது. சோதனை முடிந்து வெளியே வந்த அவரிடம், இந்தச் சதித் திட்டம் குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர், எந்தப் பதிலையும் அளிக்காமல் வாகனத்தில் ஏறிச் சென்றார். (இ)

## வன்முறைகளைக் கட்டுப்படுத்த வடபகுதியில் பொலிஸாருக்கு உதவியாக படைத்தரப்பை ஈடுபடுத்தக் கோரிக்கை

### அரசிடமிருந்து இன்னும் பதிலில்லை

(கொழும்பு)

வடபகுதியில் சட்டம் ஒழுங்கை அமுல்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தினரையும் பயன்படுத்துவது குறித்து அரசாங்கம் இன்னமும் தீர்மானிக்கவில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. படைத்தரப்பினர் இதற்கான கோரிக்கைளைமுன்வைத்துள்ளனர்.

யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி பொலிஸாருக்கு உதவியாகப் படையினரை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கான அனுமதியை கோரியதை தொடர்ந்து இராணுவத்தளபதி மகேஷ் சேனநாயக்க இது குறித்து பாதுகாப்பு சபையின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

எனினும் இது குறித்து



அரசாங்கம் இன்னமும் தீர்மானிக்கவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரி வித்துள்ளன.

முன்னர் போர் இடம் பெற்ற பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் படி பாதுகாப்பு அமைச்சின் அனுமதியின்றி படையினரை நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முடியாது என பாதுகாப்பு அமைச்சின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அவசர நிலைமைகளின் போதுகூட கொழும்பின் உத்தரவின்றி படையினரை பயன்படுத்த முடியாது என பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

படையினர் இரவில் கூட ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபவதில்லை. நிர்வாகதேவைகளுக்காகவே படையினர் முகாம்களில் இருந்து வெளியே செல்கின்றனர் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆயுதமேந்திய கும்பல்களால் பொதுமக்களின் அன்றாட வாழ்விற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு வட்டாரங்கள் எனினும் இந்த சம்பவங்களை விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையது என வகைப்படுத்த முடியாது எனவும் தெரிவித்துள்ளன.

மேலும் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ள வன்முறைகளுக்கு ஆவா குழுவே காரணம் எனவும்

யாழ்.பொலிஸார் படையினரின் உதவியைக் கோரவில்லை எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு வட்டாரங்கள் சிறிய சம்பவங்கள் இடம்பெற்றுள்ள போதிலும் எந்த நிலையையும் சமாளிக்க பாதுகாப்புத் தரப்பு தயார் நிலையில் உள்ளது எனவும் தெரிவித்துள்ளன. (இ)

### இருநாட்டு உறவைப் பலப்படுத்த

## அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலருடன் வெளிவிவகார அமைச்சர் மாரப்பன சந்திப்பு



(நியூயோர்க்)

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச்செயலர் அலிஸ் வெல்ஸ் அம்மையாரைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்க, ஜனாதிபதி மைத்திரியுடன், வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவும் நியூயோர்க் சென்றுள்ளார்.

இதன்போதே, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவிச்செயலர் அலிஸ் வெல்ஸ் அம்மையாரை அவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இரண்டு நாடுகளுக்கிடையிலான பலமான உறவுகளை மீள உறுதிப்படுத்தும் வகையிலும் சுதந்திரமான, திறந்த. சட்டத்தின் அடிப்படையிலான இந்தோ-பசுபிக் பிராந்தியத்தை உறுதிப்படுத்திக் கொள்வதில் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அர்ப்பணிப்பை பகிர்ந்து கொள்ளும் வகையிலும் இந்தச் சந்திப்பு அமைந்ததாக, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ)

## தென்னை பயிர்ச்செய்கை சபை தென்னை சித்திர திறப்பு விழா

(முல்லைத்தீவு)

தென்னை பயிர்ச் செய்கை சபையின் தென்னை நடுதல் தொடர்பான சுவர் ஓவியம் வரைதல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கடந்த 26 ஆம் திகதி மு/குமுழமுனை மகா வித்தியாலயத்தில் தென்னை நடுதல் தொடர்பான சுவர் ஓவியம் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கற்பகதரு சங்க தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டு சுவர் ஓவியத்தைத் திறந்து வைத்தனர்.

இந் நிகழ்வில் பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் கருத்துத் தெரிவிக்கையில், தென்னை ஓவியங்களின் ஊடாக தென்னை வளர்ப்பின் முக்கியத்துவம் தொடர்பாக பாடசாலை மட்டத்தினருக்கு எடுத்துரைத்தார். மாணவர்கள்ஒவ்வொருவரும் தங்களது வீட்டு வளவுகளில் உள்ள தென்னங்கன்றுகளை வளர்ப்பது தொடர்பான விரிவாக்கல் நிகழ்ச்சித்திட்டமும் இதன் போது நடைபெற்றது.



இந்த சுவர் ஓவியங்கள் கல்வித் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட 30 பாடசாலைகளில் வரையப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(2)

## அரசு மீது நம்பிக்கை இழந்து வருகின்றோம்

# இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## மாவை.எம்.பி.கோரிக்கை



(திருமலை)

நாங்கள் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இழந்து வருகின்றோம். எமது மக்களுடைய விடயங்களில் அரசின் நடவடிக்கைகள் மிகவும் தாமதமாக நகர்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

அன்று எம்மிடம் இரண்டு போராட்ட சக்திகள் இருந்தன. ஒன்று விடுதலைப் புலிகளின் ஆயுதபலம் மற்றையது எமது மக்களின் வாக்குப்பலம். அவற்றில் ஒன்றை நாம் இப்போது இழந்துள்ளோம். எனவே தற்போது எம்மிடம் உள்ள மக்களின் ஜனநாயக பலத்தை மட்டுமே நம்பியுள்ளோம்.


இந்த நிலையில் இந்திய அரசாங்கம் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.

திருகோணமலையில் அமைந்துள்ள இலங்கை தமிழரசு கட்சியின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தமிழக பத்திரிகையாளர்கள், சட்டத்தரணிகள் மற்றும் அரசியல் கட்சிப் பிரதிநிகள் குழாமுக்கும் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநகர முதல்வர்கள் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள், கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஆகியோருக்கும் இடையே இடம்பெற்ற சிநேகபூர்வ கலந்துரையாடலில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, எமது தேசத்தை இரண்டு காலகட்டங்களாக பிரித்தால் யுத்தத்திற்கு பின், யுத்தத்திற்கு முன் என இரண்டு காலகட்டங்களில் நோக்கமுடியும். அவை இரண்டிலும் பிரிக்க முடியாதது எம் மக்களின் கண்ணீர். இந் நிலை நீடித்துக் கொண்டே செல்கிறது.

அவற்றை தீர்க்க எமது தமிழகத்தின் மூலமாக கொடுக்கப்படும் செய்தி மத்திய அரசிற்கு சென்று அது இலங்கை அரசாங்கத்திற்கு தமிழரின் தீர்வு தொடர்பாக அழுத்தம் கொடுக்க வேண்டிய தேவையுள்ளது. எமது பிரச்சினையில் இந்தியா தொடர்ந்து எமக்காக குரல் கொடுக்க வேண்டும் என இந்த இடத்தில் நான் தெரிவித்துக் கொள்கின்றேன் என மாவை.சேனாதிராசா மேலும் தெரிவித்தார். (இ)

## பிள்ளையானை சிறையில் சென்று பார்வையிட்டார் நாமல் ராஜபக்ஷ




(ஏறாவூர்)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருக்கும் முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையான்) சந்தித்துள்ளார். நேற்று முன்தினம் 10 மணியளவில் குறித்த சந்திப்பு இடம்பெற்றது. (இ)

# இலங்கை அரசின் சர்வதேச குற்றங்கள் மீது சுதந்திரமான விசாரணைப் பொறிமுறை வேண்டும்

## நாடு கடந்த தமிழீழ அரசு வலியுறுத்து

(நியூயோர்க்)

ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்கு, பதிலளித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், இலங்கையின் சர்வதேச குற்றங்கள் மீது, சுதந்திரமான அனைத்துலக விசாரணைப் பொறிமுறை வேண்டும் என ஐ.நா. பொதுப் பேரவையிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஐ.நா. மனித உரிமைச் சபைக்கு இலங்கை வழங்கியிருந்த வாக்குறுதிகளின் நிலவரத்தை மதிப்பீடு செய்துள்ள மதிப்பீட்டு அட்டையை சுட்டிக்காட்டிய நாடுகடந்த தமிழீழ அரசாங்கம், ஐ.நா. மனித உரிமைச்சபைத் தீர்மானத்தில் ஏற்றுக் கொண்டவாறு, நீதியை வழங்கக் கொடுத்த உறுதிமொழிகளைக் காப்பாற்ற இலங்கை பலமுறை தவறி விட்டது எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை ஓர் ஜனநாயக அரசாகையால், இலங்கைக்குள் தமிழர்களுக்கு நீதி கிடைக்காது. பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தில்தான் நீதி கிடைக்க வாய்ப்புண்டு. இலங்கையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதி மன்றத்தின் பார்வைக்கு அனுப்புமாறு கோரும், 1.7 மில்லியன் மக்களின் கையெழுத்துப் போராட்டத்தையும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் எடுத்துக்காட்டியுள்ளது.

"இலங்கையைப் பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பும்படி இலங்கையின் வட மாகாண சபையும் ஒருமனதாகத் தீர்மானம் இயற்றியது. நாங்கள் முன்மொழியும் தற்சார்பான பொறிமுறை இடைக்காலத்தில் சான்றுகளைத் திரட்டிப் பாதுகாக்க வேண்டும்.

ஏனென்றால் இலங்கையில் சான்றுகள் அழிக்கப்படுகின்றன. சாட்சிகள் அச்சுறுத்தப்படுகின்றார்கள்" என இவ்விடயத்தில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் எடுத்துக்காட்டியுள்ளார்.

தமிழர்களின் மனித உரிமைகளை இலங்கை அரசு தொடர்ந்து மீறி வருவதாகத் தெளிவாக்குகிறது.

அது தொடர்ந்து சித்திரவதையைப் பயன்படுத்துகிறது என்பதையும், உள்நாட்டளவில் இடம்பெயர்ந்த தமிழர்களை மீள் குடியமர்த்தம் செய்யத் தவறியதையும், வேறுபல மோசமான தோல்விகளையும் எடுத்துக்காட்டுகிறது. இவற்றுக்கெல்லாம் ஒருபோதும் யாரும் பொறுப்பாக்கப்படவே இல்லை.

பாதிப்புற்ற தமிழர்கள் நீதியை மேலும் நெருங்கவும், ஐ.நாவின் ஆணையுரிமையையும் நம்பகத்தன்மையையும் விழுமியங்களையும் பாதுகாக்கவும் பன்னாட்டுச் சமுதாயத்துக்கு கடப்பாடு உண்டெனவும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், குறைந்தது ஐ.நாவின் மூன்று அறிக்கைகளில் ஆவணப்படுத்தியுள்ளவாறு, இலங்கை அரசு புரிந்த மனிதநேயச் சட்ட மீறல்களையும், மானிட விரோதக் குற்றங்களையும், புலனாய்வு செய்யவும் ஆவணப்படுத்தவும் அவை மீது வழக்குத் தொடுக்கவும் நடுநிலையான, சுதந்திரமான அனைத்துலக பொறிமுறை ஒன்றைத் தோற்றுவிக்குமாறு, ஐ.நா பொதுமன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. (இ-9)

# தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை அமைதித் தீர்வுக்கான வாசலைத் திறக்கும்

## முன்னாள் எம்.பி.சந்திரகுமார் தெரிவிப்பு

(பரந்தன்)

அரசியல் கைதிகளை சிறையில் வைத்துக்கொண்டு அரசியல் தீர்வை எட்டவே முடியாது, மண்டேலாவின் விடுதலையே ஆபிரிக்காவில் நல்லிணக்கம் ஏற்பட வழிவகுத்தது. எனவே தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையே அரசியல் தீர்வுக்கான வாசலை திறக்கும் என் சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார். அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் அரசியல் கைதிகளின் வழக்கு விசாரணைகளும் விடுதலையும் காலவரையறையற்று நீடித்துக் கொண்டிருக்கிறது. இதனால் அரசியல் கைதிகளின் அடிப்படை உரிமைகளும் அவர்களுடைய குடும்பத்தினரின் வாழ்வும் மோசமாகச் சிதைக்கப்படுகின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அரசாங்கம் நீக்காமல் நீடிப்பது மக்களின் மீதும் சுதந்திரமான அரசியல் உணர்வின் மீதும் விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகும். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் அரசியல் கைதிகள் நீதியற்ற முறையில் அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இது வெளிப்படையான நீதிமறுப்புச் செயற்பாடாகும்.

இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படாதிருப்பது கண்டனத்துக்குரியது. கவலைக்குரியது என்று சர்வதேச சமூகம் பகிரங்கமாகவே தெரிவித்திருக்கும் சூழலில் அதைத் தொடரும் அரசாங்கத்தின் நடவடிக்கை கண்டிக்கப்பட வேண்டியது.

ஆகவே, பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி, அரசியல் கைதிகளின் மீதான நீதி மறுப்பும் ஒடுக்கு முறையும் தொடர்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அரசியல் கைதிகளின் விடுதலையும் காணாமலாக்கப்பட்டோரின் விவகாரத்துக்கான தீர்வும் முக்கியமானவை. ஆனால், அரசாங்கம் இதிலே பொறுப்பாக நடந்து கொள்ளாமல் காலத்தை இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது. இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு தென்னாபிரிக்க முன்னுதாரணங்களை வலியுறுத்தும் அரசாங்கம், அங்கே நெல்சன் மண்டேலாவின் விடுதலையே அதைச் சாத்தியப்படுத்துவதற்கான தொடக்கப்புள்ளியாக இருந்தது என்பதை மறந்து விட்டது.

மண்டேலாவின் சிறைக்கதவுகள் திறக்கப்பட்ட போதே தென்னாபிரிக்காவின் தீர்வு சாத்தியமானது என்ற உண்மைக்கு அமைய தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையே இலங்கையின் அமைதித்தீர்வுக்கான வாசலைத் திறக்கும் எனப் புரிந்து கொண்டு இவர்களுடைய விடுதலையைச் சாத்தியப்படுத்த வேண்டும்.

ஆகவே அமைதித் தீர்விற்கான சாவியாக அரசியல் கைதிகளின் விடுதலை அமையட்டும். இல்லையெனில் மக்கள் போராட்டத்தின் மூலம் விடுதலைக் கதவுகள் திறக்கப்படும். (2-312)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 90 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 120 | 80 | 80 |
| தக்காளி | 30 | 60 | 30 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 |
| கோவா | 150 | 80 | 60 | 100 |
| கரட் | 140 | 200 | 140 | 140 |
| பூசணி | 40 | 60 | 35 | 40 |
| புடோல் | 80 | 80 | 30 | 50 |
| வாழைக்காய் | 80 | 100 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 120 | 100 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 140 | 150 | 130 | 120 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 40 | 40 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 50 | — |
| பயற்றங்காய் | 100 | 160 | 70 | 100 |
| லீக்ஸ் | 80 | 100 | 70 | 90 |
| பீற்றூட் | 50 | 80 | 60 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 80 | 100 |
| முருங்கைக்காய் | 150 | 80 | 80 | 100 |
| போஞ்சி | 150 | 160 | 120 | 100 |
| கத்தரிதம்புள்ள | 60 | 100 | 60 | — |
| கீரை - 1பிடி | 50 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 200 | 300 | 180 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 30-50 | 45 | 55 |
| இராசவள்ளி | 140 | 200 | 110 | 160 |
| வெங்காயப்பூ | 120 | 160 | 90 | — |
| முள்ளங்கி | 50 | 80 | 30 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 30 | 20 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 100 | 120 | — |

# அரியாலை மக்களின்
# சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா-2019
# விளையாட்டு மற்றும் கலைப் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரல்

அரியாலையூர் பெருமக்களினால் 1919 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு சித்திரை தமிழ் புதுவருட தினத்தன்றும் கொண்டாடப்பட்டு வரும் தமிழர் கலை, கலாசார, பண்பாட்டை பறைசாற்றும் சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவானது 2019 சித்திரை புதுவருட தினத்தன்று நூற்றாண்டுப் பெருவிழாவாக வெகு கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது. நூற்றாண்டு விழாவின் இறுதி கலை, கலாசார, விளையாட்டு நிகழ்வுகள் 01.04.2018 இலிருந்து 14.04.2018 வரை அரியாலையூரின் முன்னணி சனசமூக நிலையங்களின் விளையாட்டு மைதானங்களிலும், கலை அரங்குகளிலும் நடைபெறும்.

இந் நூற்றாண்டு விழாவையொட்டி முன்னணி விளையாட்டு மற்றும் கலைப்போட்டிகள் உள்ளூர், வெளியூர் மற்றும் சர்வதேச ரீதியாக போட்டிகள் இவ்வருடம் 2018 ஒக்டோபர் மாதத்தில் இருந்து ஆரம்பமாக உள்ளன.

விளையாட்டு அணிகளும், கலைக் குழுக்களும் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப் படிவங்களை விழாச் செயலாளரிடம் பெற்று விண்ணப்பிக்குமாறு வேண்டி நிற்கின்றோம்.

முன்னோடி கலை விளையாட்டுப் போட்டிகளின் விபரங்களும் திகதிகளும்

**வடமாகாண மற்றும் சர்வதேச ரீதியான முன்னோடி விளையாட்டுப் போட்டிகளின் விபரங்கள்**

| இல | போட்டிகள் | எல்லை | போட்டி ஆரம்பிக்க உத்தேசித்துள்ள மாதம் | போட்டி நடாத்த உத்தேசித்துள்ள இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | 3ம் இடம் | ஆறுதல் பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | மாட்டு வண்டில் சவாரி 3பிரிவு | வடமாகாணம் | 06.04.2019 | மத்திய வி.கழக மைதானம் / நாவலடி வயல் வெளி | 30,000 | 20,000 | 10,000 | 05 @ 3,000 |
| 2 | 25கி.மீ வீதியோட்டம்- ஆண்கள் | வடமாகாணம் | 13.04.2019 காலை 6.00 மணி | ஆரம்பம் அரியாலை சனசமூக நிலையம் முடிவு மத்திய வி.கழகம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | 15 @ 2,000 |
| 3 | 15 கி.மீ வீதியோட்டம்- பெண்கள் | வடமாகாணம் | | | 15,000.00 | 10,000.00 | 8,000.00 | 15 @ 2,000 |
| 4 | 50 கி.மீ சைக்கிள் ஓட்டம் - ஆண்கள் | வடமாகாணம் | 13.04.2019 காலை 7.00 மணி | ஆரம்பம் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் முடிவு அரியாலை சனசமூக நிலையம் | 50,000.00 | 30,000.00 | 20,000.00 | 15 @ 3,000 |
| 5 | 25 கி.மீ சைக்கிள் ஓட்டம் - பெண்கள் | வடமாகாணம் | | | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | 15 @ 2,000 |
| 6 | அஞ்சலோட்ட கண்காட்சி போட்டிகள் | பாடசாலை மட்டம் 04 வயது பிரிவு வடமாகாணம் | 10.04.2019 | துரையப்பா விளையாட்டு மைதானம் | 04 வயது பிரிவுகளுக்கிடையில் போட்டிகள் நடாத்தப்படும். நடைபெறும் ஒவ்வொரு போட்டிகளுக்கும் முதல் 03 இடங்களை எடுக்கும் மாணவர்களுக்கு வெற்றிப் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொரு போட்டிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டு அதிக புள்ளிகளை எடுக்கும் முதல் 03 பாடசாலைகளுக்கு ரூபா 50,000.00, 30,000.00, 20,000.00 பணப்பரிசில்களுடன் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும் | | | |
| 7 | துடுப்பாட்டம் (வன்பந்து) (T20) | வடமாகாணம் | ஐப்பசி. இறுதிப்போட்டி - 07.04.2019 | யாழ்.மத்திய கல்லூரி சென் பற்றிக்ஸ் கல்லூரி | 50,000.00 | 30,000.00 | 20,000.00 | Man of the match -3,000 Best Batsman - 3,000 Best bowler - 3,000 Best Fielder -3,000 Man of the Series -5,000 |
| 8 | துடுப்பாட்டம் (மென்பந்து)07 பேர் 05 ஓவர் | வடமாகாணம் | ஐப்பசி. இறுதிப்போட்டி - சித்திரை | அரியாலை சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Batsman - 2,000 Best bowler - 2,000 Best Fielder -2,000 Man of the Series -3,000 |
| 9 | கரப்பந்தாட்டம் செற்றப் | தேசிய ரீதியில் | தை -2019 | அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் | 75,000.00 | 50,000.00 | 30,000.00 | Man of the match -2,000 Best Setter - 2,000 Best Middle attacker -2,000 Man of the Series -3,000 |
| 10 | கரப்பந்தாட்டம் செற்றப் | வடமாகாணம் | தை -2019 | அரியாலை திருமகள் சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Setter - 2,000 Best Middle attacker -2,000 Man of the Series -3,000 |
| 11 | கரப்பந்தாட்டம் ஓவர் கேம் | வடமாகாணம் | தை -2019 | அரியாலை சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -3,000 Man of the Series -4,000 |
| 12 | கடற்கரை கரப்பந்தாட்டம் Beach volleyball | வடமாகாணம் | தை -2019 | அரியலை கிழக்கு கடற்கரை | 20,000.00 | 15,000.00 | 10,000.00 | Man of the match -3,000 Man of the Series -4,000 |
| 13 | உதைபந்தாட்டம் | வடமாகாணம் | 2019ன் முற்பகுதி | மத்திய வி.கழக மைதானம் | 50,000.00 | 30,000.00 | 20,000.00 | Man of the match -3,000 Man of the Series -5,000 |
| 14 | வெளிநாட்டு உறவுகளுட னான சிநேகபூர்வமானது உதைபந்தாட்டம் | சர்வதேச ரீதியான | சித்திரை 2019 | அரியாலை சனசமூக நிலையம் | 7,000.00 | 5,000.00 | 3,000.00 | Man of the match -2,000 Man of the Series -2,000 |
| 15 | வலைப்பந்து | வெளியூர் | தை -2019 | அரியாலை சனசமூக நிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Shoter - 2,000 Best Defender - 2,000 Man of the Series -3,000 |
| 16 | கபடி -ஆண்கள் | வடமாகாணம் | மார்கழி 2018 | அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Driver - 2,000 Best Defender - 2,000 Man of the Series -3,000 |
| 17 | கிளித்தட்டு- ஆண்கள் | வெளியூர் | கார்த்திகை 2018 | அரியாலை சரஸ்வதி சனசமூகநிலையம் | 30,000.00 | 20,000.00 | 10,000.00 | Man of the match -2,000 Best Driver - 2,000 Best Defender - 2,000 Man of the Series -3,000 |
| 18 | கயிறு இழுத்தல் -ஆண்கள் | வடமாகாணம் | பங்குனி 2019 | மத்திய வி.கழக மைதானம் | 20,000.00 | 15,000.00 | 10,000.00 | 4th -5,000.00 |
| 19 | கயிறு இழுத்தல்- பெண்கள் | வடமாகாணம் | பங்குனி 2019 | மத்திய வி.கழக மைதானம் | 20,000.00 | 15,000.00 | 10,000.00 | 4th -5,000.00 |
| 20 | போர்த் தேங்காய் அடித்தல்- ஆண்கள் | வடமாகாணம் | பங்குனி 2019 | பிள்ளையார் கோவில் முன்றல் | 10,000.00 | 8,000.00 | 5,000.00 | 10 @ 500 |
| 21 | கிடுகு பின்னுதல்- பெண்கள் | பொது | பங்குனி 2019 | நாவலடி சனசமூக நிலையம் | 10,000.00 | | 5,000.00 | 10 @ 500 |
| 22 | பூப்பந்தாட்டம் - ஆண்கள் | வடமாகாணம் | கார்த்திகை 2018 | அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் | அணி ரீதியான போட்டியாக நடைபெறும். 03 தனி ஆட்டம் 02 குழு ஆட்டம் நடைபெறும். வெற்றிபெறும் முதல் 03 அணிக்கு தலா 25,000.00, 15,000.00, 10,000.00 என பணப்பரிசுகளும் வெற்றிக் கிண்ணம், வீரர்களுக்கான பதக்கம், சான்றிதழ்கள் வழங்கப்படும். | | | |
| 23 | பூப்பந்தாட்டம் - பெண்கள் | வடமாகாணம் | கார்த்திகை 2018 | | அணி ரீதியான போட்டியாக நடைபெறும். 03 தனி ஆட்டம் 02 குழு ஆட்டம் நடைபெறும். வெற்றிபெறும் முதல் 03 அணிக்கு தலா 25,000.00, 15,000.00, 10,000.00 என பணப்பரிசுகளும் வெற்றிக் கிண்ணம், வீரர்களுக்கான பதக்கம், சான்றிதழ்கள் வழங்கப்படும். | | | |
| 24 | கராத்தே போட்டி | வடமாகாணம் | பங்குனி | பிரப்பங்குளம் கல்யாண மண்டபம் | 04 வயது பிரிவுகளுக்கிடையில் போட்டிகள் நடாத்தப்படும். நடைபெறும் ஒவ்வொரு போட்டிகளுக்கும் முதல் 03 இடங்களை எடுக்கும் மாணவர்களுக்கு வெற்றிப் பதக்கம் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அத்துடன் ஒவ்வொரு போட்டிகளுக்கும் புள்ளிகள் வழங்கப்பட்டு அதிக புள்ளிகளை எடுக்கும் முதல் 03 கழகங்களுக்கு ரூபா 20,000.00, 15,000.00, 10,000.00 பணப்பரிசில்களுடன் வெற்றிக் கேடயமும் வழங்கப்படும் | | | |

**வடமாகாண மற்றும் சர்வதேச ரீதியான முன்னோடி கலை போட்டிகளின் விபரங்கள்**

**01.திட்டமிடப்பட்டுள்ள சர்வதேச ரீதியான போட்டிகள். இவை அனைத்தும் திறந்த போட்டிகள். முடிவுத் திகதி 31.12.2018**

**1.சிறுகதை**

தலைப்பு– 1) விழுதுகள் 2) முதுசம் 3) சுதேசியம் 4) தாய் உள்ளம் 5) பொன் செய்யும் மருந்து

$A_4$ தாளில் 12 அளவிலான (font size 12) கணனியில் வரி இடைவெளி (line spacing 1.5) 750-1500 வரையான சொற்களுக்குள் அமைய வேண்டும்

1 ஆம் பரிசு ரூ.30,000, 2 ஆம் பரிசு ரூ.20,000, 3 ஆம் பரிசு ரூ. 10,000.

**2.கவிதை**

தலைப்பு–

- சுதேசிய உணர்வு, தாய் நாடு, தாய்மை, நல்ல குடும்ப உறவு, இயற்கை, எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் போன்ற கருத்துக்களைப் பிரதிபலிக்கக் கூடிய கவிதை.

$A_4$ தாளில் 12 அளவிலான (font size 12) கணனியில் வரி இடைவெளி (line spacing 1.5) 75-100 வரையான வரிகள்

1 ஆம் பரிசு ரூ.30,000, 2 ஆம் பரிசு ரூ.20,000, 3 ஆம் பரிசு ரூ.10,000.

- மரபுக் கவிதை/ புதுக்கதையாக இருத்தல் வேண்டும்
- மரபுக்கவிதை மரபு வரம்பில் இருத்தல் வேண்டும்.

அதிகளவு புதுக்கவிதை மற்றும் மரபுக்கவிதை போட்டியாளர்களால் அனுப்பப்படுமாயின் இரண்டு கவிதைகளுக்கும் தனித் தனி பரிசில்கள் வழங்கப்படும். ஒருவர் மரபுக் கவிதை அல்லது புதுக் கவிதை ஏதாவது ஒன்றினையே அனுப்ப முடியும்.

- கவிதை, சிறுகதைகள் சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும்.
- ஏற்கனவே பிரசுரிக்கப்பட்டு அச்சுவடிவில் வெளிவந்த அல்லது பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளிவந்த கதைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**02.வடமாகாண ரீதியிலான திறந்த போட்டிகள். முடிவுத் திகதி 31.12.2018**

➢ நாடகப் போட்டி

அ. சமூகநாடகம் ஆ. அரசநாடகம் இ. இசைநாடகம். ஈ.நாட்டியி நாடகம் (இவை வெவ்வேறாக கணிக்கப்படும். நாடகப் பிரதியும் அனுப்பப்படல் வேண்டும்)

1ம் பரிசு ரூ.50,000, 2ம் பரிசு ரூ.30,000,
3ம் பரிசு ரூ. 20,000.

➢ குறும்படம்

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய சமகால நிகழ்வுகளை பிரதிபலிப்பாக இருக்கவேண்டும். 20 நிமிடங்களுக்கும் 60 நிமிடங்களுக்கும் இடைப்பட்டதாக அமைதல் வேண்டும்.

1ம் பரிசு ரூ.100,000, 2ம் பரிசு ரூ.50,000,
3ம் பரிசு ரூ. 30,000.

➢ புகைப்படப் போட்டி

இயற்கை காட்சிகள், வறுமை, ஒற்றுமை இவற்றில் ஒன்றை பிரதிபலிப்பாக இருக்க வேண்டும்.

1ம் பரிசு ரூ.20,000, 2ம் பரிசு ரூ.10,000,
3ம் பரிசு ரூ. 5,000.

**03.புலம்பெயர் உறவுகளுக்கிடையேயான ஓவியப் போட்டி**

முடிவுத் திகதி 31.12.2018

சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய அண்மைக்காலப் பிரதிபலிப்பாக இருக்கவேண்டும்.

1ம் பரிசு ரூ.20,000, 2ம் பரிசு ரூ.10,000, 3ம் பரிசு ரூ. 5,000.

**04. வடமாகாண ரீதியான Super Singer VII**

1ம் பரிசு ரூ.50,000, 2ம் பரிசு ரூ.30,000, 3ம் பரிசு ரூ. 20,000. தலா 10,000 ரூபா படி 2 ஆறுதல் பரிசுகள்.

**தொடர்புகளுக்கு**

கௌரவ செயலாளர் வி.சுதாகர் - 077 711 0972
விளையாட்டு தலைவர் திரு.ந.சுதேஸ்குமார் – 077 617 6988
கலைச் செயலர்ளர் திரு.கு.பிரதீபன் - 077 236 7527
பொதுத் தொடர்பாடல் -ஜெ.ஜசிந்தன் - 077 654 4595

**பங்குபற்ற விரும்பும் போட்டியாளர்கள் போட்டி விபரத்துடன் அடையாள அட்டை இலக்கத்துடன் SMS மூலம் பதிவுகளை மேற்கொள்ளவும்.**

**. கலை நிகழ்வுகள்- 077 236 7527**
**. விளையாட்டு- 077 617 6988**

வழமையான உள்ளூர் கலை விளையாட்டுப் போட்டிகள் வழமைபோல் நடைபெறும்.

**நிர்வாகம்**
**அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட நூற்றாண்டு விழா**

(சி-4004)

# இலங்கையில் ஜனநாயகத்தை பலப்படுத்துவதில் முன்னேற்றம்

## கொமன்வெல்த் செயலாளர் மைத்திரியிடம் தெரிவிப்பு

(நியூயோர்க்)

இலங்கையில் ஜனநாயகத்தை பலப்படுத்துவதிலும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதிலும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளதாக கொமன்வெல்த் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லண்ட் தெரிவித்துள்ளார்.



நியூயோர்க்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் கொமன்வெல்த் செயலாளர் நாயகம் பற்றீசியா ஸ்கொட்லண்டைச் சந்தித்தார்.

இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில்; கடந்த மூன்றரை ஆண்டுகளில் நல்லிணக்கம், ஜனநாயகத்தைப் பலப்படுத்துதல், மனித உரிமைகளை மீள நிலைப்படுத்தல் போன்றவற்றில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி மைத்திரி எடுத்துக் கூறினார்.

அத்துடன் கொமன்வெல்த் செயலாளர் நாயகத்தை மீண்டும் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளுமாறும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், இலங்கையின் அபிவிருத்தி, நல்லிணக்கம் ஆகியவற்றுக்கு கொமன்வெல்த் தொடர்ந்து ஆதரவு அளிக்கும் என்றும் பற்றீசியா ஸ்கொட்லண்ட் தெரிவித்துள்ளார். (இ)

## ஒலிபெருக்கி சாதனங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம் தனது 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின் மூலம் அரியாலை நாவலடி, கோட்டை விநாயகர் வீதி அருள்மிகு ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்திற்கு 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களைக் கொள்வனவு செய்து வழங்கினார்.

மேற்படி ஆலய நிர்வாகத்தினர், பொதுமக்கள் அனைவரினதும் கோரிக்கைக்கு அமைவாக நேரில் சென்று பார்வையிட்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் என். விந்தன் கனகரட்ணம், ஒலிபெருக்கி சாதனங்களைக் கொள்வனவு செய்து, கடந்த புதன்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்லூர் பிரதேச சபை உப தவிசாளர் ஆர். ஜெயகரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் மதுசுதன் ஆகியோர் ஊடாகவழங்கி வைத்தார்.

இந் நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலளர் திருமதி. அன்ரன் யோகநாயகம் எழிலரசி, நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் விஜிதா ஆகியோரும் கலந்து கொண்டனர். (இ-7)

## காமினி செனரத் உள்ளிட்டோரின் வழக்கு தினம் தோறும் விசாரணைக்கு

(கொழும்பு)

ஜனாதிபதி செயலகத்தின் முன்னாள் பிரதானி காமினி செனரத் உள்ளிட்ட பிரதிவாதிகளின் வழக்கை ஒக்டோபர் 30 ஆம் திகதியில் இருந்து தினம் தோறும் தொடர் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள விசேட மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான மனு சம்பத் அபேகோன் (தலைவர்), சம்பத் விஜயரத்ன மற்றும் சம்பா ஜானகி ராஜரத்ன ஆகிய நீதிபதிகள் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்ட போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி, முதல் 2015 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் திகதி வரையான காலத்தில் லிட்ரோ ஹாஸ் நிறுவனத்திற்குச் சொந்தமான 500 மில்லியன் ரூபா நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதால் பொதுச் சொத்துக்கள் சட்டம் மற்றும் குற்றவியல் சட்டத்தின் கீழ் பிரதிவாதிகள் குற்றமிழைத்துள்ளதாக' குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுடன் தொடர்புடைய ஆவணங்கள் வழங்கப்பட்ட போதிலும் குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள சில ஆவணங்கள் இதுவரை வழங்கப்படவில்லை என்று பிரதிவாதிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி அலி சப்ரி நீதிமன்றில் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த அரசதரப்பு பிரதி சொலிசிஸ்டர் ஜெனரல், கேட்கும் ஆவணங்களை சில தினங்களில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார்.

அதன்படி அந்த ஆவணங்கள் கிடைக்கப்பெற்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக வழக்கை மீண்டும் ஒக்டோபர் 08 ஆம் திகதி அழைப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் இந்த வழக்கு ஒக்டோபர் 29 ஆம் திகதியில் இருந்து தொடர் விசாரணையாக இடம்பெறும் என்று முன்னதாக உத்தரவிடப்பட்டிருந்த போதிலும் உச்ச நீதிமன்றில் மற்றொரு முக்கிய வழக்கு இருப்பதால் இந்த வழக்கை 30 ஆம் திகதியில் இருந்து ஆரம்பிக்குமாறு பிரதிவாதியின் சட்டத்தரணி அலி சப்ரி விடுத்த கோரிக்கையையும் நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. (இ-7)

# மாகாண சபைத் தேர்தல் தாமதமாவதற்கு என்மீது குற்றம் சுமத்துவது அர்த்தமற்றது

## அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவிப்பு



(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தலைத் தாமதப்படுத்த வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது. மாகாண சபைத் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய அறிக்கையிலுள்ள குறைபாடுகளால், அவ்வறிக்கை ,அங்கீகரிக்கப்படாமையே இத்தாமதத்திற்குக் காரணமாகும்.

இந்தத் தாமதத்தை, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், என் மீது சுமத்துவது அர்த்தமற்றதாகும் என, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

அடுத்த வருடம் இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி மன்றக் கருத்தரங்கு, 2019 - தொடர்பாக, விளையாட்டுத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலைத் தாமதியாது உடனடியாகவே நடத்தும் பொறுப்பு, இந்த விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரான என்னிடமில்லை, இந்தப் பொறுப்பை, அதி உயர் பாராளுமன்றமே பொறுப்பேற்க வேண்டும். அதை விடுத்து, என் மீது குற்றம் சுமத்துவது அர்த்தமற்றதாகும்.

பாராளுமன்றத்தில் நிராகரிக்கப்பட்ட மாகாண சபைத் தொகுதி எல்லை நிர்ணய அறிக்கை, தற் போது மீளாய்வுக் குழுவினால் மீளாய்வு செய்யப்பட்டு வருகிறது.

அந்த அறிக்கையில் திருத்தங்கள் ஏதும் செய்யப்பட வேண்டுமென்றால், அது பூர்த்தி செய்யப்பட்டு, எல்லை மீள் நிர்ணயம் செய்யப்பட்டு அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக, சபாநாயகரினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில், குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த எல்லை நிர்ணய மீளாய்வுக் குழுவின் அறிக்கை, ஜனாதிபதியினால் வர்த்தமானியில் வெளியிடப்படும். அதன் பின்பு, அது திருத்தச் சட்டமாக, பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும், மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும்.

பொதுநலவாய நாடுகளின் உள்ளூராட்சி மன்றக் கருத்தரங்கு, எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை, கொழும்பு - பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# அடுத்த வருடத்திற்கான பாடப் புத்தகங்களை விநியோகிக்க நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கான பாடசாலை பாடப் புத்தகங்களை மாவட்ட மற்றும் மாகாண மட்டத்தில் விநியோகிக்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக பாடப்புத்தக பிரசுர ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இம்முறை 414 வகை புத்தங்கள் அச்சிடப்பட்டுள்ளன. மொத்தமாக அச்சிடப்பட்ட புத்தகப் பிரதிகளின் எண்ணிக்கை மூன்று கோடி 90 இலட்சமாகும்.

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தர மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கென மேலதிக பாடப் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (இ)

# மகிந்த மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறுவது சாத்தியமில்லை

## ஐ.தே.க.எம்.பி. ஹிருணிகா தெரிவிப்பு



(கொழும்பு)

குற்றவாளிகளையும்மோசடியாளர்களையும் தன்வசம் வைத்துக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஆட்சிப் பீடம் ஏறும் முயற்சிகளை மேற்கொள்வது சாத்தியமற்ற விடயம் என ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். மகிந்த ராஜபக்ஷ கடந்த காலங்களில் குற்றவாளிகளை தன்வசம் வைத்துக் கொண்டதன் காரணமாகவே பாரிய விளைவுகளை சந்தித்தார்.

தற்போதும் அதன் தொடர்ச்சியே இடம்பெறுகின்றது. தேசிய அரசாங்கத்தை பயனற்றது என்று தூற்றும் எவ்வித தகுதிகளும் எதிர்த் தரப்பினருக்கு கிடையாது எனவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ)

# தென்மராட்சியை இரண்டாகப் பிரிக்க பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பிப்பு

## புண்ணியத்தைத் தேடிக் கொள்ளவே யாழ்.வந்தேன் அமைச்சர் வஜிர சாவகச்சேரியில் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேசத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டி இருக்கிறது. பாராளுமன்றத்தில் அதற்குரிய அறிக்கையை சமர்ப்பித்துள்ளோம் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற உத்தியோகபூர்வப் பணி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் 84ஆவது உத்தியோகபூர்வப் பணி தென்மராட்சி பிரதேசத்தில் இடம் பெற்றது. யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகள் காணப்படுகின்றன.

அதில் 8 பிரதேச செயலர் பிரிவுகளில் உத்தியோக பூர்வப் பணிகள் இடம்பெற்று விட்டன. யாழில் இதுவரை உத்தியோகபூர்வப் பணியின் போது 23 ஆயிரம் பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் 18 ஆயிரம் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. இதற்காக மாவட்ட செயலர், உத்தியோகத்தர்களுக்கு நன்றி. தென்மராட்சிப் பிரதேசத்திலும் குறைபாடுகள் காணப்படுவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்தக் குறைபாடுகளையும் தீர்ப்போம்.

யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரி பிரதேச செயலகம் 60 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைக் கொண்டது. அதில் 72 ஆயிரம் அங்கத்தவர்களும் 23 ஆயிரம் குடும்பங்களும் உள்ளன. கூடுதலான பிரச்சினைகள், கூடுதலான தேவைகள் உள்ள பிரதேசமாக தென்மராட்சி காணப்படுகிறது. இந்தப் பிரதேசத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்க வேண்டியுள்ளது. ஏற்கனவே இதுபற்றி திருமதி விஜயகலா மகேஸ்வரன் எம்.பி. தெரிவித்துள்ளார்.



இப் பிரதேசத்தை இரண்டாகப் பிரிப்பது தொடர்பான அறிக்கையை பாராளுமன்றில் சமர்ப்பித்துள்ளோம். இலங்கையில் இன்னும் 20மேலதிக பிரதேச செயலகங்கள் நிர்மாணிக்க வேண்டிய தேவையுள்ளது.

தென்மராட்சியின் கொடிகாமம் பகுதியில் கூட ஒரு பிரதேச செயலகத்தை நிறுவ முடியும். இதனூடாக மக்கள் பிரச்சினைகளுக்கு சுலபமாக தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியும்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை அமைச்சரவையில் தென்மராட்சியை இரண்டாகப் பிரிக்கின்ற தீர்மானம் தொடர்பில் தெரியப்படுத்த முடியும்.

இந்த உத்தியோகபூர்வப் பணி வடமாகாணத்திலேயே அதிகளவில் இடம் பெற்றுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தில் இந் நிகழ்வு நடைபெற்று பூர்த்தியாகிவிட்டது. அந்தப்பகுதி மக்கள் போதைப்பொருட்களை கட்டுப்படுத்துவதற்காக பொலிஸ் நிலையங்களை நிறுவச் சொல்லிக் கேட்டிருந்தனர். இப்போது வடக்கிற்குத் தேவை யுத்த காலத்தில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் அலலர். பொலிஸ் திணைக்களங்கள் தான் அவர்களுக்குத் தேவை. அத்துடன் அடையாள அட்டைகளை இந்த உத்தியோகபூர்வப் பணியில் விநியோகிக்கும் போது இலவசமாக வழங்குமாறு கூறியிருந்தேன். யாழில் 8 பிரதேச செயலர் பிரிவிலும் பணம் இல்லாத சந்தர்ப்பத்தில் இலவசமாகப் பிரதேச செயலாளர் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி பலனைப் பெறுமாறு கூறியிருந்தேன்.

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் இந்தச் சேவைகளை நிறைவு செய்துள்ளோம். முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் அடையாள அட்டைகளை இலவசமாக விநியோகித்திருந்தோம். யாழில் 8 பிரதேச அலுவலர் பிரிவுகளிலும் வயது முதிர்ந்த பலர் விவாகப் பதிவு மேற்கொள்ளாமல் இந்த சேவையின் ஊடாக விவாகப் பதிவினை மேற்கொண்டிருந்தனர். யுத்தம் நிறைவு பெற்று 10 வருடங்கள் ஆகின்றன. இதன் காரணமாக விசேட அவதானத்தைச் செலுத்த வேண்டும் என ஜனாதிபதி, பிரதமர் அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளனர்.

இங்கு காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர். நான் புண்ணியத்தைத் தேடிக் கொள்ளவே இங்கு வந்தேன்.

இங்கு 15 பிரதேச செயலர் பிரிவிலும் 2400 பேர் விசேட தேவையுடையவர்களாக உள்ளனர். சிலரது காதுகள் குண்டுத் தாக்குதலால் செயலிழந்துள்ளன. சிலர் ஒரு கை, காலையும் சிலர் இரு கை காலையும் இழந்த நிலையில் காணப்படுகின்றனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை மாவட்டங்களில் 9800 பேர் ஊனமுற்றவர்களாக உள்ளனர். எதிர்வரும் 12ஆம் மாதம் 31 ஆம் திகதி அவர்களுக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்டு தேவைகள் நிறைவேற்றப்படும். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்த்தப்பட்டிருக்கும். இது உங்களுக்கு மட்டும் ஏற்பட்ட நிலை அல்ல.

பொலிஸார் உள்ளிட்ட முப்படையினர் முப்பதாயிரம் பேர் அங்கவீனமானவர்களாக உள்ளனர். இந்த நிலைமைகளை சீர்செய்யப் பார்ப்பது தான் நிறைவான அரசின் கடமையாக இருக்கும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ -30)

# நூல் வெளியீட்டு விழா

பா.அகிலனின் "அம்மை" கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம் பெறும். (இ)

# சிறுவர் தின விழா நாளை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி சிறுவர் பாராளுமன்ற மாணவ நடத்தை விருத்தி மற்றும் மாணவர் நலன்புரி அமைச்சினால் சிறுவர் தின நிகழ்வு நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கல்லூரி பிரதான மண்டபத்தில் அதிபர் செ.பேரின்பநாதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி யோ.சுரேஸ்குமாரும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் து.ஜெயதேவனும் கலந்து கொள்வர். (இ-29)

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீர்வேலி. சி.சி.த.க பாடசாலையின் சிறுவர்தின விழா நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் தி.ரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் த.கணேசநாதன், சிறப்பு விருந்தினரர்களாக ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன், ஓய்வுநிலை விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி ந.சிவசீலன், கரந்தன் கருணாலய முகாமையாளர் ஐ.சிவராஜா, வலி.கிழக்குப் பிரதேசசபை உறுப்பினர், பழைய மாணவர் இ.செல்வராஜா ஆகியோரும் கலந்து கொள்வர். (இ)

# 88 ஆவது ஆண்டு விழாவும் புதிய கலையரங்கு திறப்பும்

(யாழ்ப்பாணம்)

யாழ் . சுண் டிக் குளி சனசமூக நிலையத்தின் 88 ஆவது ஆண்டு விழாவும் புதிய கலையரங்கு திறப்பு விழாவும் இன்று 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியளவில் தலைவர் சி.சிறிசுதாகரன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் இ.ஆனல்ட், கௌரவ விருந்தினர்களாக, அருட்தந்தை எட்மன் மைக்கல், சுண்டிக்குளி. குரு முதல்வர் வணபிதா சாமுவேல் ஜெ.பொன்னையா ஆகியோர் கலந்துகொள்வர். (இ)

# சாவகச்சேரி சந்தையில் உழவர் சந்தை வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொதுச் சந்தையில் உழவர் சந்தையை அமைத்து உற்பத்தியாளர்களை ஊக்குவிக்க வேண்டும் என நகரசபை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில் உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க உழவர் சந்தை அவசியமானது.

உள்ளூர் உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதில் எமது பங்களிப்பும் உள்ளது. உற்பத்தியாளர்களுக்கு கை கொடுத்து அவர்களை ஊக்குவித்து உற்பத்தியைப் பெருக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டனர்.

கடந்த காலத்தில் சாவகச்சேரி பொதுச் சந்தையில் உழவர் சந்தை காணப்பட்ட போதிலும் காலப்போக்கில் அது இல்லாமல் போனமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# தரையா? கடலா? என்பதை உடன் தெளிவுபடுத்துங்கள்

## தவிசாளரிடம் தர்சன் கோரிக்கை

(சாவகச்சேரி)

தனது வட்டாரத்தினை தேர்தல் திணைக்களத்திடம் கோரி தெளிவுபடுத்தித் தருமாறு சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் தர்சன் சாவகச்சேரி நகரசபை தவிசாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் காலத்தில் சாவகச்சேரி நகரசபையின் கோவிற்குடியிருப்புப் பகுதியிலுள்ள தரை, கரை வட்டாரப் பதிவுகளில் தவறுகள் ஏற்பட்டு அது பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் வாக்காளர்கள், வேட்பாளர்கள் அனைவருமே குழம்பியுள்ளனர். எனக்குரிய வட்டாரம் கடலா? அல்லது தரையா? எனத் தெளிவுபடுத்திக் கூறினால் தான் அபிவிருத்திகளை நான் முன்னெடுக்க முடியும் என கோவிற்குடியிருப்பின் தரை வட்டாரத்தில் போட்டியிட்டு கடல் வட்டார மக்களின் வாக்குகளால் வெற்றியீட்டிய நகரசபை உறுப்பினர் தர்சன் கேட்டுக் கொண்டுள்ளார். பிரதேச செயலகம் மற்றும் தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசித்து இதற்கொரு முடிவுக்கு வர முயற்சி எடுப்பதாக தவிசாளர் சிவமங்கை தெரிவித்துள்ளார். (இ-30)

# தேசிய கல்வியியற் கல்லூரியில் சர்வதேச முதியோர் தின விழா

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சர்வதேச சிறுவர், முதியோர் தினவிழா நாளை முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் பீடாதிபதி கலாநிதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ஓய்வுநிலை அதிபர் ஆ.சிறீஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்வார். (இ)

# பகவத்கீதை விளக்கவுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.சின்மயா மிஷன் சுவாமி சிதாகாசனந்தாவால் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில், ஸ்ரீமத் பகவத்கீதை விளக்கவுரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை யாழ்.சின்மயா மிஷன், இல.9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் முகவரியில் நடைபெற்று வருகின்றது.

இதில் நாளை திங்கட்கிழமை ஸ்ரீமத் பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில், "கொல்வதில்லை- கொல்லப்படுவதும் இல்லை" என்ற தலைப்பில் விரிவுரை இடம் பெறும்.

இவ்விரிவுரை. நேரலையாக, **Chinmaya Mission, Jaffna** எனும் முகநூல் பக்கத்தில், ஒளிபரப்படவுள்ளது.

எனவே, ஆர்வலர்கள் அனைவரும் தங்கள் இல்லங்களில் இருந்தவாறே கேட்டுப் பயன் பெறலாம். (இ)

# வியாபாரிகள் சட்டத்தை மாற்ற அனுமதிக்கக்கூடாது

(சாவகச்சேரி)

வியாபாரிகள் சட்டத்தை அவர்களுக்கு ஏற்ற வகையில் மாற்ற நாம் அனுமதிக்கக் கூடாது என சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் நிதிகேசன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் தான் சாவகச்சேரி பொதுச் சந்தையை ஒழுங்குபடுத்தி சட்ட திட்டங்களை வகுத்துக் கொடுக்க வேண்டும்.

வியாபாரிகள் சட்டத்தை வகுக்கவும் அதனை மாற்றவும் அனுமதிக்கக் கூடாது. அவ்வாறு அனுமதித்தால் அது பல தரப்பினரையும் பாதிக்கும். குறிப்பாக சிறு வியாபாரிகளைப் பாதிக்கும். காலப்போக்கில் அது நகர சபையினரையும் பாதிக்கும் எனத் தெரிவித்தார். சாவகச்சேரி பொதுச் சந்தையில் வரி அறவிடுவதில் ஏற்படுகின்ற குழப்பங்கள் தொடர்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை வாகனங்கள் சந்தை வாயிலில் நுழையும் போதே கட்டணம் அறவிடப்பட வேண்டும் என சபை உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். (இ-30)

# தீர்மானத்திற்கு என்ன நடவடிக்கை தவிசாளர் தெரிவிக்க வேண்டும்

(சாவகச்சேரி)

சபையில் பிரேரணை கொண்டு வந்து அது தீர்மானம் ஆக்கப்பட்ட பின்னர் அந்தத் தீர்மானத்திற்கு இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என உறுப்பினர்களுக்கு தவிசாளர் தெரியப்படுத்த வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் குகானந்தன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை சபையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் உரிய பதிலை வழங்கும் பட்சத்தில் மீண்டும் பிரேரணையை முன்வைக்க வேண்டிய தேவை ஏற்படாது. அத்துடன் நேரமும் வீணடிக்கப்படமாட்டாது. அறிக்கையில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அதற்காக சபையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தெளிவாகக் கூறப்பட வேண்டும் என அவர் தெரிவித்தார். (இ-30)

## யாழ்.பொதுநூலக நினைவுக்கல்லை

# அகற்றும் போது அனைத்து உண்மைகளையும் உள்ளடக்கிய கல் அமைக்கப்பட வேண்டும்

### தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

யாழ்.பொதுநூலகத்திலுள்ள நினைவுக்கல்லை அகற்றும் போது உண்மையான காரணம் அடங்கிய கல் அங்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் யாழ்.மாநகர சபை தீர்மானம் தொடர்பில் ஆனந்த சங்கரி மேற்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், யாழ்.நூலகத்தில் உள்ள நினைவு கல்லை அகற்றுவது தொடர்பில் மாநகர சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிந்தேன். கல் அகற்றப்படுவதற்கு எதிர்பபு தெரிவித்து இக் கருத்தை கூறவில்லை.

ஆனால் அக்கல் அகற்றப்படும்போது உண்மையான காரணம் அடங்கிய கல் அங்கு காட்சிப்படுத்தப்பட வேண்டும். மாறான தமிழரசு கட்சியை திருப்திப்படுத்துவதற்கு அமையக்கூடாது என குறிப்பிட்டார். யாழ் மாநகரசபை தேர்தலில் அக்கால கட்டத்தில் யாரும் போட்டியிடுவது என்ற நிலை காணப்படவில்லை.



இந்த நிலையில் வேறு யாரும் மாநகர சபையை கைப்பற்றி விடுவார்கள் என்பதற்காக நாம் அங்கு போட்டியிட்டோம். அதன்போது மாநகர சபை ஆட்சி அமைக்கப்பட்டது. இதன்பின்னர் யாழ். நூலகம் அமைக்கப்பட்டது, நூலகம் அமைக்கப்பட்டு பெரும்பாலான பணிகள் நிறைவுற்ற நிலையில் குறித்த கட்டடத்தை என்னை திறக்கும் படியாக சபையில் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் அதற்கான கல்லும் கொண்டு வரப்பட்டது.

இந்த நிலையில் இரவோடிரவாக காவலாளியை அச்சுறுத்தி நூலக திறப்பு எடுத்துச் செல்லப்பட்டது. இதன் காரணமாக அப்போதிருந்த அனைத்து உறுப்பினர்களும் ராஜினாமா செய்தார்கள். அதன்பின் வந்த ஒரு குழுவினர், எடுக்கப்பட்ட சபையின் தீர்மானத்தில் நியாயத்தை கண்டு அதே நினைவு கல்லினை அங்கு ஓரிடத்தில் அமைத்தனர்.

இந்த நிலையில் குறித் கல்லை அகற்றக்கூடாது என்று குறிப்பிடுவதற்காக நான் இவ்வாறான கருத்தை தெரிவிக்கவில்லை.

அவ்வாறு குறித்த கல் அகற்றப்படும்போது அக்காலப் பகுதியில் சபையில் எடுக்கப்பட்ட ஏகமனதான தீர்மானம் உள்ளிட்ட அனைத்து உண்மைகளையும் உள்ளடக்கிய வகையில் கல் அமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.(2)

# முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபியில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி



இவர்கள் இறுதி யுத்தத்தில் மக்கள் படுகொலை செய்யப்பட்ட இடமான முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபிக்கு சென்று பார்வையிட்டதோடு முள்ளிவாய்க்காலில் உள்ள நினைவுத்தூபியில் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

(பனிக்கன்குளம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படுகின்ற இளைஞர்களுக்கிடையில் இன ஒற்றுமை சகவாழ்வு நல்லிணக்கத்திற்கான உறவுப்பலமான இளைஞர் பரிமாற்ற வேலைத் திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு அண்மையில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் முத்து விநாயகபுரத்தில் நடைபெற்றது.



2025 இல் செல்வந்த நாடு என்ற எண்ணக்கருவினை வெற்றிகொள்வதற்கான இனங்களுக்கிடையில் சமாதானம்,சகவாழ்வு, நிலைத்து நிற்கக்கூடிய அமைதியான சமூகம் ஒன்றை கட்டி எழுப்பும் நோக்கிலும் தேசிய நல்லிணக்கத்தினை கட்டி எழுப்பும் நோக்கிலும் புத்தளத்தைச் சேர்ந்த 30 இளைஞர்,யுவதிகள் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தனர்.

புத்தளத்திலிருந்து வருகைதந்த 30 சகோதர மொழி பேசும் இளைஞர்,யுவதிகள் மற்றும் முத்து விநாயகபுரத்திலுள்ள 30 இளைஞர், யுவதிகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முக்கிய பல இடங்களுக்கு சுற்றுலாவாக சென்றனர்.

இதனை தொடர்ந்து முல்லைத்தீவுகடற்கரைக்கு சென்று அங்கு கடற்கரையில் பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களை அகற்றும் முகமாக சிரமதானப் பணியிலும் ஈடுபட்டனர். (2-281)




# நந்திக்கடல் ஆற்றை சுத்தப்படுத்தி, ஆழப்படுத்தி தருமாறு மீனவர்கள் கோரிக்கை

(மல்லாவி )

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் அமைந்துள்ள நன்னீர் கடல் ஏரியான நந்திக் கடலை சுத்தப்படுத்தியும் ஆழப்படுத்தியும் தருமாறு நந்திக் கடலை நம்பியுள்ள தொழில் செய்து வரும் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட மீனவக் குடும்பங்கள் இணைந்து கோரிக்கை ஒன்றை முல்லைத் தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மீன்பிடி துறை அமைச்சரிடமும் முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வட்டுவாகல் நந்திக்கடலில் யுத்தம் நடைபெற்ற போது வீசப்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்த போது பாரிய குழிகள் தோன்றியுள்ளன.

அத்துடன், எறிகணைகளின் வெற்றுக் கோதுகள், வெடிக்காத வெடிபொருட்கள், உடைந்த வட்டுவாகல் பாலத்தின் சிதறல்கள், உட்பட பல்வேறு கழிவுப் பொருட்கள் நந்திக் கடலின் சகதிக்குள் புதையுண்டு காணப்படுகின்றன.

இதனை விட கடந்த 03, ஆண்டுகளாக முல்லைத் தீவு மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வரட்சி நிலை காரணமாக கடல் நீர் வெப்பமடையும் போது, மீன்கள், இறால்கள் போன்ற கடல் வாழ் உயிரினங்கள் இறந்து கடலில் மிதப்பதுடன் கரையோரங்களில் அண்டி தேங்கி துர்நாற்றம் வீசுகின்றது.

இதனால், நந்திக் கடலில் புதிய கடல் வாழ் உயிரினங்கள் உற்பத்தியாவது குறைவடைந்து வருவதுடன், இந்த நன்னீர கடல் நீர் ஏரியை நம்பி வாழும் மீனவக் குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே, இந்த நந்திக்கடலை துப்புரவு செய்தும், ஆழப்படுத்தும் போது மீனவர்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்தக் கூடியதாக இருக்கும் என நந்திக்கடலில் மீன் பிடித்து வாழ்ந்து வரும் மீனவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

இதேவேளை வரட்சியினால் தமது தொழில்கள் பாதிக்கப்படுகின்றமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து தமக்கான நிவாரண உதவிகளை பெற்றுத்தருமாறு மீனவர்கள் கோரியுள்ளனர். (2-15-315)

# ஆவணமின்றி 20 வருடங்களாகத் தங்கியுள்ளவர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்க வேண்டாம்

## வீடமைப்பு அதிகார சபை அறிவிப்பு

(பனிக்கன்குளம்)

வவுனியாவில் ஆவணமின்றி 20 வருடங்களாகத் தங்கியுள்ளவர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் எதனையும் வழங்கவோ அல்லது அவர்களுக்கு அரசாங்கத்தினால் உதவிகள் எதனையும் வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டாம் என தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை கடிதம் மூலம் அறிவித்துள்ளது.

வவுனியா காத்தார் சின்னக்குளம் வீடமைப்பு திட்டம் பகுதியில் தங்கியுள்ளவர்களின் காணி தேசிய வீடமைப்பு அதிகார சபையினருக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் வீடுகள் வழங்கப்பட்டுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் அவர்களுக்கான முழுப் பெறுமதியையும் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்குச் செலுத்தியதும் அவர்களுக்கான காணி உறுதி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் வழங்கப்படும்.

மேலும் இவ்வீடமைப்புத்திட்டத்தில் பொதுத் தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் ஏனைய வெற்றுக்காணிகள் யாவும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானதாகும்.

அக்காணியில் அத்துமீறிக் குடியிருப்போருக்கு அனுமதிப்பத்திரங்கள் எதனையும் வழங்கவோ அல்லது அவர்களுக்கு அரசாங்கத்தினால் உதவிகள் எதனையும் வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டாம் எனவும் அவர்களை அங்கிருந்து வெளியேற்றி வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கு ஆவன செய்யுமாறு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை வவுனியா அலுவலகத்திலிருந்து கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

எனவே இப்பகுதி மக்களின் குற்றச்சாட்டிற்கு பிரதேச செயலகம் அல்லது கிராம அலுவலரையோ குற்றஞ்சாட்டி முன்வைக்க முடியாது.

எனவே இதற்கு முழுப் பொறுப்பினையும் தேசிய வீடமைப்பு அதிகார அபிவிருத்தி சபையினரே பொறுப்பேற்பதுடன் கடந்த 20 வருடமாக குடியிருக்கும் குடும்பங்களுக்கு காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கி வைக்கப்படுவதுடன் வீட்டுத்திட்டங்களையும் பெற்றுக்கொடுப்பதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். (2-281)

## வவுனியா புதிய பேருந்து நிலையத்தில்

# முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கும் வவு.நகரபிதாவிற்கும் இடையில் முறுகல்நிலை

(குருமன்காடு)

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் வவுனியா நகரபிதாவிற்கும் முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்குமிடையில் நேற்றைய தினம் முறுகல்நிலை ஒன்று பேருந்து நிலையத்திற்கு முன்பாக பேருந்துகளை நிறுத்த முடியாது என வவுனியா நகரசபையினால் சமிக்ஞை பதாகை அமைக்கப்பட்டபோது முச்சக்கர வண்டி உரிமையாளர்களுக்கும் வவுனியா நகரபிதாவிற்கும் இடையில் நேற்று முறுகல் நிலை ஏற்பட்டது.

புதிய பேருந்து நிலையத்திற்குள் வேறு மாவட்டங்களில் இருந்து மாகாணங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் உட்செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக மாகாணங்களுக்கிடையிலான சேவையில் ஈடுபடும் பேருந்துகள் வீதியோரத்தில் தரித்து நின்றே சென்று வருகின்றது.

இதனால் அப் பகுதியில் உள்ள மக்களுக்கு பெரும் அசௌகரியம் ஏற்பட்டு வரும் நிலையில் தமது வீடுகளுக்கு முன்பாக பேருந்துகளை நிறுத்துவதைத் தடை செய்யுமாறு கோரி அப்பகுதி மக்கள் வவுனியா நகரசபையில் தமது முரண்பாட்டை தெரிவித்திருந்தனர்.

இதன் பிரகாரம் வவுனியா நகரபிதா அப்பகுதி மக்களின் நலனைக்கருத்தில் கொண்டு பேருந்துகளை சில மீற்றர் தூரம் சென்று மக்கள் வசிக்காத பகுதியில் நிறுத்துவதற்கு ஏதுவாக வாகனம் நிறுத்துவதற்கு தடை செய்யும் சமிக்ஞை பதாகைகளை அமைக்க திட்டமிட்டு நேற்று அப்பகுதியில் நகர சபை ஊழியர்களுடன் பணியை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது அப்பகுதியில் தரித்து பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகளை நம்பி வாழ்வாதாரத்தை மேற்கொண்டுள்ள முச்சக்கர வண்டி உரிமையாளர்கள், சாரதிகள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதன் காரணமாக மாற்றுத்திறனாளிகள் புதிய பேருந்து நிலையத்திற்கு வருவதற்கு சிரமங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும் எனவும் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் தம்மால் கட்டணங்களை பெறமுடியாது என்பதால் புதிய பேருந்து நிலையத்திற்கு முன்பாகவே மாகாணங்களுக்கிடையிலான பேருந்துகள் நிறுத்திச் செல்ல வேண்டும் அல்லது பேருந்து நிலையத்திற்கு உள் பேருந்துகள் செல்ல அனுமதிக்க வேண்டும் என தெரிவித்தனர்.

அதுவரை வாகன தரிப்புக்கு தடை விதிக்கும் சமிக்ஞைகளை அமைக்க விட மாட்டோம் என வவுனியா நகரபிதாவும் தெரிவித்தார்.

இதனையடுத்து பொலிஸார் அப்பகுதிக்கு வருகை தந்து எதிர்வரும் 5 ஆம் திகதி இடம்பெறும் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடி முடிவெடுப்பதாக தெரிவித்த நிலையில் நகரசபையினர் தமது பணியை இடைநிறுத்தியிருந்ததுடன் முறுகல் நிலையும் சுமுகமாக்கப்பட்டது. (2-250)

நல்ல சேவை செய்வதற்குரிய ஆற்றலைக் கெட்ட மனிதனிடம் ஒருநாளும் காணமுடியாது.

– பர்க்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# அவர் கேட்டது சரியா? இவர் சொல்வது சரியா?

இராணுவத்தினருக்கு மீண்டும் அதிகாரத்தைத் தந்தால் வடக்கில் உள்ள வாள்வெட்டுக் குழுக்களைக் கட்டுப்படுத்திக் காட்டுவோம் என இராணுவத் தளபதி மஹேஸ் சேனநாயக்க கூறியுள்ளார்.

அவர் இவ்வாறு கூறுவதற்கு முன்பாக, வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பொலிஸ் அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள். இரண்டு மாதங்களுக்குள், வடக்கில் இடம்பெறும் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்திக் காட்டுகின்றோம் எனக் கூறியிருந்தார்.

இங்கு ஒரே கருத்தை இரண்டு பேர் முன்வைத்துள்ளனர்.

இதில் வடக்கின் முதலமைச்சர் விடுத்த கோரிக்கை தமிழ் மக்களின் உரிமை சார்ந்த பிரச்சினை.

அதாவது தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தில் காணி அதிகாரமும் பொலிஸ் அதிகாரமும் தரப்பட வேண்டும் என்பது தமிழர் தரப்பின் நிலைப்பாடு.

இந்த நிலைப்பாட்டையே முதலமைச்சர் விக்னேஸ்வரன் கேட்டிருந்தார்.

மாறாக அவரின் கோரிக்கையானது பொலிஸாரின் இயங்குநிலையைக் குறைகூறுவதாக இல்லை.

மாறாக வடக்கில் இடம்பெறும் வாள்வெட்டுச் சம்பவங்களைப் பொலிஸார் மூலமே கட்டுப்படுத்த வேண்டும். அதற்குப் பொலிஸ் அதிகாரம் எங்களிடம் இருந்தால் அதனை நாங்கள் செய்து காட்டுவோம் என்பதாக அவரின் கருத்து உள்ளது.

எனவே பொலிஸ் அதிகாரம் எங்களிடம் இருக்குமாயின் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பது என்றும் எங்களுக்குக் கடினமானதல்ல என்ற கருத்தை வடக்கின் முதலமைச்சர் முன்வைத்துள்ளார்.

ஆனால் இராணுவத் தளபதியின் கருத்தில் வடக்கில் மீண்டும் இராணுவத்துக்கு அதிகாரம் தந்தால் வட பகுதியில் உள்ள வாள்வெட்டுக் குழுக்களைக் கட்டுப்படுத்திக் காட்டுவோம் என்பதாக உள்ளது.

இங்கு மீண்டும் இராணுவத்திடம் அதிகாரத்தைக் கொடுக்கும்போது முன்னாள் போராளிகள் மற்றும் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்றவர்கள் எனப் பலரும் வாள்வெட்டுக்குழு என்ற சந்தேகத்தின் பேரில் கைதாகக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தப்படும்.

எனவே இராணுவத் தளபதியின் மேற்போந்த கோரிக்கை வாள்வெட்டுக்குழுக்களால் ஏற்படும் அச்சத்தைவிடப் பன்மடங்கு அதிகமான அச்சத்தைத் தமிழ் மக்களுக்குத் தரக்கூடியது.

தவிர, இராணுவத் தளபதியின் கூற்றுப்படி வடக்கில் உள்ள பொலிஸாரின் சேவை போதுமானதல்ல என்ற கருத்தும் தொக்கி நிற்கிறது.

ஆக, இராணுவத் தளபதியின் கோரிக்கை என்பது எந்தவகையிலும் ஏற்புடையதன்று. மாறாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் கேட்ட பொலிஸ் அதிகாரத்தை எங்களிடம் தாருங்கள் என்பதுதான் முற்றுமுழுதும் சரியான விடயமாகும்.

# உரும்பிராயில் இரு வீடுகள் மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல்

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் அடுத்தடுத்து அமைந்துள்ள இரண்டு வீடுகள் மீது நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத கும்பல் சரமாரியாகப் பெற்றோல் குண்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உரும்பிராய் கிழக்கு சென்.மைக்கல் சேர்ச் பின் வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத கும்பலே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தப் பகுதியிலுள்ள தேவாலயமொன்றில் வருடாந்தத் திருவிழா இடம்பெற்று வரும் நிலையில் இந்தத் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள வீடுகள் மீது மூன்று பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டுள்ளது.

தாக்குதலில் இரண்டு வீடுகளினதும் முன்பக்கம் கடும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

எனினும், வீட்டிலிருந்தவர்களுக்குத் தெய்வாதீனமாக காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

பெற்றோல் குண்டுத் தாக்குதலுக்கான சரியான காரணம் இதுவரை வெளியாகாத நிலையில் குறித்த சம்பவங்கள் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம)

## வாக்காளர் இடாப்புக்குரிய இறுதி ஒப்பம் 25ஆம் திகதி

புதிய வாக்காளர் இடாப்புக்கான இறுதி ஒப்பம் எதிர்வரும் 25ஆம் திகதி இடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2018ஆம் ஆண்டுக்கான தேர்தல் வாக்காளர் இடாப்பு சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள் மற்றும் எதிர்ப்புகள் சம்பந்தமாக மீள்பரிசோதனை செய்யும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகவும் தேர்தல் ஆணைக்குழு கூறியுள்ளது.

அந்த நடவடிக்கை நிறைவடைவதற்கு ஒரு மாத காலம் தேவைப்படும் எனவும் தேர்தல்கள ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம)

## சாரதிகள் மோதல் ஒருவர் உயிரிழப்பு

கொஹுவலை பிரதேசத்தில் முச்சக்கரவண்டி சாரதிகள் இருவரிடையே ஏற்பட்ட முரண்பாடு மோதலாக மாறியதையடுத்து ஒரு சாரதி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் நுகேகொட திசையில் இருந்து கொஹுவலை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டி ஒன்று மற்றொரு முச்சக்கரவண்டியை முந்திச் செல்ல முற்பட்டபோது இரண்டு முச்சக்கரவண்டிகளும் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் ஏற்பட்ட முரணபாடு மோதலாக மாறியுள்ள நிலையில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டவேளை ஒருவர் உயிரிழந்துள்ளார். (ம)

# இலங்கையில் மீண்டும் மலேரியா நோய்த் தாக்கம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட 35 பேர் இனங் காணப்பட்டுள்ளனர்.

மலேரிய ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த ஹேரத் இதனைத் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து நாட்டிற்கு திரும்பிய 11 இலங்கை பிரஜைகளும், 24 வெளிநாட்டு பிரஜைகளும் இதில் உள்ளடங்குவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென் சூடான், மடகஸ்கார், எத்தியோப்பியா மற்றும் உகண்டா பிரஜைகள் இதில் அடங்குவதுடன், இந்தியாவை சேர்ந்த 15 பேர் பாதிக்கப்பட்டவர்களில் அடங்குவதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன், வெளிநாட்டுக்கு செல்பவர்கள் மலேரியா தொற்று காணப்படும் நாட்டிற்கு செல்வார்களாயின், மலேரியா கட்டுப்பாட்டு பிரிவில் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறு அவர் வலியுறுத்தியுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வருபவர்களும் வைத்தியரிடம் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் மலேரிய ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த ஹேரத் பொது மக்களிடம் கோரியுள்ளார்.

இதேவேளை, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மலேரியா நோயற்ற நாடாக உலக சுகாதார ஸ்தாபனத்தினால் இலங்கை பிரகடனம் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# மணல் கடத்தல்காரர்களால் தினமும் ஆபத்தை எதிர்கொள்ளும் கிராமம்

(சாவகச்சேரி)

மணல் கடத்திச் செல்கின்ற டிப்பர் வாகனங்கள் எழுதுமட்டுவாழ் கிராமத்தின் உள்வீதிகளில் செல்வதால் தாம் ஆபத்தை எதிர்கொள்வதாக கிராம மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கிராம அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை எழுதுமட்டுவாழ் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

ஏ-9 பிரதான வீதியின் எழுதுமட்டுவாழ் சந்தியில் கடத்தல்களை தடுக்க பொலிஸ காவலரண் ஒன்றை அமைத்துள்ளனர்.

இதனால் அனுமதியின்றி மணல் கடத்தி வருகின்ற டிப்பர் வாகனங்கள் கிராமத்தின் உள்வீதிகளூடாக வேகமாக செல்கின்றன.

இதன்காரணமாக கால்நடைகள் வாகனங்களில் மோதி இறப்பதோடு மக்களும் நடமாட அச்சப்படுகின்றனர்.

இது தொடர்பாக டிப்பர் சாரதிகளிடம் கேட்க முற்படுகின்ற போது அச்சுறுத் துவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அண்மையில் கூட மணல கடத்தி வந்த டிப்பர் வாகனம் மின்சாரத் தூண்கள் மீது மோதியதில் 6 மின்கம்பங்கள் முறிந்து வீழ்ந்ததாகவும் மக்கள் சுட்டிக்காட்டினர்.

மணல் கடத்தல் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கினால் தமக்கு ஏதாவது அச்சுறுத்தல் நிகழலாம் எனவும் பொதுமக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இந்த விடயத்தை கேட்டறிந்த மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உடனடியாக பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் ஊடாக பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். (இ-89)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை மன்னார் பிரதேசத்தில மணல்குளம், இலந்தை மோட்டை, சூரியகட்டைக்காடு, மடுச்சந்தியிலிருந்து பூமலர்ந்தான் வரை, மடுமாதா ஆலயம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

## கோபத்தைத் தவிர்க்க...

- பிரச்சினைகளை நன்றாக யோசியுங்கள். சிறிய பிரச்சினைகளை நீங்களாகவே பெரிதாக்கிக் கொள்ளாதீர்கள். சின்னச் சின்ன விடயத்திற்குக் கூட கோபம் அடையாதீர்கள். தன்னையும் மீறி கோபம் வந்தால் அந்த இடத்தை விட்டு விலகி சற்று ஓய்வாக இருந்துவிட்டு வாருங்கள்.
- பிறர் தவறு செய்திருந்தாலும் மன்னிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.
- கோபம் என்பதே கொடிய நோய் என்று உணர்ந்து வாழ்ந்திடுங்கள். கோபத்தை நாம் அடக்காவிட்டால் அது நம்மை அடக்கிவிடும் என்கிற வாசகத்தை மனதில் பதியமிடுங்கள்.
- கோபத்தைத் தவிர்க்க பொறுமைகளைக் கடைப்பிடியுங்கள்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- ❖ ஒவ்வொருவனுக்கும் எவ்வாறு பதில் சொல்ல வேண்டுமென அறியும்படி, உங்கள் பேச்சானது எப்போதுமே இனிதாகவும் உப்பின் சாரமுள்ளதாகவும் இருக்கட்டும்.
- ❖ உங்கள் பேச்சு பேராசையில்லாது இருக்கட்டும். உங்களிடம் உள்ள பொருளே போதுமென்று திருப்தியுடன் வாழுங்கள்.
- ❖ தந்தையை நையாண்டி செய்து தாய்க்கு அடங்காமல் நிந்திக்கும் கண்ணை நதிக்கரைக் காகங்கள் பிடுங்கும். இளங்கழுகுகள் அதைத் தின்னும்.
- ❖ தந்தையின் புத்திமதியைக் கேள். தாயின் நியதியைப் புறக்கணிக்காதே.
- ❖ உன் நெஞ்சிலிருந்து வருத்தத்தை நீக்கிவிடு. உன் சதையிலிருந்து தீமையை எடுத்துவிடு. ஏனெனில், குழந்தைமையும் இளமையும் வெறும் பிரமையே.
- ❖ மமதை பிடித்தவர்களையும் உள்ளூரப் பொய்களின் பக்கம் திரும்பியவர்களையும் மதிக்காமல் கர்த்தரையே தன் நம்பிக்கையாக வைத்திருக்கும் மனிதன் பாக்கியவான்.
- ❖ தானியத்தைப் பதுக்கி வைப்பவனைப் பொது ஜனம் சபிக்கும். ஆனால், அதை விற்பவன்

# ஞானமுருகன் அணி அசத்தலாட்டம் போராடி வென்ற கொழும்பு எப்.சி



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தின் எப்.ஏ வெற்றிக்கிண்ண கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின், 64 அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டிகள் தற்போது நடைபெற்று வருகின்றது.

அநுராதபுரம் சிறைச்சாலை மைதானத்தில் நடைபெற்ற போட்டியொன்றில் மயிலங்காடு ஞானமுருகன் அணியை எதிர்த்து இலங்கையின் பலம் பொருந்திய அணியாகக் கருதப்படும் கொழும்பு எப்.சி அணி மோதியது.

இந்தப் போட்டியில், கொழும்பு எப்.சி அணிக்கு வெற்றி இலகுவாகக் கிடைக்கவில்லை. மிகுந்த போராட்டத்தின் மத்தியில் கொழும்பு எப்.சி அணி, 04:03 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (க-26)

# தொண்டைமானாறு அண்ணாவை வீழ்த்தி கிண்ணம் வென்றது ஆவரங்கால் இந்து



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் 5வது ஆண்டு நிறைவை முன்னிட்டும், அமரர் சிவகுருநாதர் ஞாபகார்த்தமாகவும் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட தொடரின் இறுதி ஆட்டம் பெரும் எதிர்பார்ப்பின் மத்தியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு ஆரம்பமாகியது!

நடப்புசம்பியனாக இருந்த ஆவரங்கால் மத்தி அணியை வீழ்த்தி இறுதிக்குள் நுழைந்த தொண்டைமானாறு அண்ணா அணியை எதிர்த்து, கடந்த ஆண்டு இறுதியில் மத்தியிடம் வெற்றிக்கிண்ணத்தை தவறவிட்ட ஆவரங்கால் இந்து அணி மோதியது.

விறுவிறுப்பான ஆடுகளத்தின் மத்தியில் 5சுற்றுக்களை கொண்ட போட்டியின் முதல் மூன்று சுற்றுக்களையும் தன்வசப்படுத்தி வெற்றிக் கிண்ணத்தை வென்றது ஆவரங்கால் இந்து.

2ஆம் இடத்தினை பெற்றது தொண்டைமானாறு அண்ணா விளையாட்டுக்கழகம்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை உறுப்பினரும், சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன், சிறப்பு விருந்தினர்களாக கரப்பந்தாட்ட சங்கத்தின் முன்னாள் செயலாளர் தயாளபாலன் மற்றும் ஸ்கந்தவரோதய கல்லூரி ஆசிரியர் ராஜகாந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

போட்டியின் சிறந்த தொடராட்ட நாயகன் மற்றும் நிலைகளுக்கான சிறந்த வீரர்களுக்கான விருதுகளும் வழங்கப்பட்டன. (க)

# பெண்களுக்கான கரப்பந்தாட்டம் சம்பியனாகியது வயாவிளான் வயவன்



மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 45 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பெண்கள் கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்பட்டது.

கழக மைதானத்தில், கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமாகிய இந்தச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் அன்றைய தினமே நடைபெற்றது. இதில், வயாவிளான் வயவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் கணேசா விளையாட்டுக் கழக அணி மோதியது.

மூன்று செற்களைக் கொண்டமைந்ததாக இந்த இறுதிப்போட்டி நடைபெற்றது. வயாவிளான் வயவன் அணி, முதல் இரண்டு செற்களையும் 25:21, 25:17 என்ற அடிப்படையில் வென்று சம்பியன் கிண்ணத்தை வென்றது. வயாவிளான் வயவன் அணியின் ஏழிசை இறுதிப்போட்டியின் சிறந்த வீராங்கனையாகவும், உரும்பிராய் கணேசா அணியின் தர்சி தொடரின் சிறந்த வீராங்கனையாகவும். தெரிவு செய்யப்பட்டனர். (க-26)

## தாவடி வேதவிநாயகர் விளையாட்டுக்கழகத்தின் கிரிக்கெட் இறுதிப்போட்டி

தாவடி வேத விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் இணுவில் இந்துக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதன் இறுதிச் சுற்றுப்போட்டி இன்று காலை 8.30 தொடக்கம் இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தல் நடைபெறவுள்ளது .

பிரதம விருந்தினராக சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப் பதிகாரியும் மற்றும் ஏனைய சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர்களும், பிரதேசசபை உறுப்பினர்களும் கலந்து கொள்வர். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# பரபரப்பான ஆட்டம் சுப்பர் 8ல் றேஞ்சல் அணி



புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞான முருகன் அணியை எதிர்த்து றேஞ்சஸ் அணி மோதியது. ஆரம்பம் முதல் இரு அணிகளாலும் கோல் போடும் வாய்ப்புக்களை பின்கள வீரர்கள் சிறப்பான முறையில் தடுத்தனர். முதல் பாதியாட்டம் எவ்வித கோல்களுமின்றி முடிவடைந்தது .

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும் எவ்வித கோல்களுமின்றி முடிவடைய ஆட்டம் சமநிலை தவிர்ப்புக்காக செல்ல இறுதியில் 4:2 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்று "SUPER 8" சுற்றுக்கு தகுதி பெற்றது றேஞ்சஸ் அணி. (க)





இலங்கை மாற்றுத்திறனாளிகளுக்கான 2018 தேசிய விளையாட்டு விழா கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெற்றது. யாழ்.மாவட்ட கோப்பாய் பிரதேசத்தின் விழிப்புலனற்ற மாற்றுத்திறனாளியான விஜயகுமார் விஜயலாதன் தேசிய ரீதியில் முதலாமிடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தை சுவீகரித்துக் கொண்டார். இவர் யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் சமூகவியற்றுறையில் கல்வி பயின்று வருகிறார். இவர் முன்னாள் யூனியன் கல்லூரியின் பழைய மாணவனும் ஆவார். இந்நிகழ்வில் 25 மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் பங்கு பற்றியமையும் குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-சக்தி)







சுழிபுரம் இளம்துளிர்கள் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் த.நடனேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் கிருஷ்ணராஜா, உமாபதி, விஜிமருகன், பாலகிருஷ்ணன் மற்றும் கிராமசேவகர் ஜீவராஜா, கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சுதாகரன், கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பாஸ்கரன், அருட்தீபம் சனசமூக நிலைய தலைவர் ராயு ஆகியோர் விருந்தினராக கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வில் வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக்கிண்ணம் வழங்கப்பட்டது.

## கத்தியைக் காட்டி...

றில் பொருட்கள் வாங்குவதற்கு அக்கிராமத்தில் வசிக்கும் பெண் ஒருவர் சென்றுள்ளார்.

அப்போது குறித்த கடைக்கு சென்ற நபர் ஒருவர் கடைமுதலாளியிடம் பீடி கேட்டுள்ளார். முதலாளி அதனை எடுப்பதற்கு உள்ளே சென்ற சமயம் குறித்த கடையில் நின்ற பெண்ணிடம் கத்தியைக் காட்டி மிரட்டி சங்கிலியை அபகரித்துச் தப்பிச் சென்றுள்ளார். இதனால் அவ்விடத்தில சிறிது நேரம் பதற்றம் நிலவியது. இது தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-9)

## வாகனங்கள்...

திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் மன்றங்களுக்கான வாகனங்களைக் கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் மீள் அறிவித்தல் வழங்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்களுக்கு அமைய வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் செயற்பாடு 6 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு ஹைபிரிட் வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக அதன் பெறுமதிக்கு கடன் பெறக்கூடிய சதவீதம் 70 சத வீதத்திலிருந்து 50 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

மேலும் பேருந்து, பாரஊர்தி அல்லாத வாகன இறக்குமதிக்கு 200 சதவீத காசும் குளிரூட்டி, தொலைக்காட்சி, கைபேசி இறக்குமதிக்கு 100 சதவீத காசும் இல்லை என்றுள்ளது. (ம)

## இறுதி யுத்தத்தின் போது...

இறுதி யுத்தத்தின் போது அனைத்து தலைவர்களும் வெளிநாடுகளுக்கு சென்றிருந்ததாக அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றிய போது குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் இதுதொடர்பில் கருத்து வெளியிடும் போதே முன்னாள் இராணுவ தளபதியும், அமைச்சருமான சரத்பொன்சேகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சரத்பொன்சேகா, யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளை கவனம் செலுத்த வேண்டிய பல விடயங்கள் உள்ளன. வெறுமனே தாககுதல் குறித்து மாத்திரம் கவனம் செலுத்த முடியாது.

இந்த பொறுப்புகளை நிறைவேற்ற வேண்டியது சிரேஷ்ட தலைவர்கள் மற்றும் அதிகாரிகளின் கடமை. இதன் காரண்மாகவே யுத்தத்தின் இறுதிவாரங்களில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறினார். நான் சீனாவிற்கு சென்றேன்.

மேலும் யுத்தத்தை இரண்டு வாரங்களில் தீர்மானித்து விட முடியாது. இறுதி இரண்டு வாரங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய தாக்குதலை சாதாரண சிப்பாயால் கூட செய்திருக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## அரசியல்கைதிகளின்...

போய் இருக்கின்ற அரசியல் கைதிகளின் விவகாரம் தொடர்பில் மிகக் காத்திரமானதும் ஏற்புடையதுமான அரசியல் அழுத்தத்தை பிரயோகிக்கும் அவசரமானதொரு நிலை தமிழர்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

தமிழர்களின் உரிமைசார் போராட்டங்களில் இதுவரை அர்ப்பணிக்கப்பட்ட தியாகங்களில் சற்றேனும் குறையில்லாத தியாகங்களுக்கு உரித்துடையவர்கள் சிங்களச் சிறைகளில் பல ஆண்டுகளாக சிறையிருப்பவர்கள்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் பல்வேறுபட்ட அரசியல் மற்றும் சட்ட வியாக்கியானங்களை கேட்டிருக்கின்றோம்.

இவை எவையும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான நியாயப்பாடுகளுக்கு வலுச்சேர்க்கவில்லை. மாறாக தமிழர் தரப்பால் கைதிகளின் விடுதலை தொடர்பில் செய்த எல்லா போராட்டங்களையும் உதாசீனம் செய்ததன் மூலம் ஒரு கால இழுத்தடிப்பை சிங்கள அரசுகள் தொடர்ந்து செய்து வருகின்றது.

இடர்பாடுகள் நிறைந்த இந்த காலத்தில் அரசியல் கைதிகளின் ஊசலாடும் உயிர்கள் மீது கரிசனையும் தமிழர்களின் உரிமை போராட்டத்தில் உண்மையான அக்கறையும் இருப்பின் தமிழர் நிலப்பரப்பை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வுகளை புறக்கணித்து அரசியல் கைதிகள் உண்ணாவிரதமிருக்கும் அநுராதபுரநகரில் ஒன்றுகூடி, முகாமிட்டு, தரித்திருந்து, கைதிகளின் ஊசலாடும் உயிர்களை விட இலங்கையின் பாராளுமன்ற ஜனநாயகம் ஒன்றும் பெரிதல்ல என்பதனை சர்வதேசத்திற்கும் அரசுக்கும் நீதித்துறைக்கும் கூற வேண்டிய கடப்பாடு தமிழர் பிரதிநிதிகளுக்கு உண்டென்பதை நாங்களும் மக்களும் திடமாக நம்புகிறோம்.

முள்ளிவாய்க்கால் பேரவலத்தின்போது காக்கப்பட்ட மௌனத்தைப்போன்று அரசியல் கைதிகள் விடுதலை விவகாரத்திலும் தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்வோர் அனைவரும் அமைதி காப்பீர்களாயின் தமிழர் உரிமைகள் மற்றும் அபிலாசைகள் மீது நீங்கள் கொண்டிருக்கும் பற்றுறுதியை கேள்விக்குட்படுத்தப்படும் நிலை தமிழ் மக்களுக்கு உருவாகும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9,281)

## புதிய விலை சூத்திரம்...

முன்னெடுக்கப்படவுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

மாத்தறை பௌத்த கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் நேற்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், சர்வதேச நாணய நிதியம் கூறும் விடயங்களை நாம் மேற்கொள்வதில்லை.

மின் கட்டணத்திற்கு விலைச்சூத்திரமொன்றை உருவாக்க வேண்டும் என அரசாங்கம் என்ற ரீதியில் கடந்த காலங்களில் நாம் ஏற்றுள்ளோம். விலைச்சூத்திரத்தை தயாரிக்க விசேட குழுவொன்றை அமைக்க நாம் எதிர்பார்த்துள்ளோம்.

இது சர்வதேச நாணய நிதியத்தின் யோசனை அல்ல. இலங்கையின் யோசனையாகும். எதிர்காலத்தில் எரிபொருளின் விலை 81 டொலர் வரை அதிகரிக்கக்கூடும்.

இவை அனைத்தையும் அரசாங்கத்தினால் தனியாக தாங்கிக்கொள்ள முடியாது. உடனடியாக செய்யப்போவதில்லை. இன்னும் இரண்டு வருடங்கள் சென்றாவது விலைச்சூத்திரத்திற்கு செல்ல வேண்டும் என தெரிவித்துள்ளார். (ம)

## இராணுவத்துக்கு...

கொழும்பில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சரியான முறையில் சட்டத்தை அமுல்படுத்தவும் தீர்மானங்களை எடுக்கவும் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். அதற்கு தேவையான கூடிய அதிகாரங்களை கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ராஜாங்க அமை

# இறக்குமதியை குறைப்பதைப் போல ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்

## அனுர பிரியதர்ஷன எம்.பி வேண்டுகோள்

(கொழும்பு)

இறக்குமதி செலவீனங்களை குறைப்பதன் ஊடாக மாத்திரம் டொலரின் பெறுமதி அதிகரிப்பை கட்டுப்படுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் அனுர பிரியதர்ஷன இதனைத் தெரிவித்துள்ளார்.

சில பொருட்களின் இறக்குமதிகளை குறைக்குமாறு பிரதமர் நிதியமைச்சருக்கு வழங்கியுள்ள ஆலோசனைகள் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதியை குறைப்பதைப் போன்று ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான ஊக்குவிப்புக்களை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, ரூபாயின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்காக நேற்று சனிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் சில நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வாகன் இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கும் செயற்பாடு ஒரு வருட காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நிதி மற்றும் ஊடக அமைச்சினால் நேற்று சனிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் மன்றங்களுக்கான வாகனங்களைக் கொள்வனவு செய்யும் செயற்பாடுகள் மீள் அறிவித்தல் வழங்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ம)

# தனது ஆட்சியில் அபிவிருத்தி வேகமாக இருந்தது-சந்திரிகா

(கொழும்பு)

தனது ஆட்சிக் காலத்தில் நாட்டில் வேகமான அபிவிருத்தி இடம்பெற்றதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்.

அநுராதபுரம் பிரதேசத்தில் ஊடகங்களிடம் பேசும் போது அவர் இந்தக் கருத்தை கூறியுள்ளார்.

அத்துடன் தனது ஆட்சிக் காலத்தில் யுத்தத்தையும் குறிப்பிடத்தக்க அளவு முடிவுக்கு கொண்டுவர முடிந்ததாக அவர் கூறியுள்ளார்.

யுத்தம் இருந்த போது 06 ஆண்டு காலத்தில் தனி நபர் வருமானம் மூன்று மடங்காக அதிகரித்ததாகவும், நாட்டின் தேசிய உற்பத்தியை அதிகரித்ததாகவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார். (ம)

ச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில், தற்போதைய பொருளாதார நிலைமை குறுகிய காலத்திற்கு ஏற்பட்டது எனவும் அதில் அனைத்து உலக நாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் அஜித் பீ.பெரேரா குறிப்பிட்டுள்ளார். (ம)

## தமிழ் அரசியல்கைதி...

லையை வலியுறுத்தி கடந்த 14ஆம் திகதியில் இருந்து தொடர் உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர். கடந்த 22 ஆம் திகதியில் இருந்து வவுனியாவை சேர்ந்த அப்துல் கமீத் உமர் கதாப் மற்றும் கிளிநொச்சியை சேர்ந்த நடராசா சபேஸ்வரன் ஆகிய இருவரும் அவர்களுடன் இணைந்து போராட்டத்தை ஆரம்பித்த 10 அரசியல் கைதிகளும் இன்றுடன் (நேற்று) 17 ஆவது நாளாக போராட்டத்தை தொடர்ந்துள்ளனர்.

இவர்கள் உடல் நிலை மோசமடைந்த நிலையில் ஒரு வாரமாக தொடர்ச்சியான உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள்.

தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமரை அண்மையில் சந்தித்து அரசியல் கைதிகள் தொடர்பான விடயத்தை கலந்துரையாடியிருந்தனர். அதில் சாதகமான முடிவு எட்டப்படாததால் எதிர்வரும் செவ்வாய் கிழமை மீண்டும் ஒரு சந்திப்பு இடம்பெறவுள்ளதாகவும் அதில் சாதகமான முடிவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அவர்களின் முடிவை எதிர்பார்த்து அரசியல் கைதிகள் தமது போராட்டத்தை தொடர்கிறார்கள். (ம-9)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## கண்ணீர் அஞ்சலி



மூளாய் அ.மி.த.க பாடசாலையில் எம்மை நல்வழிப்படுத்திய ஆசிரியை

**திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்**

**(குஞ்சு ரீச்சர்)**

தோற்றம்:- 13.11.1938 மறைவு:- 29.09.2018

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**என்றும் மறவாத மாணவன்**

மூளாய், சுழிபுரம். (C-4010) தங்க.முகுந்தன் (0777-279238)

**சௌபாக்ய** / செவன

| | |
|---|---|
| திகதி | 2018/09/29 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 122 |

ஆங்கில எழுத்து: R — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 20 31 60 65

தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 29-09-2018 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 878 |

ஆங்கில எழுத்து: Y — வெற்றி இலக்கங்கள்: 3 1 2 9 4 6

தேசிய லொத்தர் சபை

கொவிசெத

| | |
|---|---|
| திகதி | 2018.09.29 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1897 |

ஆங்கில எழுத்து: A — வெல்லப்பட்ட இலக்கங்கள்: 11 40 42 56

தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா

| | |
|---|---|
| திகதி | 2018/09/29 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1364 |

எழுத்து: 08 — வெற்றி இலக்கம்: 26 35 41 57 — 68 44

தேசிய லொத்தர் சபை

**வாகனம் விற்பனைக்கு**

NP HT XXXX எனும் தொடரிலக்கம் உடைய Toyata Hilux 4WD ரக டபிள் கப் 2003 மொடல் வாகனம் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: 0776235454**

## கிளிநொச்சியில்...

யாளபுரம் பகுதியில் நேற்று இரவு ஏழு மணியளவில் சந்தேகத்திற்கிடமான வாகனம் ஒன்று செல்வதனை அவதானித்த அவ்வூர் இளைஞர்கள் அந்த வாகனத்தை பின்தொடர்ந்துள்ளனர்

அவர்கள் பின்தொடர்வதனை அவதானித்த அவர்கள் குறுக்கு வீதிகள் ஊடாக வேகமாக பயணித்துள்ளனர். பின்னர் வழி தவறி குளப் பாதை ஒன்றினுள் நுழைந்த குறித்த வாகனம் அதில் கொண்டு செல்லப்பட்ட நான்கு பொதிகளை எறிந்து விட்டு குள எல்லைக்குள் சென்று அங்கு பாதை முடிவடைந்ததினால் வாகனத்தை விட்டு விட்டு தப்பிச் சென்றுள்ளனர்

பின்னர் அவர்கள் வீசிய பொதிகளைப் பார்வையிட்ட பொழுது சுமார் ஒரு கிலோ அளவிலான நான்குக் கேரளக் கஞ்சா பொதிகள் வீசப்பட்டிருந்தது.

இதன் பின்னர் கிளிநொச்சி மாவட்ட பொலிஸ் சட்டவிரோத மது ஒழிப்புப் பிரிவு விசேட குழுவினருக்கு வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையிலான குழுவினர் குறித்த கஞ்சா பொதிகளையும் வாகனத்தையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர், (ம-312)

## நாடு முழுவதும்...

டங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கமைய நேற்று முன்தினம் இரவு 11 மணி முதல் நேற்று அதிகாலை 5 மணி வரையில் இந்த சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த ஆயிரத்து 714 பேர் மற்றும் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்பு கொண்ட 787 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## மானிப்பாயில்...

குறிப்பிட்ட வீட்டுக்குள் புகுந்து கடந்த வருடம் தாக்குதல் நடத்தப்பட்ட நிலையில் இது இரண்டாவது தாக்குதலாகும்.

சம்பவத்தில் அந்த வீட்டுக்கு அருகாமையிலுள்ள வீட்டில் மேசன் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தவர் கை மற்றும் காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-9)

**விரைவு பொதிகள் சேவை**

**விசேட விலை குறைப்பு**

UK - 550 /=Kg
கனடா - 900 /=Kg
ஜேர்மனி - 700 /=Kg
நெதர்லாந்து - 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

V2 TRAVELS

**வெளிநாடு - உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை**

WESTERN UNION MONEY TRANSFER 070 330 5500 WESTERN UNION MONEY TRANSFER

அண்ணா பொதிகள் சேவை

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை - அரியாலை - சங்கானை - சுன்னாகம்
கரணவாய் - மீசாலை - கிளிநொச்சி - கனகராயன்குளம்
முல்லைத்தீவு - மன்னார் - வவுனியா - திருகோணமலை

**CNR உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால், பொதிகள் விநியோக சேவை**

- அதிவேக மற்றும் சிக்கன பொதிகள் சேவை
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- வீடு, அலுவலகங்களில் இருந்தவாறு அனுப்பும் வசதி
- அனுப்பும் பொதிகளுக்கான காப்புறுதி உத்தரவாதம்
- கடல் ஆகாய மார்க்க பெரிய சரக்குப் பரிமாற்ற சேவை

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062, 077 6655413

(C-3941)

**அரியதோர் வேலைவாய்ப்பு**

உலகளாவிய ரீதியில் இயங்கி வரும் எமது Hello E-tel PVT. LTD ஆனது முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் கிளை ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது. இப்புதிய கிளைக்கு 50 இற்கு மேற்பட்ட பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

பதவி வெற்றிடம்...

● Supervisor
● Distributors
● Administrator

மேற்குறிப்பிட்ட பதவிகள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

● கல்வித் தகைமைகள் O/L அல்லது A/L படித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
● வயதெல்லை 18 இலிருந்து 45 வரை.
● மாதச்சம்பளம் Rs.30,000/= - 75,000/= மேலும் பல கொடுப்பனவுகள்.
● தங்குமிடம் மற்றும் உணவு வசதிகள் உண்டு.

நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்

077 227 2681, 077 242 0481

CV Forwarded to email: prabaeonme@gmail.com

(5855)

# நீடு புகழ் பெற்றினிதே வாழி! வாழி



**வேதாகம யுவரத்னா**
**தியாக. மயூரகிரிக்குருக்கள்**
**(நீர்வை தி. மயூரகிரி)**

இன்றையதினம் முல்லைத் தீவு கற்சிலைமடு பண்டார வன்னியன் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் வட மாகாண பண்பாட்டு பெருவிழாவிலே **குமார காவியம்** எனும் நூலுக்காக மரபுக்கவிதைத் துறைக்கான வட மாகாண சிறந்த நூற்பரிசுக் கௌரவத்தினை பெற்றுக் கொள்கின்ற **வேதாகம யுவரத்னா தியாக. மயூரகிரிக்குருக்கள்** (நீர்வை தி.மயூரகிரி) அவர்களை வாழ்த்துவதோடு அவரது சைவ தமிழ் பணி மேன்மேலும் சிறப்படைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




**சக உத்தியோகத்தர்கள்**
**காணி மாவட்ட பதிவகம், யாழ்ப்பாணம்.**

(5847)

**NEW SCIENCE HALL**

**2019 A/L DAY CLASS**

2018 August பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது.
Mon, Tue, Wed, Thu, Fri

Physical Chemistry
3.00 - 5.30 pm

Mr.N.Maheswaran

ஆரம்பம்
01.10.2018

(C-4007)

**பயிற்சியுடன் வேலை வாய்ப்பு**

பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை

● எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.
● விரும்பியவர்கள் பயற்சி முடிவில் வேலையில் சேரலாம்.
● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7'500/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226236
v2vacancies@gmail.com

(எ-3828)

**விற்பனைக்கு**

NP DAG XXXX எனும் இலக்கமுடைய TATA Super Ace (Model- 2018) வாகனம் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 141 6052

(C-3968)

**வீடு விற்பனைக்கு**

பருத்தித்துறை நகரில், பிரதான வீதிக்கு அண்மையாக பூதராயர் ஒழுங்கையில் நல்ல கல்வீடு விற்பனைக்கு உண்டு. விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு:

0762863971

(5829)

**NEW SCIENCE HALL**

**2019 A/L DAY CLASS**

2018 August பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது.
Mon, Tue, Wed, Thu, Fri

Organic Theory with Paper
2.00 - 4.00 pm

S.V.Selvaranjan

ஆரம்பம்
02.10.2018

(C-4009)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 185

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2049 30.09.2018 தொலைபேசி : 021 222 3378





# தமிழ் மக்கள் யாரை நம்புவது

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இவை எல்லாம் நடந்தாலும் விதானையார் விசுவலிங்கம் ஏதோ யோசனையில ஆழ்ந்திருந்தார்.

என்ன விதானையார் ஏதோ கடுமையாக யோசிக்கிறியள். சாத்திரியார் சதாசிவத்தின் குரல் விதானையாரை நிதானப்படுத்தியது.

**விதானையார்:** என்ன யோசனை. நல்லினக் காளை மாட்டை இறைச்சிக்கு வெட்டிப் போட்டாங்கள்.

**பண்டிதர்:** என்ர கதிர்காமக் கந்தா. அந்தக் காளைமாட்டை இறைச்சிக்கு வெட்டிப் போட்டாங்களோ.


**கங்காணி:** எங்கட க.கு.க. சிவபாலன் ஐயா அந்தக் காளை மாட்டைக் காப்பாற்ற எவ்வளவு கஷ்டப்பட்டார். என்ன செய்யிறது. ஒருதர் கஷ்டப்பட இன்னொருத்தர் பெயர் வாங்க நினைக்கிற இந்த மண்ணில அந்தக் காளை மாட்டைக் காப்பாற்ற முடியாமல் போயிற்றுது.

**மூப்பர்:** அந்தக் காளை மாட்டை வெட்டுகிறதுக்கு பணம் பாதாளம் மட்டும் பாய்ந்ததாகக் கேள்வி. சைவசமய நலன் விரும்பிகள் சிலர் அந்தக் காளை மாட்டை விலைக்கு வாங்க முன்வந்த போதிலும் அந்த இறைச்சிக்கடைக்காரர் காளை மாட்டை அறாவிலை சொன்னவராம். அதால அந்தக் காளை மாட்டை வாங்க முடியாமல் போயிற்றுது.

**வாத்தியார்:** நல்லினக் காளைமாட்டை வெட்டுவதற்கு அனுமதித்தவியளை என்ன செய்யிறது.

**பண்டிதர்:** இது பாருங்கோ எங்கட சைவசமயத்திலதான் நடக்கும். வேணுமெண்டால் ஒரு கொழுத்த பண்டியை றோட்டு றோட்டாகக் கொண்டு சென்று நாளைக்கு வெட்டப் போகிறோம் என்று நோட்டீஸ் அடித்து விளம்பரம் செய்து பாருங்க. அவ்வாறு செய்தவற்ற தலை ஐந்து சந்தியில கிடக்கும்.

இது நாங்கள் சைவசமயம் தானே. எல்லாத்தையும் விட்டுக்கொடுத்து இழந்து போறம்.



## நல்லினக் காளைமாடு வெட்டப்பட்டது ஐயகோ!

**சாத்திரியார்:** சரி... சரி... நல்லினக் காளை மாட்டை வெட்டிப் போட்டார்கள். போதாக் குறைக்கு தீவகத்தில கட்டாக் காலியா நிற்கிற பசுக்களையும் களவாகப் பிடித்து தலைவெட்டு நடக்குது. எங்கட சைவசமய மதபீடங்கள் பேசாமல் இருக்கிறதைப் பார்க்கத் தான் மிகப்பெரும் வேதனையாக இருக்குது.

**விதானையார்:** நல்லினக் காளைமாட்டை இறைச்சிக்கு வெட்டுவது தொடர்பிலும் கண்காட்சி வைத்து காளைமாட்டைப் பார்ப்பதற்கு; யாழ். மாநகரசபையிட்ட அனுமதி பெறாமல் ரிக்கெட் விற்றதற்கும் அந்த நபருக்கு எதிராக யாழ்ப்பாண மாநகர சபை எடுத்த நடவடிக்கை என்ன?

இந்தச் சட்டவிரோத செயலில் ஈடுபட்டவருக்கு எதிராக வழக்கு வைக்காதது ஏன்? என்ற கேள்விகள் எழத்தான் செய்யிது.

இல்லையெண்டால் காளை மாட்டை வெட்டி மாட்டிறைச்சி விற்கப் போறன் எண்டு நோட்டீஸ் அச்சிட்டு, ஜீவகாருண்ய சட்டங்களுக்கு மாறாக காளை மாட்டை வாகனத்தில ஏற்றி, வீதி வீதியாகக் கொண்டு திரிந்தது தொடர்பில யாழ்ப்பாணப் பொலிஸார் சம்பந்தப்பட்டவருக்கு எதிராக எடுத்த நடவடிக்கை என்ன?

**வாத்தியார்:** நீங்கள் என்னதான் சொன்னாலும் இனி சைவசமயத்திற்கு எதிரான செயற்பாடுகள் யாழ்ப்பாணத்தில தொடர்ந்து நடக்கும். சைவசமய விசுவாசிகள் சிலர் அது பற்றிக் கவலைப்படுவினமே தவிர வேறு எதுவும் செய்ய முடியாது.

இவ்வாறு சைவசமயத்திற்கு எதிரான வேலைத் திட்டங்களில நல்லினக் காளைமாட்டை வெட்டுவதில் சம்பந்தப்பட்டவர்கள் ஈடுபடுபவர். இதற்கான ஏற்பாடுகள் எல்லாம் பூர்த்தியாகிற்றுது.

**பண்டிதர்:** வாத்தியார் இனி எங்கட காலங்களும் முடியப் போகிறது. சைவத் தமிழ் மக்களின்ர வழிபாட்டிற்குரிய பசுக்களையும் சிவனின் வாகனமாகிய எருதுகளையும் வெட்டுவதைத் தடை செய்யும் வரைக்கும் எங்கட இனம் மீண்டெழுவது கஷ்டம். இதைத்தான் நான் சொல்லுவன்.

**மூப்பர்:** இப்ப எல்லாரும் தங்க தங்க நலனைத் தானே கவனிக்கினம். தங்கட பதவியுயர்வு, தங்கட அரசியல் இலாபம், தங்கட பதவி இருப்பைத் தக்க வைக்கிறது என்பவற்றுக்காக எதையும் செய்யத் தயாராக இருக்கிற போது பொது நலன் பற்றி யார்தான் கவனம் செலுத்தப் போகினம்.

**விதானையார்:** என்ன மூப்பர் சொல்லுறியள். நீங்கள் சொல்லுறதைப் பார்க்கிற போது இதுக்குள்ள ஏதோ இருக்குது போல.

**மூப்பர்:** அண்மையில யாழ்ப்பாணத்தில உள்ள அரசாங்க வங்கி ஒன்றின்ர உயர் அதிகாரிகள் திறப்பு விழாவிற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்தவியளாம்.

இப்படி வந்த அந்த அதிகாரிகள் யாழ். நகரத்தில உள்ள ஒரு நட்சத்திர விடுதியில தங்கியிருந்த போது, அந்த வங்கியின்ர இளம் பெண் உத்தியோகத்தர்கள் நடனம் ஆடவேணும் எண்டு அந்த வங்கிக்கு யாழ்ப்பாணத்தில பொறுப்பாக இருக்கிற அதிகாரி உத்தரவிட்டு நடன நிகழ்வும் நடந்ததாம்.

**சாத்திரியார்:** என்ன எங்கட பிள்ளைகளின்ர நடன நிகழ்வு நட்சத்திரக் ஹோட்டலில நடந்ததோ

**மூப்பர்:** அதுமட்டுமல்ல நடன நிகழ்வு நடந்தபோது அந்த வங்கியின்ர உயரதிகாரிகள் இருந்த மேசையில மதுப் போத்தல்களும் இருந்ததாகத் தகவல்.

**கங்காணி:** சிவ சிவா... அந்த வங்கிக்கு யாழ்ப்பாணத்திற்குப் பொறுப்பாக இருக்கிற அந்த அதிகாரி ஏன் அப்படிச் செய்தவராம்.

**மூப்பர்:** எல்லாம் தன்ர பதவி உயர்வுக்கு எண்டு தான் அந்த வங்கிப் பணிப்பாளர்கள் கதைக்கினம்.

**வாத்தியார்:** என்ன இருந்தாலும் யாழ்ப்பாணக் கலை கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களைக் காப்பாற்றுகிறது தான் முதல் முக்கியம். உயர் அதிகாரிகளை மகிழ்விக்க வேணும் எண்டு நினைத்து எங்கட பண்பாட்டை விற்கக்கூடாது. இதனை அனைவரும் பிரதேசவாதம் இன்றிப் பின்பற்றவேண்டும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**

# தமிழ்மக்களின் எழுச்சியே விக்னேஸ்வரனின் பலம்

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆற்றிய உரை அவர் யார்? என்பதை நிரூபித்துள்ளது. இந்த நிரூபணம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்குமென்று இன்றுவரை தமிழ் மக்களை நம்ப வைத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏமாற்று நாடகத்தைப் பட்டவர்த்தனமாக வெளிப்படுத்தியுள்ளது.



தவிர, இலங்கை இறைமையுள்ள நாடு. எனவே இலங்கை அரசாங்கம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதாக ஜனாதிபதி மைத்திரியின் உரை அமைந்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரியின் உரையில் இலங்கை இறையாண்மையுள்ள நாடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளதேயன்றி இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் மக்களின் உரிமைகள்சார் விடயங்கள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்றோ அல்லது வன்னிப் பெரு நிலப்பரப்பில் தமிழின அழிப்பு நடந்ததென்றோ கூறப்படவில்லை.

மாறாக இந்த நாட்டின் ஜனாதிபதி தன் இனம் சார்ந்து அல்லது தன் இனத்திற்குச் சார்பாக உரையாற்றியுள்ளார் என்பது மட்டுமே உண்மை.

அதேநேரம் ஜனாதிபதியின் ஐ.நா. உரையை முதலில் வரவேற்றவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ என்பதை தமிழ் மக்கள் ஈண்டு கவனிக்க வேண்டும்.

தமிழ்மக்களின் வாக்குப் பலத்துடன் ஜனாதிபதிப் பதவியைப் பெற்றுக் கொண்ட மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களின் பிரச்சினைகளையும் ஐ.நாவில் எடுத்துக்கூறுவதுதான் அறமாகும். எனினும் அதனை அவர் செய்ய மறுத்து விட்டார்.

சரி இவையெல்லாம் எதிர்பார்க்கப்பட்டவையென்று விட்டால், இன்னமும் நல்லாட்சி எங்களுக்குத் தீர்வைத் தரும். அதற்காக அரசியலமைப்புச் சீர்திருத்தம் வரவுள்ளது என்றவாறு தமிழ்மக்களுக்கு நம்பிக்கை தந்து கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை நம்புவது தமிழ்மக்களுக்கு நல்லதா என்பது பற்றித்தான் நாம் சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பியிருந்தது இனிப்போதும் என்ற நிலைமைக்குத் தமிழ்மக்கள் வந்துவிட்டனர். அப்படியானால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்ற கேள்வி எழும்.

இங்குதான் தமிழர்களுக்கான அரசியல் தலைமை என்ற விடயம் சிந்திக்கப்படவேண்டியதாகவுள்ளது. தமிழ்மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அல்லது தலைமையில் இருக்கக்கூடிய ஒரு சிலர் மீது அறவே நம்பிக்கை இல்லை என்றாயிற்று.

இந்த நம்பிக்கையீனத்தை; காணாமல் போனவர்களின் உறவுகளும் தமிழ் அரசியல் கைதிகளின் குடும்பங்களும் நன்கு புரிந்துள்ளன.

மாறாக சாதாரண மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களின் நாளாந்த ஜீவனோபாயம் பற்றியும் தொழில் முயற்சிகள் பற்றியும் சிந்திக்கவே நேரம் போதுமென்றாகி விடுகிறது. இவர்களிலும் ஒரு பகுதியினர் ஊடகச் செய்திகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு பொழுதுபோக்குவதற்கு நேரம் கிடைக்கின்ற போது நம் அரசியல் பற்றி சிலாகிக்கின்றனர். ஆனால் இவை எதுவும் மிகப் பெரிய தாக்கத்தை தமிழர் அரசியலில் ஏற்படுத்திவிடப் போவதில்லை.

ஆக, தமிழ்மக்களுக்கான புதிய அரசியல் தலைமை என்பதை உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் உள்ள தமிழ்ப் புத்திஜீவிகளும் தமிழ்ப் பற்றாளர்களுமே முன்னிறுத்தி அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும்.

இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் தமிழ்மக்களின் நம்பிக்கைக்குரிய ஒரே தலைவர் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் என்றால் அது மிகையன்று.

இருந்தும் அவருக்கான தனியான அரசியல் கட்டுமானம் இல்லை என்பதும் அவர் ஒரு நீதியரசர் என்பதால், சுயநல அரசியல் வியூகங்களை அமைப்பதை அவர் ஒருபோதும் விரும்பவில்லை என்பது தெளிவாகிறது.

இதற்கு மேலாக ஆன்மீகத்தில் அவுருக்கு இருக்கக் கூடிய நம்பிக்கைகள், எதையும் வெளிப்படையாகக் கூறுவதே தர்மமான வாழ்வு என்ற நிலைப்பாட்டை அவரிடம் ஏற்படுத்தி இருக்கிறது.

பொதுவில் உண்மையைக் கூறுபவர்கள் மீது தான் அதர்மம் நிறைந்த இந்த உலகு கடுமையான எதிர்ப்பைக் காட்டும். இந்தத் தத்துவம் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்களின் அரசியல் வாழ்விலும் கடுமையாக வேலை செய்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து அவர் வெளியேறி புதியதொரு அரசியல் கட்சியை ஆரம்பித்து விட்டால், அது தமக்குப் பெரும் பாதகத்தை ஏற்படுத்துமென நினைக்கின்ற கூட்டமைப்புச் சார்ந்தவர்கள் அவருக்கு எதிராகப் பல்வேறு செயற்பாடுகளைச் செய்து முடிக்கின்றனர்.

அவருக்கு எதிராகச் செய்திகளைத் திரிவுபடுத்தி வெளியிடுகின்ற நுட்பங்களும் தாராளமாக அரங்கேறுகின்றன.

இவை நடந்து கொண்டிருந்தாலும் இவற்றையெல்லாம் கடந்து, தமிழ்மக்களுக்கான ஒரு புதிய அரசியல் தலைமை என்ற சிந்தனை நம் தமிழ் ஊடகங்களிடமும் தமிழ் மக்களிடமும் கடுமையாக எழுச்சி பெறவேண்டும். அப்போதுதான் தமிழ் மக்களின் எதிர்காலம் என்பது கடந்து வந்த மிக மோசமான காலச் சுவடுகளைச் செம்மைப்படுத்தி ஒரு நல்ல வழிப்பயணத்திற்கு உதவுவதாக அமையும்.

இங்குதான் தமிழ் மக்களின் ஒட்டுமொத்த ஆதரவும் பேரெழுச்சியும் தேவைப்படுகிறது.

ஆம், நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தமையால், அவர் தமிழ்மக்களின் பிரச்சினைகளை மிகத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

இதற்காக அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலத்த எதிர்ப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டியவராக இருந்துள்ளார்.

தமிழ்மக்களின் பிரச்சினை தொடர்பில் உள்ளும் புறமும் எடுத்துரைப்பதற்கு முதலமைச்சர் என்ற பதவி அவருக்கு அங்கீகாரம் வழங்கியது.

இப்போது வடக்கு மாகாண அரசின் பதவிக்காலம் முடிவுறும் தருவாயில், தமிழ் மக்கள் பேரவையை வலுவாக முன்னெடுக்கவுள்ளேன் என்பதாக முதலமைச்சர் விக்னேஸ்வரனின் செய்தி அமைந்துள்ளது.

இது ஏற்புடையதாயினும் மக்கள் பிரதிநிதி என்ற அங்கீகாரத்துடன் கருத்துரைப்பதற்கான தகைமை நிலையை தனித்து தமிழ் மக்கள் பேரவை தந்துவிடாது.

ஆகையால் தமிழ் மக்கள் பேரவையை வலுவாக முன்னெடுத்துச் செல்வது எவ்வளவு அவசியமோ அதேபோன்று வடக்கின் முதலமைச்சர் என்ற தகுதிப்பாட்டைத் தொடர்ந்தும் நீதியரசர் விக்னேஸ்வரன் வைத்திருக்கும் போதுதான் தமிழ்மக்களுக்கான அவரின் கருத்துக்கள், யதார்த்தங்கள் சர்வதேசத்தின் செவிகளைச் சென்றடையும்.

இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை நீதியரசர் விக்னேஸ்வரன் எடுக்க வேண்டும் என்பது தமிழ்மக்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

அதாவது வடக்கு மாகாண அரசு காலாவதியானவுடனேயே நீதியரசர் விக்னேஸ்வரனுக்கான பக்க பலத்தை தமிழ்மக்கள் வழங்குவதுடன் ஒருபெரும் மக்கள் எழுச்சி பிரவாகமடைய வேண்டும்.

அதுவே எங்களுக்கான ஆரோக்கியமான அரசியல் தலைமையைத் தருவதாக இருக்கும்.

**திருநீலகண்டன்**




ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம்
பகுதியில்
உங்கள் ஆக்கங்கள் இடம்பெற
வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை
அனுப்பி வையுங்கள்.

## எல்லாளன் பற்றிய வீர வரலாறு

எல்லாளன் கி.மு. 145 இல் இருந்து கி.மு. 101 வரை அநுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த தமிழ் மன்னன் இந்தத் தகவலைச் சிங்கள வரலாற்று ஆவணமான மகாவம்சம் பதிவுசெய்துள்ளது. இவனது ஆட்சிக்காலம் நீதியானதாகவும், சிறப்பானதாகவும் அமைந்ததாகப் பொதுவாக சிங்களச் சார்பான ஆவணமாகப் பார்க்கப்படும் மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

மகாவம்சத்தின்படி எல்லாளன் தென்னிந்தியாவில் இருந்து படையெடுத்து வந்த சோழ நாட்டைச் சேர்ந்த ஒருவன் ஆவான். இவன் "பெருமை மிக்க உஜு இனக்குழுவைச்" சேர்ந்தவன் என்று மகாவம்சம் கூறுகிறது. ஆனால் எல்லாளன் ஈழவூரின் உத்தரதேசத்தை (தற்போதைய பூநகரி) சேர்ந்தவன் என்று சிலர் கருதுகிறார்கள். அதற்கான ஆதாரமாக, உத்தரதேசத்தில் குறுநில மன்னனாக எல்லாளன் முதலில் விளங்கியமையால் தான் வவுனிக்குளத்தை அக்காலவேளையில் கட்டியுள்ளான் என்பர். ஆங்கிலேய நாட்டவரான எச்.பாக்கர் மகாவம்சத்தில் அநுராதபுரத்திற்கு வடக்கேயமைந்த




பெலிபியை பூநகரியின் தென்னெல்லையிலுள்ள பாலியாறு என அடையாளம் கண்டு இங்குள்ள வவுனிக்குளத்தின் ஆரம்பத்தோற்றம் எல்லாளனின் சாதனைகளில் ஒன்றாக இருக்கலாமெனக் கூறியுள்ளார்.

### இலங்கையை 44 ஆண்டுகள் ஆண்ட தமிழ் மன்னன்

எல்லாளன் என்ற தமிழ் மன்னன் இலங்கையை 44 ஆண்டுகள் ஆண்டதாக ஆதாரபூர்வமான வரலாறு கூறுகிறது.சிங்களர்கள்தான் இலங்கையின் பூர்வக்குடிகள் என்று நிரூபிப்பதற்காக எழுதப்பட்ட நூல் "மகாவம்சம்" சிங்கள வம்சத்தை தோற்றுவித்தவன் விஜயன்தான் என்று அந்நூல் கூறுகிறது. ஆனால், அவன் இலங்கையில் காலடி வைக்கும்போதே, அங்கே குவேனி என்ற தமிழ் அரசி இருந்திருக்கிறாள் என்று அதே மகாவம்சம் குறிப்பிடுகிறது. அப்படியானால், விஜயனுக்கு முன்பே தமிழர்கள் அங்கு வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை மகாவம்சமே ஒப்புக்கொள்கிறது. இலங்கையின் மற்றப் பகுதிகள் காடுகளாக இருந்த போது, அநுராதபுரத்தை பெரிய நகரமாக தமிழர்கள் உருவாக்கி, அங்கிருந்து ஆட்சி நடத்தியிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

விஜயன் தனக்கென்று ஒரு இராச்சியத்தை உருவாக்குவதற்கு முன்பே, அநுராதபுரத்தில் தமிழ் மன்னர்களின் ஆட்சி நடந்திருக்கிறது. விஜயனின் வருகைக்கு சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பே அநுராதபுரம் பெரிய நகரமாக இருந்திருக்கிறது என்பது, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடிப்பு. அந்தக் காலத்தில் இந்தியாவில் உஜ்ஜயினி பெரிய நகரமாக இருந்தது. அதற்கு சமமாக அநுராதபுரம் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

## வீரச்செயல்



முன்னொரு காலத்தில் இரத்தினபுரி நாட்டை ஆண்டு வந்த அரசர், தன் மந்திரி வர்ணனிடம் பேசிக் கொண்டு இருந்தார். அவர்களின் பேச்சு அறிவுக்கூர்மை பற்றி இருந்தது.

"அறிவுக்கூர்மை உடையவர்களால் எதையும் செய்து முடிக்க முடியும். அவர்களால் செய்ய இயலாத செயலே இல்லை" என்று கூறினான் மந்திரி.

அவன் கருத்தை அரசர் ஒப்புக் கொள்ளவில்லை.

"அரசே! செய்ய இயலாத செயல் ஒன்றைச் சொல்லுங்கள்... நான் அதைச் செய்து காட்டுகிறேன்" என்றான் மந்திரி!

"மந்திரியே! நீ ஏதேனும் வீரச் செயல் செய்யப் போவதாகச் சொல்ல வேண்டும்.

அதற்காக மக்கள் கூட்டத்தைக் கூட்ட வேண்டும். அதைச் செய்யாமல் அவர்களிடமிருந்து தப்பிக்க வேண்டும். உன்னால் முடியுமா?" என்றார் அரசர்.

"அரசே! மிக எளிய செயலைத் தான் சொல்லி இருக்கிறீர்!" என்றான் மந்திரி.

"மந்திரியாரே! நீ நினைப்பது போல் இது எளிய செயல் அல்ல. வீரச் செயல் செய்வதாகச் சொல்லி, மக்களின் கூட்டத்தைக் கூட்டுவது எளிது.

பிறகு அதைச் செய்யாவிட்டால், அந்தக் கூட்டம் உன்னைத் தப்பிக்க விடாது. நீ அவமானப் படத்தான் போகிறாய்" என்றார்.

"அரசே! இதில் எனக்கு எந்த அவமானமும் ஏற்படாது.

பொறுத் திருந்து பாருங்கள்" என்ற மந்திரி அங்கிருந்து சென்றான்.

சில நாட்கள் சென்றன.

மக்கள் கூட்டம் கூட்டமாகச் செல்வதைப் பார்த்தார் அரசர்.

வியப்படைந்த அவர் தன் வேலையாட்களிடம், "மக்கள் கூட்டமாக எங்கே செல்கின்றனர்?" என்று கேட்டார்.

"அரசே! எல்லோரும் கோயிலை நோக்கிச் செல்கின்றனர்.

அங்கே கோபுரத்தின் உச்சியில் மந்திரி நின்று கொண்டிருக்கிறார்.

இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன் என்று கத்திக் கொண்டிருக்கிறார். அதை வேடிக்கை பார்க்கத்தான் எல்லாரும் சென்று கொண்டிருக்கினறனர்" என்றான்.

தான் வைத்த சோதனையின் முதல் பகுதியை செய்து விட்டான். இதிலிருந்து அவன் எப்படி தப்பிக்கப் போகிறான்? அதைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் அவருக்கு ஏற்பட்டது.

என்ன நடக்கிறது என்பதை வேடிக்கை பார்க்க அவரும் அருகே சென்றார்.

கோபுரத்தின் உச்சியில் மந்திரி நின்றிருந்தான்.

"இன்னும் சிறிது நேரத்தில் கீழே குதிக்கப் போகிறேன். இப்படி யாரும் இதுவரை செய்தது இல்லை" என்று கத்திக் கொண்டிருந்தான்.

அவன் குதிப்பதை வேடிக்கை பார்க்க நகர மக்கள் எல்லோரும் அங்கே வந்திருந்தனர்.

"நான் ஒன்று, இரண்டு என்று பத்து வரை எண்ணப் போகிறேன். பத்து என்று சொன்னதும், கீழே குதிக்கப் போகிறேன்.

நான் பேச்சுத் தவற மாட்டேன். என் வீரச்செயலைப் பார்க்கத்தான் போகிறீர்கள்" என்ற அவன் ஒன்று, இரண்டு என்று எண்ணத் தொடங்கினான்.

என்ன நடக்கப் போகிறதோ என்று ஆர்வத்துடன் மக்கள் பார்த்துக் கொண்டிந்தனர்.

ஒன்று, இரண்டு என்று எண்ணிக் கொண்டிருந்தான் மந்திரி.

அவன் கண்கள் கூட்டத்தில் யாரையோ தேடின... தான் தேடியவன் வந்திருப்பதை அறிந்து, தொடர்ந்து எண்ணத் தொடங்கினான்.

அவன் ஒன்பது என்று எண்ணினான்.

கூட்டத்திலிருந்து ஒரு குரல். "எண்ணுவதை நிறுத்தி விட்டுக் கீழே வாருங்கள்" என்று கேட்டது.

யார் குரல் கொடுத்தது என்று எல்லோரும் பார்த்தனர்.

அங்கே மந்திரியின் மகன் கையில் ஒரு பாத்திரத்துடன் நின்றிருந்தான்.

உரத்த குரலில் அவன், "தந்தையே! உங்களுக்கு மிகவும் பிடித்தமான பணியாரம். அம்மா ஆசையாக உங்களுக்காகச் செய்தது. கீழே இறங்கி வந்து இதைச் சாப்பிடுங்கள். பிறகு குதியுங்கள். மீண்டும் இதைச் சாப்பிடுவீர்களோ, இல்லையோ... யார் கண்டது!" என்றான்.

"எனக்கு மிகவும் பிடித்த பணியாரத்தை என் மகன் கொண்டு வந்திருக்கிறான். நீங்கள் அனுமதி தந்தால் அதைச் சாப்பிட்டு விட்டுப் பிறகு குதிக்கிறேன்.

நீங்கள் அனுமதி தருவீர்களா?" என்று கேட்டான்

எல்லோரும் தங்களுக்குள் ஏதோ முணுமுணுத்தனர்.

"பணியாரத்தைச் சாப்பிட்டு விட்டுக் கீழே குதி" என்று அவர்களில் ஒருவர் குரல் கொடுத்தார்.

கீழே இறங்கி வந்தான் மந்திரி. தன் மகனின் கையிலிருந்த பாத்திரத்தை வாங்கினான்.

அதிலிருந்த பணியாரத்தைச் சுவைத்துச் சாப்பிட்டான். அப்படியே மயங்கி விழுந்தான்.

இதைப் பார்த்த கூட்டத்திலிருந்த சிலர், "அதிர்ச்சியில் மயக்கமாகி விட்டான்" என்றனர்.

மற்றும் சிலர், "உயிர் தப்புவதற்காக மயக்கம் வந்தது போல நடிக்கிறான்" என்றனர்.

அரண்மனை மருத்துவர் அங்கு வந்தார்.

மந்திரியை சோதித்த அவர், "உண்மையிலேயே மயக்கமாகி விட்டான். மயக்கம் தெளிய ஏழெட்டு மணி நேரம் ஆகும்" என்றார்.

மந்திரியை, அவர் வீட்டிற்குத் தூக்கிச் சென்றனர்.

"ஐயோ! இப்படியாகி விட்டதே!" என்று பேசிக் கொண்டே கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

மறுநாள் அரசரைச் சந்தித்தான் மந்திரி.

"நீங்கள் சொன்னது போல வீரச் செயல் செய்வதாக பெரிய கூட்டத்தைக் கூட்டினேன்.

அவர்கள் எதிரிலேயே அந்தச் செயலைச் செய்யாமல் வந்து விட்டேன். எப்படி என் திறமை?" என்று கேட்டான்.

"அப்போது உன் மகன் பணியாரங்களுடன் வரவில்லையானால் உன் நிலை, என்னவாகி இருக்கும்?" என்று கேட்டார் அரசர்.

"அரசே! அந்தப் பணியாரங்களுக்குள் மயக்க மருந்து கலந்து எடுத்து வரச் சொன்னதே நான் தான்.

எல்லாம் என் திட்டப்படி நடந்தது" என்றான் மந்திரி.

"அறிவுக்கூர்மை உள்ளவர்களை யாராலும் வெற்றி பெற முடியாது என்பதை உன் மூலம் புரிந்து கொண்டேன்" என்று அவனைப் பாராட்டினார் அரசர்.








## பிக்போஸ் பார்க்கிறீர்களா? எப்படிப் போகிறது?

## நண்பர்கள் துரோகிகளாக மாறும் சந்தர்ப்பம் எது?

## திலீபனின் நினைவேந்தல் எப்படி இருந்தது?

**கோட்வின் — யாழ்ப்பாணம்**

**எதையும் பொறுமையாகச் சிந்திக்காமல் தற்கொலைக்கு முயற்சிக்கிறார்களே?**

என்ன நாசமோ, பாவப்பட்ட இனம் தமிழினம் என்பதை காலம் காலமாக உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் சிலர். பயங்கரவாத அழிப்பு என்று கூறிக்கொண்டு குண்டுகளைக் கொட்டி தமிழினத்தை வேரறுத்தது ஒரு இனம்.

வேர்விட்டு துளிர்க்க நினைத்த இனத்தின் வேர்முனைகளுக்கு போதை தடவி வாள் வெட்டை அரங்கேற்றியது. கம்பனி கம்பனி யாய் கொண்டுவந்து கடன் கொடுத்து வட்டி கறந்து என் இனத்து இரத்தங்களில் தற்கொலை ஜீன்களை விதைத்ததும் எல்லாம் எல்லாம் பக்கா பிளான் அவ்வளவுதான்.

**தர்மா — யாழ்ப்பாணம்**

**திலீபனின் நினைவேந்தல் எப்படி இருந்தது?**

நினைவேந்தலை மாநகர சபை பொறுப் பேற்றது பல பிரச்சினைகள் வராமல் தடுக்க உதவியது. அகிம்சையை உலகிற்குக் கற்பித்த உன்னத தமிழனின் நினைவேந்தலில் அடிபடுவது அவ்வளவு நல்லதல்ல. கதிரை கள் இல்லாத நினைவேந்தல் கொட்டகை அருமை.

“திலீபன் நினைவேந்தல் நிகழ்வுக்கு கதிரை கள் வைக்கப்படமாட்டாது. வீட்டில் இருந்து கதிரைகள் கொண்டு வரவும் தடை” இது ஒரு நண்பரின் முகப்புத்தகப் பதிவு. செம்பு தூக்கி களுக்கு நல்ல செருப்படியாய் இருந்திருக்கும் என்பது உண்மை.

**கரன் — இணுவில்**

**வாழ்க்கை வட்டம் என்கிறார்களே. வியாசரே அது எப்படி?**

வாழ்க்கைக்குத் தேவையான இட்லி, தோசை, ரொட்டி, வடை, வாய்ப்பன் என அனைத்தும் வட்டமாகத் தானே இருக்கிறது. அதனால் தான் வாழ்க்கை ஒரு வட்டம் என்கிறார்கள் போல.

**ஆரா — யாழ்ப்பாணம்**

**பிக்போஸ் பார்க்கிறீர்களா? எப்படிப் போகிறது?**

சண்டை, சச்சரவு, அழுகை, சோகம், பாசம் என பல்பரிமானங்களை அந்த வீட்டில் காண முடிந்தது.

தவறு செய்தவர் தம்மைத் திருத்திக் கொள்ள வும் திருந்தியவர் மன்னிப்பு என்ற உன்னத வார்த்தையை உதிர்த்தவும் மனித வாழ்க் கைக்கு பெரும் பாடத்தை கற்றுத் தருகிறது பிக்போஸ் என்கின்ற நிகழ்வு.

**பாதிக்கப்பட்ட ஒருவன்**

**சம்பந்தமில்லாமல் சிலர் சில இடங்களில் மூக்கை நுழைப்பது சரியா?**

மூக்கை நுழைப்பதால் மூக்கை இழக்க வேண்டிவரும் கவனம்.

**அம்மு — கோணாவில்**

**எங்கள் கேள்விகளுக்கு பதில் எழுத உங் களுக்கு பைத்தியமா வியாசரே?**

பைத்தியங்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஒரு பைத்தியத்தால் மட்டும் தான் முடியும் என்று என்னைப் பார்த்த பைத்தியம் ஒன்று சொன் னது. அது இப்போது தெளிவாகிறது.

**வேதா — யாழ்ப்பாணம்**

**தமிழர்களின் அடையாளம் என்ன?**

ஒற்றுமை, தியாகம், கொண்ட கொள்கையில் உறுதி, மண்பற்று, இனத்தின் விடுதலைகள் தன் உயிரை தியாகம் செய்வது.

இந்தக் குணம் எல்லாம் ஒரு காலத்தில் தமி ழினத்திற்கு இருந்தது என்று கூறுமளவில் நிலை இருக்கிறது. இப்போது கதிரை கதிரை கதிரைக்கருகில் செம்பு, செம்பு அவ்வளவு தான்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை**

**வியாசரிடம் கேளுங்கள்**

**021 567 1532, 076 636 3378 என்ற Viber இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**சதீஸ் — முகமாலை**

**ஏழையின் சிரிப்பிலே இறைவன் உள்ளான் என்கிறார்களே உண்மையா?**

இந்தப்படத்தைப் பார்த்து புரிந்து கொள் ளுங்கள்.



**ஜீபா — கரவெட்டி**

**உரிமையை வெளிப்படையாக கூட்டமைப்பு கேட்காதா?**

காய்ந்து போன பூமியெல்லாம் வற்றாத நதியைப் பார்த்து ஆறுதல் அடையும். அந்த நதியே காய்ந்து போயிற்றா...

**சுதன் — குப்பிளான்**

**விக்கி ஐயா சொல்லும் சம்பந்தனின் வலது கரம்தான் கூட்டமைப்பில் பிரச் சினையா?**

ஆமை பிடிப்பார் மல்லாத்துவார் யாமது சொன்னால் பாவம்.

**சயன் — யாழ்ப்பாணம்**

**தலை இடி, காய்ச்சல் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும் என்கிறார்களே. அது என்ன?**

வீதியில் பிரேத ஊர்வலம் செல்லும். அதற்கு மதிப்பளித்து வீதி ஓரமாக எமது சைக்கிளை நிறுத்தி அவ்வூர்வலம் சென்றபின் செல்லும் மனநிலை எம்மில் யாருக்காவது உண்டா.

தன் இரத்த உறவை இழந்து கொள்ளிக் குடம் சுமந்துவரும் அந்த ஜீவன் நாமாக இருந்தால் எமது மனநிலை எப்படி இருக்கும்.

எமது நெருங்கிய உறவுகளுக்கு மரணம் வரும் போது எப்படிப்பட்டதோ அதே அளவு தான் மற்றவருக்கும் இருக்கும் என்பதை உணர்ந்து கொள்வது தான் இது.

**மயூரதன் — இணுவில்**

**நண்பர்கள் துரோகிகளாக மாறும் சந் தர்ப்பம் எது?**

மண், பெண், பொன் இந்த மூன்று ஆசை களும் எப்போது அளவுக்கு மீறிச் செல் கிறதோ அங்கு துரோகம் முளைக்கத் தொடங்கும்.

**மதி — யாழ்ப்பாணம்**

**காதல் என்கின்ற கறுமத்தில் அப்படி என்ன இருக்கிறது?**

மழைகாலத்தில் வரும் விட்டில்பூச்சிகள் இருக்கிறதே ஒளியைத் தேடி ஓடிவரும். அந்த ஒளியில் போய் முட்டி மோதி தம்மைத் தாமே மாய்த்துக் கொள்ளும். ஆனாலும் அவை ஒளியைத் தேடிய தம் மாய்ப்புப் பயணத்தை நிறுத்துவது இல்லை. இதுபோலத்தான் காதலும் வெட்ட வெட்ட முளைத்து கொண்டே இருக்கும்.






## நட்பல்ல நடிப்பு

பூவை தென்றல் சீண்டும்போது பூவிற்கு தெரிவதில்லை
என்றோ ஒருநாள் தென்றல் புயலாய் உருவெடுத்து
பூவை சிதைக்குமென்று

மேகம் போல வந்தாயே பாவமெல்லாம் எங்கோ
பறந்தோடிப் போனதென்றேன்
சாபமாய் நீ எனக்கு கிடைத்ததை அறியாமல்
பள்ளத்தில் விழுந்தபோது
கள்ளம் இல்லாமல் கை கொடுத்தாய்

உள்ளம் குளிர்ந்தது அதனால்
வெள்ளத்தில் நீ என்னை தள்ளிவிடாதவரை

விழும்போது கைகொடுக்கும் நட்பே
விழவைக்கிறது என்றால்
அதன் பெயர் நட்பல்ல நடிப்பேயாம்

என்னவளின் அன்பு நடிப்பாக அமைந்ததனால்
மடிப்பாகக் கிழிகிறது நம் நட்பு
நானொரு பக்கமாகவும் என்னவள் மறுபக்கமாகவும்

ஆர்த்திகா சுவேந்திரன், தொல்புரம் கிழக்கு



## வாழ்க்கைப் பயணம்

வாழ்வை மீண்டு வரத்துடிக்கும்
இளைஞன் ஒருவனின்... அல்ல
ஓராயிரம் பேரின் கதை இது

பாடுபட்டால் பயனுண்டு
என்ற வார்த்தையை நம்பி
பயனேதும் இல்லை

குவித்த ஏணிகளை
நிமிர்த்த நேரமின்றி
குவியல் உச்சியில் நின்று
எட்டாத எல்லைக்காய் துள்ளுகிறான்

சிலந்தி வலை பின்னும் கதை கண்டு
தன்னைத் திடப்படுத்தி
தோல்விகளை மிதித்தபடி
வெற்றியை நோக்கி ஓடுகிறான்

பகலில் ஒரு வேலை
இரவில் பார்ட்ரைம் என
சிட்டாய்ப் பறக்கிறான்
பணமும் சீட்டாய்க் கரைகிறது

கூட்டில் சேர்த்த காசை
ஒரு வீடாய்க் கட்டிவிட
மாடாய் உழைக்கிறான்
தினம் ஓடாய்த் தேய்கிறான்

தன்னை உருக்கி தினம்
பிறர்க்கொளி கொடுக்கும்
மெழுகாய் உருகும் வாழ்வை
எள்ளி நகைக்காமல்
எட்டி நடக்கிறான் ஏனோ சிரிக்கிறான்

பாட்டி கதை கேட்டு வளர்ந்தவன்
பாடாய்ப் படுகிறான்
பாராமுகங்களும் பார்த்தும்
பாராமல் செல்லும் முகங்களும்
படர்கின்றன
தட்டி விட்டபடி நடக்கிறான்
தனக்கான வாழ்வை நோக்கி...

மாவை. நா. கஜேந்திரன்

## முதுமையில் வறுமை

திரும்பிச்செல்ல
வறுமைக்குத் தெரியாது-என்
வாழ்வில் வந்தவழி
ஆண்டவனுக்கு மட்டும்
தெரியாத உண்மை
அரசாங்கத்திற்குத் தெரிந்த
அறுபது வயதில் ஓய்வு
என் முதுகெலும்புக்குத் தெரியாது
அதன் எதிரி
முதுமைதான் என்று...
எனக்குத் தெரியாத ஒன்று
ஔவை
அனுபவிக்காததோ- இந்த
முதுமையில் வறுமை என்று...

ஸ்ரீயோதா, மண்டைதீவு

## நற்பண்புகளால் நாமுயர்வோம்

சிந்தையில் நல்ல பண்புகளைத் தெளிவோம்
விந்தையுலகை விரைவினில் நாம் படைப்போம்
முந்தை வினைகளைப் பண்பினால் வெல்வோம்
நிந்தனையற்றதோர் சமூகத்தை நாம் சமைப்போம்

தந்தையைத் தாயைத் தயைமிகு குருவை
எந்நாளும் தலைதாழ்ந்து பணிந்து தொழுவோம்
எம்முயிர் போலென்றும் மன்னுயிர் காப்போம்
எம்மால் இயன்றதை முகமலர்ந்து ஈவோம்

ஒருதாய் பிள்ளைகளாய் ஒருமித்து செயற்படுவோம்
பெருமை சிறுமைகள் காட்டாது வாழ்வோம்
வறுமையிலும் செம்மையாய் வாழப்பழகிடுவோம்
பொறுமையில் புனிதராய் நாட்டினில் உயர்வோம்

ஆசைகள் அறுத்து நேசத்தால் இணைவோம்
வேதனை தந்திடும் செயல்களை மறப்போம்
பேதங்கள் தவிர்த்து சாதனையால் உயர்வோம்
தேசத்தில் பண்புடைய மனிதராய் மிளிர்வோம்

திருமதி நவமணி ராஜகுமார்
கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்

# மௌனத்தின் தேடல்- 415



## சாவுமணி

பட்டினிச்சாவுக்கு கடைசி
உணவுப் பொதி இதுவே!
இனிமையான விசத்துளிகள்
உணவுக்கு வர்ணம் தீட்டின
பசியைத் தீர்த்து
சாவுக்கு மணியடிக்கும்
கடைசி உணவும் இதுவே!
பூந்தளிர்களை மடியில் இருத்தி
பாசத்தோடு ஆகாரம்
பிசைந்தூட்டும்
பாசமிகு கொடியவளே!
உன் கொடூரத்தை அறிவார்களோ!
இந்த இளந்தளிர்கள்

மு.சிவஞானம்
ஏழாலை தெற்கு,
மயிலங்காடு.

## ஏதுமில்லை

சொந்த மண்ணும்
சொந்தமில்லை
சொந்தங்களும்
அதனால்
சொந்தமில்லை
தண்டவாளம்தான்
சொந்தமானதோ
தலைசாய்ந்துறங்க
பாடை ஏறினும்
ஏடது கைவிடேல்- என்ற
காத்திருப்போ தாயே

இணுவில்
வாகீசன்

## புத்தி இருந்தால்தான் புவியில் வாழலாம்

மதிகெட்ட சிங்கம்
மாண்டது கிணற்றில்
விதிவிட்ட வழி என்று
மாண்டனர் மூடர்
வண்டிச் சக்கரம் போல்தான்
வாழ்க்கை போகும்
இது யாவும் அறிந்துமா?
இங்குவந்து அமர்ந்தாய்
செயல்கண்டு பூரித்தேன்
உன்நிலை கண்டு வருந்தினேன்
உறுதியாய் நில் உலகை வெல்லலாம்
இதயம் நோகுது எழுந்து போங்கள்
பாதைபுரியாமல் படுகுழியில் விழாதே

வே.லக்ஸ்மி, ஆனைப்பந்தி

## அரங்கேற்றம்

பட்டினிக்கு தீனியில்லை
மானத்தோடு வாழமுடியவில்லை
சாவுக்கு தீனிபோடும்
தாய்மையின் உள்ளமே!
பட்டினி சாவுக்கு முத்திரை குத்த
இன்னொரு சோமாலியாவா
அரங்கேறப் போகிறது
புகையிரத வீதியிலே

சி.லோட்டஸ்லோறெல்
யா/ யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

## தாயின் வழிகாட்டல்

தண்டவாளம் போல்
வாழ்க்கை மிக
நீளமாய் சென்று கொண்டிருக்கும்
ஆதலால் பிள்ளைகளே
நாம் புகையிரதம்
போல் வேகமாய்
ஈடுகொடுத்து ஓடவேண்டும்
அதற்கு கல்வியையே
ஆயுதமாய் எடுப்போம்

இணுவில் த.மயூரதன்
ஸ்கந்தவரோதயா

## தாயின் பாசம்

வாழ்க்கைப் பயணத்தில்
செல்லுகின்ற பாதையெல்லாம்
கஷ்டங்கள் வந்துவிடக்கூடாதென
என் கரங்களைப் பிடித்து
என்கூடவே நடக்கின்றாய்
கல்விதனை நீ ஊட்டி
காலமெல்லாம் உன்னை
நான் சுமக்க வேண்டி
உன் காலடியில்
வீழ்ந்து கிடக்கின்றேன்
உன் அரவணைப்போடு

நிரூஷினி
ஆனந்தராஜன்

# இவ்வார மௌனத்தின் தேடல் –416



அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை

ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி–சங்குநாதம்
இல.03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்

## எங்கே பயணம்?

உயிர் வாழ்க்கை
பயணம் தொடர்ந்தும்
தொடரமுடியாமல்
உலகை விட்டுச்
செல்லும் பயணமோ?
இந்த முடிவு
தற்கொலையில் முடிவா?
தொடருந்து செல்லும் பாதையில்
உண்மையை படம் பிடித்தவர்
நிதர்சன நிகழ்வு விபத்தாகிவிடும்
என உணர்ந்து விபத்தை
தடுத்திருப்பர்

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## தலை வணங்குகிறோம்

தெருவிளக்கில் கல்வி கற்று
தலைவனானார் லிங்கன்
வாட்டும் வறுமையிலும்
இரும்புப் பாதையை இருப்பிடமாக்கி
உன் வழித்தோன்றல்களுக்கு
எழுத்தறிவிக்கும் ஏந்திழையாளே
உன் பெண்மையின் துணிவுக்கு
நாம் தலை வணங்குகிறோம்
கலங்காதே, திகையாதே திடங்கொள்
நிச்சயமாய் ஓர் நாள்
இந்தப் பிஞ்சுகள் மத்தியிலிருந்து
ஒரு லிங்கனோ ஐன்ஸ்டீனோ
அல்லது கலாமோ வெளிப்படுவர்

மார்க் ஏப்ரகாம், வதிரி

## புதுமைப்பெண் நீ

தண்டவாளம் வாங்கில்
தாய்தானே ரீச்சர்
கண்ட இடமெனினும்
மழலை கல்வியூட்டல்
தான் சிறப்பு
பல்கலையின் படலைதனைப்
பார்த்தாயோ தெரியவில்லை
கல்வியின் சிறப்பு உணர்ந்த
கவி பாரதியின்
புதுமைப்பெண் நீ

ஜெகவளவன், நாரந்தனை

# யதார்த்தம்




கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபம் பெரும் ஆரவாரமாகக் காணப்பட்டது. நிறைகுடம், குத்துவிளக்கு எல்லாம் வைக்கப்பட்டு மண்டபம் நன்கு அலங்கரிக்கப்பட்டு மண்டபம் நிறைந்த ஜனத்திரளுடன் பாண்ட் இசைக் குழு இசை முழங்க, விருந்தினர்கள் அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் இனிதே ஆரம்பமானது. தேசிய ரீதியில் சிறந்த வைத்தியர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பாராட்டு விழாவில் கலந்து கொண்டிருக்கும் உங்கள் அனைவருக்கும் இந்நேரவணக்கம். உயிர்காக்கும் உன்னத தொழிலை மேற்கொள்ளும் வைத்தியர்களில் தேசிய ரீதியில் சிறந்த வைத்தியரை தெரிவுசெய்து ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்வில் கௌரவம் பெறும் வைத்தியர்கள் வரிசையில் முதலாமிடம் பெற்று எமது தமிழ் மக்களுக்குப் பெருமை சேர்த்த பொது வைத்திய நிபுணர் ஜெந்தியின் உரை தற்போது இடம்பெறும்.

அவைக்கு வணக்கம் கூறி, தன் பேச்சாற்றுகையால் சபையைக் கவர்ந்தாள் ஜெந்தி, நான் இன்று தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றுள்ள சிறந்த வைத்தியர். ஒரு விதத்தில் அது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் என்னைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு எனது அப்பா பட்ட துன்பம் என்னால் மறக்கமுடியாது. அப்பாவே பல தடவை பிறருக்குச் சொல்லி வேதனைப்பட்டதை நான் அவதானித்தவள். என் பெற்றோரின் விடாமுயற்சியும் தூண்டுதல்களும் என்னை ஊக்கப்படுத்தின. அதைவிட எனது பாடசாலை ஆசிரியர்கள் அனைவரும் எனக்கு நல்ல ஒத்துழைப்பு வழங்கியிருந்தார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள். என்


> “ பிள்ளை எந்தப் பாடசாலையில் கற்றாலும் சிறந்தவராவர். நான் கிராமத்து மூலையில் கிடந்த எனது பாடசாலை அன்னையில் கற்று புலமைப் பரிசிலில் முதலிடம் பெற்றதும் பல நகர்ப்புற பாடசாலைகள் என்னை நோக்கி வலைவீசின. ஆனால் நான் என் பாடசாலையை விட்டு நகர்ப்புறம் செல்லவே இல்லை. க.பொ.த. உயர்தரத்தில் கூட தனியார் கல்வி நிறுவனங் களை நாடிச் செல்லவே இல்லை

வாழ்நாளில் அவர்களை மறக்கவே மாட்டேன். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் நான் சித்தியடைந்த பின்பு எனக்கு ஆசிரியர் சொன்ன அறிவுரைகள் தான் ஞாபகம் வருகின்றது. புலமைப் பரிசிலுடன் படிப்பு முடிந்து போவதில்லை. அதற்குப் பின்புதான் நன்கு படிக்க வேண்டும். எமது பெற்றோர் செய்யும் பெரும் தவறு புலமைப் பரிசில் பரீட்சை முடிந்ததும் பிள்ளைகளை கைவிட்டுவிடுவது இனி அவர்களாகப் படித்துக் கொள்வார்கள் என எண்ணிக் கொள்வது. புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையாத எத்தனையோ பேர் இன்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, துறைசார் வல்லுநர்களாக உள்ளார்கள். எனவே புலமைப்பரிசில் பரீட்சைக்குப் பின்னரே நன்கு படிக்க வேண்டும் என்பார்கள். அதற்கேற்றால் போல் நானும் படிக்கத் தொடங்கினேன். குருவும் தாரமும் தலைவிதிப்படி என்பார்கள். எனக்கு நல்ல குரு அமைந்ததுபோல் என் அப்பாவுக்கு என் அம்மா நல்ல தாரமாக அமைந்தார். அதனாலேயே என் வெற்றி சாத்தியமானது. நாளை ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினம் . அவர்களை சுதந்திரமாகச் சிந்திக்க விடுங்கள் அவர்கள் என்னைப் போல் நாளை உயர்ந்த நிலைக்கு வருவார்கள்.

எனது அனுபவப்பகிர்வு ஒன்றை உங்களுக்குச் சொல்லலாம் என நினைக்கின்றேன். தரம் ஒன்றிற்கு அனுமதி வழங்கிக் கொண்டிருந்த காலம். இன்றைய நகர்ப்புறம் நோக்கிய இழுவிசையில் எனது அப்பா சிவமும் விதிவிலக்கல்ல. கிராமத்தில் விவசாயம் செய்யும் ஒரு நடுத்தர வகுப்பு குடும்பம் தான் எனது குடும்பம். மழைக்குக் கூட பள்ளிக்கூடம் போகாத என் அப்பா தன் பிள்ளையும் மற்றப் பிள்ளைகள் போல் நகர்ப்புறப் பாடசாலையில் கல்விகற்று சிறந்த வாழ்வு வாழ வேண்டும், வறுமைப் பிடியிலிருந்து விடுபடவேண்டும் என்ற எண்ணத்தில் நகர்ப்புறத்திலிருந்த அனைத்துப் பாடசாலைகளிலும் ஏறி இறங்கி ஏமாற்றம் தான் கிடைத்தது. படித்தவர்களின் பிள்ளைகளுக்கும், பணக்காரர்களின் பிள்ளைகளுக்கும் மட்டும் இடம் கொடுத்த நகர்ப்புற பாடசாலைகள் எனது அப்பாவை ஒரு பொருட்டாக மதிக்கவேயில்லை. இறுதியாக வழியேதுமின்றி "அருகில் உள்ள பாடசாலை தரமான பாடசாலை" என்ற தொனிப் பொருளினை அடிப்படையாகக் கொண்டவராக என்னைத் தனது கிராமத்தில் உள்ள பாடசாலையிலேயே சேர்த்து விட்டார். அப்போது எனது அம்மா சொன்னது இப்பவும் எனக்கு ஞாபகம் இருக்கு "இஞ்ச பாருங்கப்பா படைத்தவன் படி அளப்பான்" கவலையை விடுங்கோ எங்களுடைய பிள்ளை கெட்டிக்காரி. அவளை சேர்க்கத் தவறிய பாடசாலைகள் ஒருகாலத்தில் அவளது பெருமைகளை உணரும்.. இவள் ஊரிலேயே படிக்கட்டும் "நீங்கள் கவலைப்படாதேயுங்கோ..." என்ற அம்மாவின் வார்த்தை அப்பாவை ஆற்றுப்படுத்தினாலும் நகர்ப்புறப் பாடசாலையில் படிக்கவில்லை என்ற வருத்தம் ஒரு மூலைக்குள் கிடந்தது... எப்படியாவது என்னைப் படிப்பித்து சாதிக்க வைக்க வேண்டும் என்ற துடிப்புடன் என்னைப் படிப்பித்தார் அப்பா... எனக்கு அதிகளவு கல்விக்காகச் செலவு செய்யவேண்டும் என்று இரவு பகல் பாராது அப்பாவும் அம்மாவும் அதிகம் கஷ்டப்பட்டு பணம் சம்பாதிக்கத் தொடங்கினர். எனக்கு பத்திரிகைகளில் வெளிவந்த பயிற்சி வினாத்தாள்கள் அந்தக்காலத்தில் பெரிதும் உதவின. எனது நண்பர் கள் தரம் ஐந்தில் கஷ்ட ப்பட்டு படித்தது போல் நான் ஒரு போதும் கஷ் டப்பட்டுப் படிக்கவில்லை. இன்றைய பெற்றோர் களுக்கு நான் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். உங்கள் பிள்ளைகளுக்கு கல்வி யின் மகத்துவத் தினை உணர வையுங் கள். மும்மொழியாவது கற்கத் தூண்டுங்கள் , இணைப்பாட விதான செயற்பாடு களுக்கும் முக்கியத்துவம் கொடுங்கள். மனிதன் சூழலில் இருந்தே அதிகம் கற்கின்றான் என்பது அறிஞர்கள் கருத்து.

பிள்ளைகள் தானாகக் கல்வியைப் பெற்றுக் கொள்ளட்டும். அதற்கு வழிகாட்டியாக இருங்கள். தரம் ஐந்து மழலைகள் பாவம். அந்தப் பிஞ்சுகள் மனதில் கல்வியானது பெருஞ்சுமை என்பதனை விதைத்து விடாதீர்கள். கருவிலிருந்தே பிள்ளைகள் கற்கத் தொடங்குகின்றனர். கரு வறையில் இருந்து கல் லறைவரை ஒரு மனி தன் கற்றுக் கொண் டிருக்க வேண்டும். தொடர்ந்து கற்றுக் கொண்டி ருப்புவனே வாழ்வில் உயந்தவனாகின்றான். நல்ல பண்பாட்டு விழுமியங்களையும், கலாசார முறைகளைப் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுங்கள். பெற்றோரையும் பெரியவர்களையும் ஆசிரியர்களையும் கனம் பண்ணக் கற்றுக் கொடுங்கள். பிள்ளை எந்தப் பாடசாலையில் கற்றாலும் சிறந்தவராவர். நான் கிராமத்து மூலை யில் கிடந்த எனது பாடசாலை அன்னை யில் கற்று புலமைப்பரிசிலில் முதலிடம் பெற்றதும் பல நகர்ப்புற பாடசாலைகள் என்னை நோக்கி வலைவீசின. ஆனால் நான் என் பாடசாலையை விட்டு நகர்புறம் செல்லவே இல்லை. க.பொ.த. உயர்தரத்தில் கூட தனியார் கல்வி நிறுவனங்களை நாடிச் செல்லவே இல்லை. எனது நண் பியை எனது வீட்டில் கூட்டி வந்து வைத்து அவளுக்கு கற்றுக் கொடுத்ததன் ஊடாக அவளும் நானும் இன்று சிறந்த வைத்தியர்கள். அவளும் இந்த மேடையில் தான் இருக்கிறாள். அவளிடம் கேட்டுப்பாருங்கள் யதார்த்தம் புரியும்.

எனவே நாம் சுயமாகக் கற்று தினமும் கற்றவற்றை அன்றே கற்று தேவையான பயிற்சிகளையும் கடந்தகால வினாத்தாள்கள் , மாதிரி வினாத்தாள்கள் போன்றவற்றைச் சுயமாகச் செய்து சந்தேகங்கள் வரும்போது உடனடியாக ஆசிரியர்களிடம் கேட்டுத் தெளிவு பெறும் போது சிறந்த பெறுபேறுகளைப் பெறமுடியும். தேடல் உள்ளவர்கள் மட்டும் வாழ்வில் உயர்ந்தவராவார்கள். மீண்டும் ஒருதடவை என்னை உருவாக்கிய ஆசிரியர்களுக்கு நன்றி கூறி இதுவரை நேரமும் என் உரையை அமைதியாகக் கேட்ட சபையோருக்கு தலை வணங்கி என் உரையை நிறைவு செய்து கொள்கின்றேன் என்றதும் அவையில் பலத்த கரகோசம் வானை முட்டியது. அது சபையில் இருந்தோர் யதார்த்தத்தைப் புரிந்துகொண்டதை தெளிவாக்கியது.



அரியாலையூர்
கு.பிரதீபன்




# 50 மில்லியன் பயனாளிகளின் தரவுகள் திருட்டுப் போயின

## திணறும் பேஸ்புக்

கேம்பிரிட்ஜ் அனலிடிகா நிறுவனத்திடம் 87 மில்லியன் பயனாளர்களின் தகவல்களைப் பறிகொடுத்து இன்னும் ஆறு மாதங்கள்கூட முடியவில்லை. அதற்குள்ளாகவே மீண்டும் 50 மில்லியன் பயனாளர்களின் கணக்குகளை ஹேக்கர்களிடம் தாவு கொடுத்திருக்கிறது பேஸ்புக் நிறுவனம். இத்தனைக்கும் இதைச் செய்தது யார், இதன்மூலம் என்ன நடந்தது போன்ற எந்த விபரமும் இன்னும் பேஸ்புக்குக்கே தெரியவில்லை என்பதுதான் சோகம்.

**எப்படி நடந்தது ஹேக்கிங்?**

பயனர்கள் தங்களுடைய பிறந்தநாள் வீடியோக்களை பேஸ்புக்கில் பதிவேற்றுவதற்காக புதிய வசதி ஒன்றைக் கடந்த ஆண்டு அறிமுகம் செய்திருந்தது அந்நிறுவனம். அதில் மறைந்திருந்த 'Bug'தான் தற்போது 50 மில்லியன் பயனர்களின் கணக்குகளின் கதவுகளை ஹேக்கர்களுக்காகத் திறந்துவிட்டிருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு காரணம் மொத்தம் மூன்று'Bug'-கள். ஒன்று, மேலே சொன்ன பிறந்தநாள் வீடியோ அப்லோடிங். இரண்டாவது, 'View as' ஒப்ஷன். நம்முடைய பேஸ்புக் புரொபைலைப் பார்க்க வேண்டுமென்றால், 'Profile' பகுதியைக் கிளிக் செய்வோம். இதுவே, நம்முடைய புரொபைல் நம்மைத் தவிர்த்து பிறருக்கு எப்படித் தெரிகிறது என்று பார்க்க வேண்டுமென்றால், 'View as' என்ற ஒப்ஷன் மூலம் பார்க்கலாம். இதன்மூலம் நம்முடைய புரொபைலை பிறர் பார்ப்பது போன்ற தோற்றத்தில் பார்க்கமுடியும் என்பதோடு, ஒவ்வொரு யூசருக்கும் நம் புரொபைல் எப்படித் தெரியும் என்பதையும் பார்க்கமுடியும். உங்கள் பேஸ்புக் கவர் போட்டோவின் ஓரத்தில் இருக்கும் மூன்று புள்ளிகளை கிளிக் செய்தால், இந்த ஒப்ஷன் வரும். மூன்றாவது, "டிஜிட்டல் டோக்கன்கள்".

நாம் ஒவ்வொருமுறை பேஸ்புக் லொக்கின் செய்யும் போதும், பாஸ்வேர்ட் கொடுத்து லொக்கின் செய்யமாட்டோம். ஒரே ஒரு முறை 'Remember me' ஒப்ஷன் கொடுத்து லொக்கின் செய்து விட்டால் அடுத்து நாம் எப்போது பேஸ்புக் சென்றாலும் உடனே லொக்கின் ஆகிவிடும். இதற்குக் காரணம், இந்த டிஜிட்டல் டோக்கன்கள்தான். நாம் முதல்முறை பேஸ்புக்கில் லொக்கின் செய்யும்போதே, நம் கணக்கிற்குத் தேவையான டிஜிட்டல் டோக்கன்களை, பேஸ்புக் உருவாக்கி நம் கருவிகளில் சேமித்துவைத்து விடும். எனவே மறுமுறை வரும்போது அந்த டோக்கன்கள் ஓட்டோமேட்டிக்காகப் பெறப்பட்டு, பாஸ்வேர்ட் இல்லாமலேயே பேஸ்புக் நம்மை உள்ளே அனுமதிக்கும். இதிலும் ஒரு Bug இருந்துள்ளது. அதாவது, பிறந்தநாள் வீடியோ ஒப்ஷன், View as ஆப்ஷன், டிஜிட்டல் டோக்கன்... இந்த மூன்று Bugகளும் ஒரே புள்ளியில் இணைந்ததுதான் தற்போதைய பிரச்சினை.

முதலில் யாரேனும் ஒருவரின் கணக்கில் அத்துமீறி நுழையும் ஹேக்கர்கள், அவர்களின் புரொபைல் பக்கத்தில் இருக்கும், 'View as' ஒப்ஷனைப் பயன்படுத்துவார்கள். உதாரணமாக "குமார்" என்பவரின் கணக்கில் இதைச் செய்கிறார்கள் என வைத்துக்கொள்வோம். இப்போது, 'View as' ஒப்ஷனைப் பயன்படுத்தி, குமாரின் ப்ரெண்ட் லிஸ்ட்டில் இருக்கும் ரமேஷ் என்பவரின் பெயரைத் தேர்வு செய்வர். இப்போது நியாயமாக பேஸ்புக், ரமேஷ்க்கு குமாரின் புரொபைல் எப்படித் தெரியுமோ... அதை மட்டும்தான் குமாருக்கு காட்டவேண்டும். ஆனால், Bug சும்மா இருக்காதல்லவா? எனவே, அது பிறந்தநாள் வீடியோ ஒப்ஷனையும் சேர்த்து காட்டும். சரி... இதை மட்டுமாவது காட்டினால் சிக்கல் இல்லை. ஆனால்,இன்னொரு Bug-ம் இருக்கிறதே? அது வீடியோ அப்லோடு செய்யும்போது, டிஜிட்டல் டோக்கன்களை உற்பத்தி செய்துவிடும். அதுவும் இந்த டோக்கன்கள், யாரின் கணக்கில் இருந்து பார்க்கிறோமோ அவருக்கு வராது. அதாவது, இப்போது ஹேக்கர் தற்போது ஊடுருவியிருக்கும் குமார் கணக்கிற்கு வராது. மாறாக, ரமேஷின் கணக்கிற்கு வரும். அந்த டோக்கன்களை ஹேக்கர்கள் பயன்படுத்தினால், பாஸ்வேர்ட் இல்லாமலே ரமேஷின் கணக்கில் நுழைந்துவிட முடியும்.

இதேபோல ரமேஷின் கணக்கிலும் கைவரிசை காட்டி அடுத்தடுத்து டிஜிட்டல் டோக்கன்கள் பெற்று, வெவ்வேறு கணக்குகளுக்கு தாவிக்கொண்டே இருக்கமுடியும். இப்படித்தான் 50 மில்லியன் வாடிக்கையாளர்களின் கணக்குகளுக்கு டோக்கன் பெற்றிருக்கின்றனர். இது நேற்று நடந்த சம்பவம் அல்ல. கடந்த ஆண்டு டிசெம்பரிலேயே தொடங்கியிருக்கிறது. அப்போதே மோப்பம் பிடித்த பேஸ்புக், தீவிர விசாரணைகளுக்குப் பிறகு அண்மையில்தான் உறுதிப்படுத்தியிருக்கிறது. தற்போது இந்தப் பிரச்சினையை சரிசெய்தும் விட்டது. இது திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் எனக் கூறுகிறது பேஸ்புக். இப்போதைக்கு ஆரம்ப கட்ட விசாரணையில் மட்டுமே இருக்கும் பேஸ்புக், கூடியவிரைவில் இதற்கு காரணமானவர்களைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. ஆனால், அதற்கு முன்பாக பாதிக்கப்பட்ட 50 மில்லியன் பயனாளர்களுக்கும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

இந்தத் தாக்குதல் நடந்திருப்பது உறுதி செய்யப்பட்டாலும், இது எதற்காக நடத்தப்பட்டது, எந்தெந்த தகவல்கள் திருடப்பட்டன, அதை வைத்து ஹேக்கர்கள் என்ன செய்தார்கள் என்ற விபரமெல்லாம் தெரியவில்லை. எனவே இப்போதைக்கு அந்த 50 மில்லியன் பயனர்களின் பேஸ்புக் கணக்குகளை லொக்அவுட் செய்திருக்கிறது. எந்தெந்த சேவைகளில் எல்லாம் பேஸ்புக் மூலம் அவர்கள் லொக்கின் செய்திருக்கிறார்களோ, அவை அனைத்தையும் லொக்அவுட் செய்துவிட்டது. நேற்றோ, இன்றோ உங்களின் கணக்கும் தானாக லொக்அவுட் ஆகியிருந்தால், நீங்களும் அந்த 50 மில்லியனில் ஒருவராக இருக்கலாம். அப்படி நீங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் நீங்கள் மீண்டும் லொக்கின் செய்ததுமே, நீங்கள் பாதிக்கப்பட்டது குறித்த செய்திகள் பேஸ்புக்கில் காட்டப்படும். அதைவைத்து உறுதிசெய்து கொள்ளலாம். இதுதவிர கடந்த ஆண்டிலிருந்து இதுவரை view as ஒப்ஷனைப் பயன்படுத்திய 40 மில்லியன் கணக்குகளையும் லொக்அவுட் செய்திருக்கிறது. இப்படியாக ஆகமொத்தம் 90 மில்லியன் கணக்குகள் லொக் அவுட் செய்யப்பட்டிருக்கின்றன.

வெறும் டிஜிட்டல் டோக்கன்கள் மட்டும்தான் திருடப்பட்டன என்பதால், பாஸ்வேர்ட்களை மாற்றவேண்டிய அவசியமும் இல்லை. ஒருவேளை பாதுகாப்பு கருதி மாற்ற நினைத்தால் மட்டுமே மாற்றிக்கொள்ளலாம். ஏனெனில், பாஸ்வேர்ட்கள், கிரெடிட் கார்ட் விபரங்கள் போன்றவை எதுவும் திருடப்படவில்லை என பேஸ்புக் தெரிவித்துள்ளது. மேலும், Bugகள் அனைத்தும் முறையாக சரிசெய்யப்பட்டுச் சோதிக்கப்படும் வரை 'view as' ஒப்ஷனை முழுமையாக நிறுத்தியிருக்கிறது பேஸ்புக். எல்லா பிரச்சினைகளும் முடிந்தபிறகு மீண்டும் இது இயங்கும். இந்த ஹேக்கிங் விடயத்தைப் பயனாளர்களுக்குத் தெரிவித்ததோடு, முறையான சட்ட அமைப்புகளுக்கும் தகவல் தெரிவித்திருக்கிறது பேஸ்புக். இவர்கள் அனைவரின் ஒருங்கிணைந்த விசாரணைகள் முடிந்தபின்பே ஹேக்கர்களின் முகம் வெளிச்சத்திற்கு வரும். பாதுகாப்பு ரீதியாக இப்படி ஒரு சிக்கல் என்றால், சட்ட ரீதியாகவும் பேஸ்புக்கிற்கு சிக்கல்கள் காத்திருக்கின்றன. இந்த ஆண்டு மே மாதம் முதல் அமுலுக்கு வந்த ஐரோப்பிய யூனியனின் GDPR விதிகளின் படி ஏதேனும் நிறுவனம், ஐரோப்பிய வாடிக்கையாளர்களின் தரவுகளைப் பாதுகாக்கத் தவறும்பட்சத்தில் கடுமையான அபராதம் விதிக்கப்படும். 50 மில்லியன் பேரில் ஐரோப்பிய வாடிக்கையாளர்களும் இருக்கும்பட்சத்தில் இந்த விதி பேஸ்புக்கிற்கும் பொருந்தும். இதில் என்ன நடக்கும் என்பது இன்னும் சில தினங்களில் தெரிந்துவிடும்.

## இலங்கையின் வளர்ச்சிக்கு தடையாகும் சீனா

தனது நாட்டை மீண்டும் பேண்தகு வளர்ச்சிப் பாதைக்குக் கொண்டு செல்வதற்கு இலங்கை தயாராகியுள்ளது. அடுத்துவரும் பத்தாண்டில் வளர்ந்து வரும் சந்தைகளில் தமக்கான வாய்ப்பைப் பெற்றுக்கொள்வதற்காகத் தம்மை நன்றாகத் தயார்ப்படுத்தும் சில நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குவதாக அண்மையில் மக்கின்சி பூகோள நிறுவகத்தால் McKinsey Global Institute மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் இலங்கையின் இந்த வளர்ச்சிக்கு சீனா தடையாக இருக்கும். இலங்கையின் மனித மூலதனமே அதன் பலமாக உள்ளது. 2015இல் இலங்கையின் மனித மேம்பாட்டுச் சுட்டியானது 0.766 ஆகக் காணப்பட்டது. இதனால் இலங்கையானது உயர் மனித மேம்பாட்டு வகைக்குள் உள்ளடக்கப்பட்டது.

உலக வங்கியால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் பிரகாரம் 188 நாடுகள் மற்றும் பிராந்தியங்களில் இலங்கையானது அதன் மனித மேம்பாட்டுச் சுட்டியில் 73வது நாடாகத் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளது. 1990 தொடக்கம் 2015 காலப்பகுதியில் இலங்கையின் மனித மேம்பாட்டுச் சுட்டியானது 0.626 இலிருந்து 0.766 ஆக அதாவது 22.4 சதவீதத்தால் அதிகரித்தது.

இலங்கையானது சுதந்திரமடைந்த பின்னரான மூன்று பத்தாண்டுகளில், ஆசிய வளர்ச்சி அதிசயத்தை பற்றிப் பிடிக்கும் நிலையில் காணப்பட்டது. இதன் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தம் காரணமாக இதன் அபிவிருத்தி பாதிக்கப்பட்டது.

'1960களில், இலங்கையானது அடுத்த ஆசிய வளர்ச்சியின் அதிசய நாடாக உருவாகி வந்த நிலையில், நாட்டில் தோன்றிய உள்நாட்டுப் போர் காரணமாக இது தடுத்து நிறுத்தப்பட்டது' என Breakout Nations என்கின்ற நூலின் ஆசிரியர் றுச்சிர் சர்மா தெரிவித்தார்.

1948இல் இலங்கை சுதந்திரம் பெற்றதைத் தொடர்ந்து, சிங்களப் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த தலைவர்களால் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியில் ஏற்பட்ட அநீதிகளைச் சீர்செய்வதற்கான



நகர்வுகள் முன்னெடுக்கப்பட்ட போது இதனால் சிறுபான்மைத் தமிழ்மக்கள் பாரபட்சப்படுத்தப்பட்டனர்' என ஆசிரியர் றுச்சிர் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் வரலாறாகக் காணப்படுகிறது.

'தமிழீழ விடுதலைப் புலிகள் என்கின்ற பெயரில் 1977ல் உருவாகிய தமிழ் இளைஞர்கள் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டனர். இவர்கள் சிறுவர்களைப் படையில் இணைத்தமை மற்றும் தற்கொலைக் குண்டுதாரிகளை யுத்தத்தில் பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில், இலங்கையின் மத்திய அரசாங்கமானது புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த பிரதேசத்தை நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து தனிமைப்படுத்தியதுடன் பல்வேறு தடைகளையும் இட்டனர்' என ஆசிரியர் சர்மா குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் இது நடந்து முடிந்து விட்டது. தற்போது இலங்கையானது மீண்டும் வெற்றி நாடாக மிளிர்வதற்கான இரண்டாவது வாய்ப்பைப் பெற்றுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு இராணுவ மற்றும் இராஜதந்திர ஆதரவுகளை 2007ல் சீனா வழங்கியதிலிருந்து இலங்கையில் சீனாவின் பிரசன்னம் அதிகரிக்கத் தொடங்கியது. இலங்கையில் கட்டுமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு சீனா உயர் வட்டி வீதத்தில் கடன்களை வழங்கியது.

சீனாவிடமிருந்து இலங்கை பெற்றுக் கொண்ட கடனானது 2017ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 77.60 சதவீதமாகும். 1950 - 2017 வரையான காலப்பகுதியில் இது 69.69 சதவீதமாகக் காணப்பட்டது.

இதேவேளையில், இலங்கை அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறையானது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 5.5 சதவீமாக உள்ளது. இலங்கைமீதான கடன் சுமையானது இலங்கை ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி அதிசய நாடாக உருவாவதற்கு கிடைக்கப் பெறும் வாய்ப்பிற்குத் தடையாக இருக்கலாம் என ஆய்வில் சுட்டிக்காட்டப்படுகிறது.

வழிமூலம் – forbes
ஆங்கிலத்தில் – Panos Mourdoukoutas
மொழியாக்கம் - நித்தியபாரதி

# டொலர் பெறுமதி அதிகரிப்பு உலகம் எதிர்கொள்ளும் சவால்

அமெரிக்க டொலரின் விலை அதிகரிப்பு தொடர்ந்து ஏணியின் உச்சிவரை உயர்ந்து கொண்டே போகின்றது.

நாளாந்தம் இந்த நிலை தொடர்வதால் எமது நாட்டின் ரூபாவின் பெறுமதி குறைந்த வண்ணமே காணப்படுகின்றது. இதன் காரணமாக நாடு பாரிய சவாலை எதிர்கொள்ளும் நிலை தொடர்கிறது.

இந்த ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை தடுப்பதற்கு அந்நிய செலாவணியை சந்தைக்கு விட முடியாது என்பதை நிதியமைச்சர் மங்கள சமரவீர ஆணித்திரமாக எடுத்துரைத்திருக்கின்றார்.

இவ் விடயத்தில் அரசு பொறுப்பற்ற விதமாக நடந்துகொள்வதாக கூறும் குற்றச்சாட்டை நிதியமைச்சர் முற்றுமுழுதாக நிராகரித்துள்ளார். ஏனெனில் அமெரிக்க டொலரின் பெறுமதி அதிகரிப்பு உலக நாடுகளையும் சவாலுக் குட்படுத்தியுள்ளது. இந்திய ரூபாவின் பெறுமதி கூட மோசமாகப் பாதித்துள்ளது. இதேபோன்று டொலருக்கு முன்னுரிமை கொடுக்கும் நாடுகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டவண்ணமேயுள்ளனர்.

ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியை தடுப்பதன் பொருட்டு அந்நியச் செலாவணியை சந்தைக்கு விடுமாறு எதிரணித் தரப்பு விடுத்த கோரிக்கையை அரசு நிராகரித்துள்ளது. அந்நியச் செலாவணியை சந்தைக்கு விடுவதால் பிரச்சினை தீர்ந்துவிடும் என எதிர்பார்க்க முடியாது. அது நாட்டில் பெரும் பொருளாதாரச் சிக்கலை தோற்றுவிக்க முடியும் என பொருளாதார விற்பன்னர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். நாணய மதிப்பிறக்கத்தைச் சரிசெய்வதற்கு இதனைப் பயன்படுத்துவதன் மூலம் மற்றொரு நெருக்கடிக்கு நாடு முகம் கொடுக்க நேரிடலாம் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவரது ஆட்சிக் காலப் பகுதியில் பெறப்பட்ட கடன்களை மீளச் செலுத்தவதில் அரசாங்கம் பெரும் சவாலை எதிர்கொண்டிருக்கின்றது. கடன் சுமையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதிலேயே நல்லாட்சி அரசு பெரும் முனைப்புக்காட்டி வருகின்றது.

இந்த வருடத்தில் 4.5 பில்லியன் டொலரை கடனுக்காக செலவிட்டது. அடுத்த வருடத்திலும் 4.5 பில்லியன் டொலரை செலுத்த வேண்டியுள்ளது. அந்த நெருக்கடியிலிருந்து விடுபடத் தவறினால் நாடு பொருளாதார ரீதியில் பெரும் சிக்கலை எதிர்கொள்ள நேரிடலாம்.

அமெரிக்க டொலருக்கு நிகரான எமது நாட்டு நாணயத்தின் விலை வீழ்ச்சி கண்டிருப்பது குறுகிய காலச் சவாலாகவே நோக்கவேண்டியுள்ளது. உலக நாடுகள் இந்த விடயத்தில் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளன. மாற்று வழி தேடுவதில் பல்வேறு நாடுகளும் முனைப்புக் காட்டி வருகின்றன. உலகம் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினையில் நாம் தனிமைப்பட்டு விடமுடியாது. அரசாங்கம் டொலருக்கு நிகரான இலங்கை பெறுமதியை பேணுவதில் உறுதியாக இருப்பதாக நிதியமைச்சர் எடுத்துரைத்திருக்கின்றார். அரசு சவாலுக்கு முகம் கொடுத்து காத்திரமான நடவடிக்கைகளை எடுப்பதில் தீவிரம் காட்டி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூட்டு எதிரணியினர் குழம்பிய குட்டையில் மீன்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனர். நாட்டின் பொருளாதாரத்தை அதளபாதாளத்துக்குள் தள்ளி பாரிய



வெளிநாட்டுக் கடனுக்குள் நாட்டைத் தள்ளிவிட்டுச் சென்ற ராஜபக்ஷ முகாம் இன்று ஒன்றுமே அறியாத சின்னக் குழந்தைகள் போன்று செயற்பட முனைகின்றனர். என்னவோ நாட்டை இன்றைய அரசுதான் படு குழிக்குள் தள்ளிவிட்டது போன்று பேச முற்படுகின்றனர். அன்று அவர்கள் வாரிச் சுருட்டிக்கொண்டது போன்று மற்றவர்களையும் பார்க்க முற்படுகின்றனர்.

ராஜபக்ஷ முகாமின் கடன் சுமையை எமது எதிர்காலச்சந்ததிக்கு விட்டுவைக்க முடியாது என்பதில் அரசு உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது. அவர்கள் விட்ட மாபெரும் தவறினை மற்றவர்களும் விட வேண்டுமென ராஜபக்ஷ முகாம் விரும்புகின்றது. நாட்டின் மீதான அவர்களது பற்றுறுதி இதுதானா எனக் கேட்க வேண்டியுள்ளது.

2015 க்குப் பின்னர் நல்லாட்சி அரசு நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் பாரிய சவாலைப் பொறுப்பேற்றுச் செயற்பட்டு வருகின்றது. ஆண்டுதோறும் பொருளாதார வளர்ச்சி வீதம் அதிகரித்துக் கொண்டிருப்பதை மத்திய வங்கியின் ஆண்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் 3.7 வீத பொருளாதார வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது. இது கடந்த வருடத்தைவிட. 6 வீத அதிகரிப்பாகும். நாட்டை அபிவிருத்தி, பொருளாதாரம் இரண்டிலும் மேலோங்கச் செய்யக்கூடிய தொலைநோக்குடனான திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகின்றது.

இவ்வாறானதொரு நிலையில் தான் அமெரிக்க டொலர் பெறுமதி அதிகரிப்பால் உள்நாட்டு நாணய மதிப்பிறக்கம் ஏற்பட்டுள்ளது. இது நிலையானதல்ல எந்த நேரத்திலும் மாற்றம் நிகழலாம். இந்த விடயத்தில் அமெரிக்கா கூட பயணப்பாதையை மாற்ற வேண்டிய கட்டாயத்துக்குள் உள்ளது. இன்றேல் உலகம் பாரியதொரு நெருக்கடிக்குள் சிக்கும்நிலை ஏற்பட்டு விடலாம் என்பதை சர்வதேச பொருளாதார வல்லுநர்கள் சுட்டிக்காட்டியிருப்பதை நோக்க முடிகிறது.

# இது நம்ம கதைகள்... 18

# சொர்க்கமும் நரகமும்

இவ்வுலகில் ஒரு மனிதனுக்கு தான் வாழும் காலத்திலேயே சொர்க்கத்தையும், நரகத்தையும் பார்த்துவிட வேண்டுமென்று பெரும் ஆவல் ஏற்பட்டது. இதனால் இறைவனிடம் தனக்கு சொர்க்கத்தையும், நரகத்தையும் காட்டும்படி இடையறாது வேண்டுதல் செய்து கொண்டேயிருந்தான். இறப்பின் பின்னர் தான் அவற்றைப் பார்க்கமுடியுமென்று இறைவனும் பக்குவமாய் சொல்லிப் பார்த்தார். அவனோ செவிமடுப்பதாகவில்லை. ஓயாது நச்சரித்துக் கொண்டேயிருந்தான். சில மேலதிகாரிகள் போல் அவன் பிடிவாதத்தில் விடாப்பிடியாகவிருந்தான். அவன் தொல்லை தாங்க முடியாமல் இறைவனும் தன் தூதரை அவனிடத்தில் அனுப்பினார்.

இறை தூதர் அவனிடம் வந்தார்.சொர்க்கத்தையும், நரகத்தையும் பார்வையிட அவனை அழைத்துச் செல்ல வந்திருப்பதாகத் தெரிவித்தார். அவனும் மிகுந்த ஆவலுடன் புறப்பட்டான். முதலில் நரகத்திற்கு சென்றனர். அங்கு இருள் சூழ்ந்திருக்கும், நெருப்பு சுவாலை விட்டெரியும், பாம்புகள் நெளிந்து கொண்டேயிருக்கும், கொம்புகளும் - கோரப்பற்களும் கொண்ட பேய்கள் ஈட்டிகளால் குத்திக் குதறி அங்குள்ளோரை வதைக்க அழுகையும், கூக்குரலும் அங்கே எதிரொலித்துக் கொண்டே யிருக்கும் என்று தன் பாட்டி சொன்ன கதைகளை நினைத்துக் கொண்டு சென்றவன் நரகத்தைக் கண்டதும் அதிர்ந்து போனான்.





அதற்குக் காரணம் நரகம் ஐந்து நட்சத்திர ஹோட்டல் போல் காட்சியளித்துக் கொண்டிருந்ததுதான். அங்கு பளிங்குக் கற்கள் பதித்த நிலம், பூத்துக் குலுங்கும்நந்தவனங்கள்,பட்டாடையுடுத்திய மனிதர்கள், நறுமணம் கமிழ்ந்திடும் காற்று, சாப்பாட்டு மேசைகளில் விதம் விதமான உணவுகள், பழரசங்கள், பழவகைகள், ஐஸ்கிறீம்கள் என்று வெகு ஜோராகக் காட்சியளித்தது நரகம்.

தன் பாட்டி தன்னை பயமூட்டி உணவூட்டவும், குழப்படி செய்யாது தடுக்கவும் நரகத்தைப்பற்றி எப்படியெல்லாம் பயங்கரமாக வர்ணித்திருக்கிறாள் என்று எண்ணிய போது கோபம் கலந்த வெட்கம் அவனுள் எட்டிப்பார்த்தது. இங்கேயே குடியேறி விட லாமோ என்று சிந்தித்தான். மனிதர்கள் தம் தீயசெயலுக்காக நரகத்திற்குள் தள்ளப்பட்டு வேதனையுற வேண்டிவருமேயென்று தம் ஆசா-பாசங்களை ஒறுத்து வாழ்வதை எண்ணித் தனக்குள் ஏளனமாகச் சிரித்தான்.

"சரி இப்போ சொர்க்கத்தைப் பார்க்கச் செல்வோமா....?" என்றார் இறை தூதர். நரகம் எப்படியிருந்ததோ அப்படித்தான் சொர்க்கமும் ஐந்து நட்சத்திரக் ஹோட்டல் போல் காட்சியளித்து. இரண்டுக்குமிடையில் எந்த வேறுபாடுமிருக்கவில்லை. "சொர்கம் , நரகம் இரண்டுமே ஒரே விதமாகத்தானே காட்சி தருகின்றன. இங்கு வாழும் மனிதர்கள் கூட ஒரேவிதமாகத் தானேயுள்ளனர். பின் எதற்காக சொர்க்கம் - நரகம் என்று வேறுபாடு" என்று இறை தூதரைப் பார்த்துக் கேட்டான் நம்மாள். "உணவு நேரம் வரட்டும் விடை தெரியும்" என்றார் இறைதூதர்.

உணவு நேரமும் வந்தது. முதலில் நரகத்திற்குச் சென்றனர். அலங்கரிக்கப்பட்ட மேசைகளில் விதம்விதமாயிருந்த உணவுகளைப் பார்க்கும் போதே வாயூறியது. நரகத்திலிருந்த எல்லோரும் தமக்குப் பிடித்தமான உணவுகளை தம் பீங்கான்களில் அள்ளிக் குவித்தனர். ஆசையோடு அதை உண்ண முனைந்த போது தான் அவன் பார்வையில் ஒரு விடயம் தென்பட்டது. அங்குள்ள எல்லோருக்கும் முழங்கைகள் மடியவில்லை. அவை நேராகவேயிருந்தன. முழங்கை மடியாவிட்டால் எப்படி உணவைப் பீங்கானிலிருந்து எடுத்து வாயருகே கொண்டு செல்வது. ஒவ்வொருவரும் மிகுந்த பிரயாசைப்பட்டனர். முடியவில்லை. ஒருவன் தன் கையை மடிக்க முயன்ற போது அவன் உணவு மற்றவன் உடையில் கொட்டியது. இருவருக்குமிடையில் கைகலப்புத் தொடங்கியது. இன்னொருத்தி உணவை தன் வாயருகே கொண்டு செல்ல முயன்ற போது அது மற்றொருத்தி முகத்தில் அப்பியது. அங்கே குடுமிப்பிடிச் சண்டை ஆரம்பமாகியது. இவ்வாறு எவராலும் தம் உணவைத் தாமே உண்ணமுடியவில்லை. ஆளுக்காள் உணவைக் கொட்டி நரகத்தை கலவர பூமியாக்கினர். பளிச்சென்றிருந்த பளிங்குத் தரைகள் பாசிபிடித்த தரை போலாகின. பட்டாடைகள் கறைபடிந்தன. ஆளுக்காள் அடித்துக் கொண்டதில் ரணகளமானது நரகம். இப்போது தான் அது நரகமாகியது.


நரகத்திலிருந்து இறைதூதரும் நம்மாளும் சொர்க்கம் நோக்கிச் சென்றனர். அங்கேயும் உணவு வேளை ஆரம்பமாகியது. நரகத்திலுள்ளவர்கள் போல் தான் சொர்க்கத்தில் உள்ளவர்களுக்கும் முழங்கை மடியவில்லை. ஆனால் ஒருவர் மற்றவர்களுக்கு உணவை மாறி மாறி ஊட்டிவிட்டனர். எந்தக் களேபரமும் அங்கில்லை எல்லோரும் மகிழ்வோடு மற்றவர் ஊட்டும் உணவையருந்திக் கொண்டு தாமும் வாஞ்சையுடன் மற்றவர்களுக்கு ஊட்டிவிட்டனர். உணவு கொட்டப்படவில்லை. நீர் சிந்தப்படவில்லை. பளிங்குத்தரைகள் பளிச்சென்றிருந்தன. பட்டாடைகள் மினுமினுத்தன. சொர்க்கம் சொக்கத் தங்கமாயிருந்து. இப்போதுதான் நம்மாளுக்குப் புரிந்தது சொர்க்கமும் நரகமும் அவையிருக்கும் இடத்திலில்லை, மாறாக நம்மிடையே - நம் மனத்தில் தான் குடியிருக்கின்றன என்று. மற்றவர் மனம் மகிழ்ந்திட பிறர் அன்புடன் வாழ்வதே சொர்க்கம். சுயநலத்துடன் தனக்கென வாழ்வதே நரகம் என்ற வேறுபாட்டைத் தெளிவாகப் புரிந்து கொண்டான் நம்மாள்.

**சொர்க்கமும், நரகமும் நம் வசமே.**

**எப்.எக்ஸ்.அன்ரன்**

# சுட்டும் விழிச்சுடர்...

## சமூக விபரீதங்களை பற்றிய கண்ணோட்டம் 02



அக்னி

## புகையிரதமா? பகையிரதமா?

இலங்கையின் முதன்மைப் போக்குவரத்துச் சேவைகளில் புகையிரத சேவையும் தனித்துவமானதாகும். வடக்குக்கான புகையிரத சேவை 1905 முதல் 1990 வரை முதல் அத்தியாயமாகவும், 2015 முதல் இன்றுவரை இரண்டாம் அத்தியாயமாகவும் தொடர்கின்றது.

25 வருடங்களின் பின் காங்கேசன் துறைக்கான புகையிரத சேவை மீள ஆரம்பித்த போது மகிழ்ச்சியடையாதவர்களே இல்லையெனலாம் (கொழும்பு பேருந்து உரிமையாளர்கள் தவிர). ஆனால் வடக்குப் புகையிரதப் பாதையில் தற்போது இடம்பெறும் கோர விபத்துக்களைக் காணும் போது அந்த மகிழ்ச்சி வீழ்ச்சி காணத் தொடங்கியுள்ளது.

கடந்த வருடம் இலங்கை முழுவதும் புகையிரத விபத்துக்களில் 198 பேர் பலியாகியுள்ளனர். சுமார் 450 பேர் மேற்படி விபத்துக்களில் அங்கவீனம் மற்றும் கடுமையான காயங்களுக்குள்ளாகியுள்ளனர். இதில் வடக்குப் பாதையின் பங்களிப்பும் கணிசமானதென்பது மன தையுருக்கும் தகவலாகும். இவ்வருட புள்ளிவிபரங்கள் சரியாகக் கிடைக்கப் பெறாவிட்டாலும், கட ந்த வருடத்தை விட இவ்வருடம் வடக்குப் பாதையின் அனர்த்த எண்ணிக்கை அதிகமேயென்பது விபத்துக்கள் தொடர்பான செய்திகளிலிருந்து புலனாகின்றது.

புகையிரதம் தனக்கென வகுக்கப்பட்ட தனிப்பாதையிலேயே பயணிக்கின்றது. ஏனைய வாகனங்களைப் போன்று அதன் வேகத்தை திடீரென குறைக்கவோ, நிறுத்தவோ முடியாது. எனவே இப்பாதையில் இடம்பெறும் திடீர் குறுக்கீடுகள் பேராபத்தான விபத்துக்களாவது தவிர்க்க முடியாது. இத்தகைய விபத் துக்களில் 99 விழுக்காடு குறுக்கீடு செய்பவரின் தவறு மற்றும் கவனயீனம் காரணமாகவே நிகழ்கின்றன. எவ்வாறாயினும் இத்தகைய விபத்துக்களுக்கு வெறுமனே விபத்துக்குள்ளானவர் களை மட்டுமே குற்றவாளிகளாக்கி கோப்புக்களை மூடி விட முடியாது. எதிர் காலத்தில் இத்தகைய விபத்துக்களை குறைப்பதற் கான வழிவகைகள் பற்றி ஆராய்வது நம் ஒவ்வொருவரதும் சமூகப் பொறுப்பாகும்.

### அங்கீகரிக்கப்படாத கடவைகள்

வடக்குப் புகையிரதப் பாதையில் இடம் பெற்ற சகல விபத்துக்களும் அங்கீகரிக் கப்படாத, சட்டவிரோதமான கடவைகளில் தான் நிகழ்ந்துள்ளன என்கின்றனர் வட பிராந்தியத்திற்கான புகையிரத பொறியில் பிரிவினர். ஆயினும் கணிசமான விபத்துக்கள் அங்கிகரிக்கப்பட்ட ஆனால் பாதுகாப்பற்ற கடவைகளில் தான் நிகழ்ந்துள்ளன என்பதை ஊடகச் செய்திகள் தெளிவுறுத்துகின்றன.



புகையிரத பொறியியல் பிரிவினரின் தகவல்படி வடக்குப் பாதையில் மூன்று வகையான கடவைகள் பயன்பாட்டிலுள்ளன.

1. காவலாளி, கடவைக் கதவு, சமிக்ஞை விளக்குகள் ஒருங்கேயமைந்த பாதுகாப்பான கடவைகள்.

2. காவலாளியோ அன்றேல் கடவைக் கதவோ அற்ற ஆனால் சமிக்ஞை விளக்கு மட்டும் அமைந்த பாதுகாப்பற்ற கடவைகள்.

3. காவலாளியோ, கடவைக் கதவோ, சமிக்ஞை விளக்கோ ஏதுவுமற்ற கடவைகள்.

முதலிரண்டு வகையான கடவைகளும் புகையிரதத் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட - அமைக்கப்பட்ட சட்டபூர்வமான கடவைகளாகும். மூன்றாவது வகைக் கடவைகள் புகையிரதத் திணைக்களத்தால் அமைக்கப்படாத, எவ்வித அங்கீகாரமுமற்ற, மக்களால் தன்னிச்சையாக தம் இலகுவான போக்கு வரத்திற்காக அமைக்கப்பட்ட சட்டபூர்வ மற்ற கடவைகள்.

இத்தகைய கடவைகள் புகையிரதத் திணைக்களத்தால் பாவனைக்கு முற்றாக தடை செய்யப்பட்டிருப்பதுடன், இதை பயன்படுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை பிரயோகிக்கக் கூடிய சந்தர்ப்பங்களுமுண்டு. இத்தகைய கடவைகளில் விபத்துக்குள்ளாகு மொருவர் எத்தகைய காப்பீடுகளையோ, இழப்பீடுகளையோ பெற முடியாத நிலையுமேற்படும்.

ஒரு புகையிரதக் கடவை 2 சோடி தண்டவாள தகட்டுத்துண்டுகளைக் கொண்டதாக ( Check rails ) அமைக்கப்படுவதுடன், ஒலி எழுப்புதற்கான (Whistle sign board) சமிக்ஞைப் பலகையும் பொருத்தப் பட்டிருக்கும். ஆனால் மக்களால் அமைக்கப்படும் சட்டவிரோத கடவைகளில் இத்தகைய ஏற்பாடுகள் காணப்படுவதில்லை. மேலும் தண்டவாள இடைவெளி முழுமையாக நிரவப்பட்டுள்ள இக்கடவைகளில் புகையிர தங்களும் தடம்புரளக்கூடிய வாய்ப்புக்களுமுண்டு. இது பாதையைப் பயன்படுத்துவோருக்கு மட்டுமின்றி, புகையிரத பயணிகளுக்கும் ஆபத்தை விளைவிக்கக் கூடியன. எனவே பாதுகாப்பற்ற மற்றும் சட்டவிரோத கடவைகள் மட்டில் அதிககவனம் செலுத்து வதனூடாக விபத்துக்களைத் தவிர்க்கலாம்.

### சட்டவிரோத கடவைகளின் தோற்று வாய

புகையிரதப் பாதை மீளமைக்கப்பட்ட போது ஏற்கனவே பயன்பாட்டிலிருந்த கடவைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டன. தடங்கல்களை மட்டுப்படுத்தி இடையூறற்ற விரைவான பயணத்தை மேற்கொள்வதே இதன் பிரதான நோக்கமாகும். இவ்வாறு மூடப்பட்ட பல கடவைகள் வடக்குக்கான புகையிரதச் சேவை ஆரம்பித்த காலத்திலிருந்தே மக்களால் பயன்படுத்தப்பட்டவை என்பதுடன் கூடிய சனப்புழக்கமுடையவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இக் கடவைகள் மூடப்படுவது குறித்து அம் மக்களுக்கு போதுமான அறிவித்தல்கள் கொடுக்கப்படவுமில்லை, அபிப்பிராயங்கள் கேட்கப்படவுமில்லை.

புகையிரதப் பாதை மறுசீரமைப்பு வேலைகள் அப்பிரதேசங்களில் இடம்பெற்ற போது தான் தாம் பல வருடங்களாகப் பயன்படுத்திய கடவைகள் மூடப்படுவதை மக்கள் உணர்ந்தனர். பல முக்கிய கடவைகள் மக்கள் அபிலாஷைகளுக்கு மாறாக மூடப்பட்டபோது வடக்குக்கான புகையிரதப் பாதை மீளமைப் புத்திட்ட முகாமையாளரான சிரேஷ்ட பொறியியலாளரிடம் பல இடங்களிலும் மக்கள் தம் ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தனர். ஆயினும் தாம் இது குறித்து பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை ஆகியவற்றிற்கு பட்டியல் சமர்ப்பித்து அவர்களின் ஒப்புதலுடனேயே பாவனைக்குரிய மற்றும் மூடப்பட வேண்டிய கடவைகள் தொடர்பில் தீர்மானித்ததாகவும், இதுவிடயத்தில் மக்கள் அபிப்பிராய த்தை கேட்டு உரிய முடிவை எடுத்திருக்க வேண்டியவர்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் சபைகளே என்று அவர் அத்தருணத்தில் பதிலளித்திருந்தார்.

பிரதேச செயலகங்களும், பிரதேச சபைகளும் அத்தருணத்தில் மக்கள் அபிப்பிராயங்களையோ, தேவைகளையோ கவனத்திலெடுக்காமல் தம் இஷ்டத்திற்கு முடிவெடுத்தமையே மக்கள் அதிகம் பயன்படுத்தும் கடவைகள் பல மூடப்படக் காரணமாயிற்று. சில இடங்களில் செல்வாக்கு மற்றும் அரசியல் பிரமுகர்களின் தலையீடு காரணமாக மூடப்பட்ட கடவைகள் சில பாவனைக்கு அனுமதிக்கப்பட்ட போதிலும், ஏனையவை பயன்பாட்டிற்கு அனுமதிக்கப்படவில்லை. சில கடவைகள் மூடப்பட்டதால் மக்கள் புகையிரத பாதையைக் கடக்க பல கிலோ மீற்றர்கள் மேலதிகமாக பயணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். சில இடங்களில் உள்ளூர் அரசியல் பிரமுகர்களே மக்களின் செல்வாக்கைத் திரட்ட புகையிரதத் திணைக்களத்தின் அனுமதியேதுமின்றி தற்காலிகமாக கடவைகளுக்குரிய இடங்களை கல், மணல் போட்டு நிரப்பி, கடவைத் துலாக்களையும் பொருத்தி கடவைகளாக்கியுள்ளனர். அரசியல் பிரமுகர்கள் முன்னின்று இவற்றை அமைத்தமையால் மக்களும் இவை அனுமதிக்கப்பட்ட கடவைகள் என நினைத்து தாராளமாகப் பயன்படுத்துகின்றனர். யாழ். பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையிலிருப்பது இத்தகைய முறையில் அமைக்கப்பட்ட கடவையே. இது சட்டபூர்வமற்றது. சில காலங்களுக்கு முன் இக் கடவைக்கருகிலுள்ள கடவையொன்றை காரில் கடக்க முனைந்த பெண் வைத்தியரொருவர் விபத்திற்குள்ளாகி தெய்வாதீனமாக உயிர் தப்பியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம். இவ்விடத்தில் புகையிரதக் கடவை எனும் சமிக்ஞைப் பலகையும் காட்சிப்படுத்தப்பட்டிருந்து.

இதுபோன்றதொரு கடவை கொக்குவில் செருக்கப்புலம் ஒழுங்கையின் மேற்குப் புறத்திலும் காணப்படுகின்றது. அண்மையில் வவுனியா பன்றிக்கெய்த குளத்தில் விபத்து நடைபெற்ற கடவையும் இத்தகையதே. அரசியல் பிரமுகர்களின் முன்னுதாரணங்களைப் பின்பற்றி மக்களும் தம் இஷ்டத்திற்கு சட்டபூர்வமற்ற கடவைகளை அமைத்துள்ளனர். இது விடயத்தில் அதிக பயன்பாட்டுத் தேவையுள்ள ஒரு சில சட்டபூர்வமற்ற கடவைகளையாவது பாதுகாப்பான கடவைகளாக மாற்றுவதனூடாக மக்கள் சிரமத்தைக் குறைத்து, பாதுகாப்பான பயணத்தை உறுதி செய்ய புகையிரதத் திணைக்களம் முன்வரவேண்டும்.

### கடவைக் காப்பாளர்கள்

புகையிரத மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆனால் கடவைக் காப்பாளர்களற்ற - பாதுகாப்பற்ற கடவைகள் பலவும் காணப்படுவதையும் காணலாம். இவற்றிலும் அதிகளவு விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக கச்சேரி - நல்லூர் வீதி, அரியாலை, நெடுங்குளம் வீதி, அரியாலை கிழக்கு நாவலடி போன்ற இடங்களிலுள்ள கடவைகள் இத்தகைய கடவைகளே. இவற்றில் இடம்பெற்ற விபத்துக்கள் பல உயிர்களை காவு கொண்டமை குறிப்பிடத்தக்கது. இக்கடவைகளை பராமரிக்கத் தேவையான ஆளணியினரை நியமிக்கத் தம்மிடம் போதிய நிதியில்லையென்று புகையிரத திணைக்களம் கைவிரிக்கின்றது.

ரணசிங்க பிரேமதாஸ நாட்டின் ஜனாதிபதியாகவிருந்த காலத்தில் பாதுகாப்பற்ற கடவைகளில் இடம்பெற்ற விபத்துக்களைக் கட்டுப்படுத்த ஜனசவிய உதவி பெற்ற குடும்ப இளைஞர்களை கடவைக் காவலர்களாகத் தற்காலிகமாக நியமித்து அவர்களுக்கு 1000/= கொடுப்பனவும் மாதாந்தம் வழங்கப்பட்டதும், மூங்கில்களைக் கொண்டு கடவைத் துலாக்கள் அமைக்கப்பட்டிருந்ததும் வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

கடவைக் காவலர்களை நியமிக்காமல் புகையிரதத் திணக்களம் பாராமுகம் காட்டுவதால் விபத்துக்களைக் கட்டுப்படுத்த வட பிராந்திய பொலிஸ் திணைக்களம் நல்லெண்ண அடிப்படையில் வடக்குப்பாதையில் 40 கடவைக் காவலர்களை தற்காலிகமாக நியமித்து, தன் நலன் சேவை நிதியிலிருந்து மாதாந்தம் தலா 7500/= வழங்கி வருவது பாராட்டுக்குரியது. இது பலரும் அறிந்திராத செய்தி.

நம் பிரதிநிதிகள், சபைகள், சங்கங்கள், நிறுவனங்கள் என்பனவற்றிற்கும் இத்தகைய அக்கறையிருப்பதாகத் தெரியவில்லை. வழிபடுவதற்கே ஆட்களில்லா ஆலயங்களில் பெரும் செலவில் கோபுரங்கள், மடங்கள் கட்டி விழாக் கொண்டாடும் ஆலய நிர்வாகங்கள் அள்ளி வீசும் பணத்தில் ஒரு பகுதியையாவது இத்தகைய மனிதநேயப் பணிகளுக்கு ஒதுக்கினால் அதுவே பெரும் புண்ணியமாகும்.

சில கடவைக் காவலர்கள் தம் கடவைகளில் கடமை நேரங்களில் காணப்படுவதில்லையென்றும், பணி நேரத்தில் நண்பர்களுடன் இணைந்து அரட்டையடிப்பதாகவும், கவனயீனமாக இருப்பதாகவும் பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர். இது தொடர்பில் யாழ்.பிரதம புகையிரத நிலையத்தில் இயங்கும் பொறியியல் பிரிவு அலுவலகத்தில் முறைப்பாடுகளை பதிவு செய்ய முடியுமென தெரிவிக்கப்படுகின்றது. எனவே கடவைகளுக்கு உரிய பாதுகாப்பு ஒழுங்குகளை மேற்கொள்வதே விபத்துக்களைக் குறைக்க உதவும்.

### அதிகமாக உயர்த்தப்பட்ட புகையிரதத் தடம்

தற்போதைய வடக்குப் புகையிரதப்பாதை முன்னைய பாதையை விட சுமார் 1.5 மீற்றர்கள் உயர்த்தப்பட்டுள்ளது. வேகத்தை அதிகரிப்பதற்காகவே இவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். ஆனால் மழை வெள்ளம் தேங்கி பாதை சேதமடைவதைத் தடுக்கவே அளவுக்கதிகமாக உயர்த்தப்பட்டுள்ளதாக மக்கள் கருதுகின்றனர்.

பாதை உயர்த்தப்பட்டதால் வாகனங்கள் கடவைகளில் 60 முதல் 70 பாகை வரை நிலைகுத்தாக ஏறிக் கடக்க வேண்டியுள்ளது. இதனால் சாரதிகள் ஏற்றத்தில் ஏறுவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துவதால் புகையிரதப் பாதையை கவனிப்பது அரிது. மேலும் வாகன இயந்திரமும் சடுதியாக நின்றுவிடக்கூடும் இத்தகைய சந்தர்ப்பங்கள் விபத்துக்களுக்கு ஏதுவாகலாம். பாதை உயர்த்தப்பட்டதால் இருமருங்கிலுள்ள குடியிருப்புக்களில் வெள்ள அபாயமும் ஏற்படுகின்றது. கச்சேரி - நல்லூர் வீதிக் கடவைக்கருகில் வசிக்கும் 11 குடும்பங்கள் புகையிரத பாதை புனரமைக்கப்பட்ட பின் ஆண்டுதோறும் வெள்ள அனர்த்தத்தால் குடிபெயர்கின்றனர்.

முன்னைய காலங்களில் இத்தகைய கஷ்டத்தை தாம் அனுபவிக்கவில்லை யென்று அம் மக்கள் குறிப்பிடுகின்றனர். பாதையை புனரமைத்த இந்திய நிறுவனமான ICORN எமது பிரதேச புவியியல் நிலைகளைக் கருத்தில் கொள்ளாது தமது வேலை இலகுபடுத்தலை மட்டுமே கருத்திலெடுத்து செயற்பட்டதே இத்தகைய இடர்களுக்குக் காரணமென அவதானிகள் கருத்துரைக்கின்றனர்.

மொத்தத்தில் புகையிரத சேவையால் நன்மைகள் பல உண்டாயினும், பாதையின் மறுசீரமைப்பு, மக்களின் அபிப்பிராயங்கள், புவியியல் சாத- பாதக நிலைகள் போன்றவற்றை கருத்தில் உள்வாங்காமையால் அசௌகரியங்களையும், ஆபத்துக்களையும் மக்களுக்கு அதிகப்படுத்தியுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் சௌகரியங்கள் தொடர்பில் உரிய தரப்பினர் கருத்திற் கொண்டு பொருத்தமான மக்கள் நலன்சார் மாற்றீடுகளை அமுல்படுத்தத்தவறின் புகையிரதம் எம்மவர் மனங்களில் பகை ரதமாகவே தொடர்ந்தும் வலம் வரும்.

விழிச்சுடரின் பார்வை தொடரும்

# ஆப்கானிஸ்தான் அணியின் மோஸ்ட் வான்டட் பட்ஸ்மேன்



ஆசியக் கோப்பையின் சுப்பர் 4 சுற்றில் இந்தியாவுக்கு எதிரான போட்டியில் சதம் அடித்து மிரட்டல் காட்டியுள்ளார் ஆப்கான் வீரர் முகமது ஷஷாத்.

நடப்பு ஆசியக் கோப்பை தொடரில் வங்கதேசத்திற்கு எதிராக அரை சதமடித் ஷஷாத், இந்தியாவிற்கு எதிரான போட்டியில் 88 பந்துகளில் 10 பவுண்டரிகள் 6 சிக் சர்களுடன் சதமடித்து அசத்தினார்.

இது இவரின் 5ஆவது சதமாகும். மேலும், இந்தியாவுக்கு எதிராகச் சதமடித்த முதல் ஆப்கானிஸ்தான் வீரர் என்ற சாதனையை நிகழ்த்தினார். இந்தத் தொடரில் முன்னணி வீரர்கள் எவருமே இந்தியாவுக்கு எதிராக சதம் அடிக்காமல் இருக்க, இவர் சதம் அடித்து அசத்தியுள்ளார்.

**யார் இந்த ஷஷாத்?**

அதிரடிதான் இவரது பாணி. எந்தப் பந்தாக இருந்தாலும் அதை அடித்து ஆடவே நினைப்பார். இவரது ஆட்டத்திறன்தான் இவரது பெரும் பலம். விக்கெட் கீப்பரான இவரை பற்றிய சின்ன பிளாஷ்பேக் இதோ...

ஆப்கானிஸ்தான் அணிக்காக சிம்பாவே லெவன் அணிக்கெதிராகக் கடந்த 2009ஆம் ஆண்டு நடைபெற்ற ஐசிசி உலகக் கோப்பைத் தகுதிச்



சுற்றுப் போட்டியில் இவர் அறிமுகமானார். அதே ஆண்டின் இறுதியில் நெதர்லாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆப்கானிஸ்தான் அணியில் அவர் இடம்பிடித்தார். அதில், 110 ஓட்டங்கள் குவித்து ஆப்கானிஸ்தான் அணிக்கு பர்ஸ்ட் கிளாஸ் கிரிக்கெட்டில் முதல் வெற்றியை அவர் ஈட்டித்தந்தார். இதன்மூலம், சதமடித்த முதல் ஆப்கானிஸ்தான் வீரர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார். அன்று முதல் இன்று வரை ஆப்கானிஸ்தான் அணியின் கொண்டாடப்படும் துடுப்பாட்டவீரராக வலம் வரும் ஷஷாத்தின் கரியர், அதன்பின்னர் ஏறுமுகம் கண்டது.

2010ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் அயர்லாந்து அணிக்கெதிரான இருபது-20 போட்டியில், தனது 22 வயதிலேயே ஆப்கானிஸ்தான் அணிக்காக அறிமுகவீரராகக் களமிறங்கினார்.

அதே ஆண்டில் கனடா அணிக்கெதிரான இன்டர்காண்டி னென்டல் கோப்பைக்கான தொடரில் இரட்டை சதமடித்த (214 நொட் அவுட்) அவர், ஃபர்ஸ்ட் கிளாஸ் கிரிக்கெட்டில் இரட்டை சதமடித்த முதல் ஆப்கானிஸ்தான் வீரர் என்ற சாதனைக்குச் சொந்தக்காரர் ஆனார்.

அந்தப் போட்டியில் கனடா அணி நிர்ணயித்த 494 ஓட்டங்கள் இலக்கை ஆப்கானிஸ்தான் அணி எட்டிப்பிடித்து வரலாறு படைத்தது. அதேபோல், இருபது-20 போட்டி ஒன்றில் அதிக விக்கெட்டுகள் (5) விழக் காரணமாக இருந்த விக் கெட் கீப்பர் என்ற சாதனை ஷஷாத் வசமே இருக்கிறது.

ஆப்கானிஸ்தானின் ஜலலாபாத் பகுதியைச் சேர்ந்த ஷஷாத், இந்தியாவிலேயே பெரும்பான்மையான நாட்களைக் கழித்திருப்பதால், இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் டோனியைத் தனது நெருங்கிய நண்பர் என்கிறார்.



சமீபத்தில் டெஸ்ட் அந்தஸ்து பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, தனது முதல் டெஸ்டில் இந்திய அணிக்கெதிராகக் களமிறங்கியது.

கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த போட்டியில் ஆப்கானிஸ்தான் சார்பில் விளையாடிய 11 வீரர்களில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

2016ஆம் ஆண்டு இருபது-20 உலகக்கோப்பையில் தென்னாபிரிக்க அணிக்கு எதிரான போட்டியில் இவர் களம் இறங்கியபோது, ஆள் பார்க்க தொப்பையுடன் இருக்க, பலர் சிரித்தனர்.

ஆனால், தென்னாபிரிக்க பந்துவீச்சாளர்களையே கண்ணீர்விட வைக்கும் அளவுக்கு அந்தப் போட்டியில் சாத்து சாத்து எனச் சாத்தினார்.

ஸ்டெயினின் பந்துவீச்சை எதிர்கொள்ள பயமில்லை என அப்போது ஜாலியாகப் பேட்டியும் தந்தார். அந்தத் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தவர்கள் பட்டியலில் நான்காவது இடம் ஷஷாத்துக்கு.

அதே ஆண்டில், சிம்பாவேவுக்கு எதிரான இருபது-20 போட்டியில் 118 ஓட்டங்கள் குவித்து இருபது-20 போட்டிகளில் ஆறாவது அதிக ஸ்கோரை தன்வசமாக்கினார்.

அதன் மூலம் இருபது-20 தரவரிசையில் எட்டாவது இடத்துக்கு முன்னேறினார். அடுத்தடுத்து அதிரடி காட்டிய இவர் இதுவரை 77 ஒருநாள் போட்டிகளில் ஆடி 5 சதம் 13 அரைசதம் உட்பட 2,544 ஓட்டங்கள் குவித்துள்ளார். ஆப்கானிஸ்தான் அணிக்காக அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர் இவரே. 64 இருபது-20 போட்டிகளில் ஒரு சதம், 11 அரைசதங்கள் உட்பட 1860 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இந்த போட்டியில் நாணய சுழற்சியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி, 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கு 252 ஓட்டங்கள் எடுத்துள்ளது. இதில், ஷஷாத் மட்டும் 124 ஓட்டங்கள் எடுத்தார்.

## 11 ஆண்டுகளாக மெஊள;ஸி, ரொனால்டோவிடம் இருந்த விருது

# இன்று குரோசிய அணித்தலைவரின் கைகளில்

பீபா வழங்கும் 'Men's player of the year' விருதை குரோஷியா கப்டன் லூகா மோட்ரிச் வென்றுள்ளார். இந்த விருதின் மூலம், கடந்த 11 ஆண்டுகளில் உலகின் சிறந்த வீரர் விருதை மெஸ்ஸி, ரொனால்டோ தவிர்த்து வெல்லும் முதல் வீரர் என்ற மகத்தான சாதனையைப் படைத்துள்ளார்.

இந்த ஆண்டு நடைபெற்ற கால்பந்து உலகக் கோப்பை தொடரில் குரோஷிய அணியை இறுதிப் போட்டி வரை வழிநடத்திச் சென்று அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார் மோட்ரிச். நடுகளத்தில் சுழன்று அட்டாக், டிஃபன்ஸ்




அனைத்துக்கும் பங்களித்து யாரும் எதிர்பாராத அணியை கோப்பைக்கு அருகிலேயே அழைத்துச் சென்றார். உலகக் கோப்பைத் தொடரின் சிறந்த வீரருக்கான "கோல்டன் பால்" விருதை வென்றதிலிருந்து தொடங்கியது மோட்ரிச்சின் விருதுப் பயணம்.

சர்வதேச அரங்கில் ஜொலித்ததற்காக மட்டும் அவருக்கு இந்த விருது வழங்கப்படவில்லை. சம்பியன்ஸ் லீக் கோப்பையை மூன்றாவது முறையாக வென்ற ரியல் மாட்ரிட் அணிக்கு இவர் அளித்த பங்களிப்பு அசாத்தியமானது. கிளப் அளவிலும், சர்வதேச அளவிலும் தன் அணியை ஜொலிக்க வைக்க, இந்த விருதுக்கான போட்டியில் இருந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ, முகம்மது சலா இருவரையும் பின்னுக்குத்தள்ளி வெற்றி பெற்றுள்ளார் மோட்ரிச்.

கால்பந்து உலகில் எந்த விருது வழங்கப்பட்டாலும் அங்கு மெஸ்ஸி அல்லது ரொனால்டோவின் பெயர் இடம்பெற்றுவிடும். பல வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டாலும், விருதுகள் அவர்கள் கைகளில்தாம் தவழும். அந்த இருவரின் ஆதிக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளார் மோட்ரிச். சில வாரங்கள் முன்பு வழங்கப்பட்ட ஐரோப்பாவின் சிறந்த வீரர் விருதை வென்று அசத்தியவர், இப்போது உலகின் சிறந்த வீரர் விருதையும் வென்றுள்ளார்.

# “குறுக்கு வழியில் பணம் தேடாதே” கதை சொல்லும் களை குறும்படம்

தொன்றுதொட்டு கலை, கலாசாரம் எனப் பன்முகத்தன்மை கொண்டு விளங்கியதுதான் யாழ்ப்பாணம். இயற்கையும் வனப்பும் இங்கேதான் அதிகம். ஆதிகாலத்திலிருந்தே கதைகளும் நாடகங்களும் இலக்கியங்களும் வளர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. இருப்பினும் தென்னிந்திய சினிமா மோகம் எங்கள் ஊர்க் கலைஞர்களை வளர விடாமல் முளையிலேயே கிள்ளி எறிந்து விட்டது என்றுதான் கூறவேண்டும். தென்னிந்திய சினிமா நடிகர்களான சிவாஜி, எம்.ஜி.ஆர்.,ரஜினி போன்றோரை தெரிந்த எமக்கு ஏன் இன்னமும் எம்மவர்களையும் அவர்களையும் அடையாளம் காண முடியாமல் உள்ளது. படமா கட்டும், இசையாகட்டும், கதையா கட்டும், கதைக் கரு வாகட்டும், ஏன் பேச்சு வழக்கு ஆகட்டும் அனைவரும் இந்தியாவின் அடிமைகளாகவே மாறி விட்டோம் என்பது அறிந்தும் அழிந்துகொண்டு செல்வது தெரியவில்லை போலும். இருப்பினும் இலங்கையைப் பொறுத்த வரையில் சினிமா தொழில்நுட்பத்தில் பின்தங்கிய ஒரு நிலையிலேயே நாம் இருக்கின்றோம். டார்வினின் கூர்ப்புக் கொள்கைப் படி “தக்கணப் பிழைத்தல்” இங்கே முக்கியமாகக் காணப்படுகின்றது. அதாவது எந்தவொரு விடயத்திலும் தக்கணப் பிழைப்பது என்பது மிகவும் அவசியமான ஒன்று. அதாவது காலத்திற்கு ஏற்றாற் போல் மாறிக் கொள்ளுதல் எனப் பொருள்படும். படத்தின் கருவிலிருந்து கதை நகர்ந்து செல்லும் விதம், நடிகர்களின் நடிப்புத்திறன் மற்றும் சினிமா தொழில்நுட்பம் பயன்படுத்தியிருக்கும் விதம் என்பன காலத்திற்குக் காலம் மாறக் கூடியதாக இருக் கின்றது. இதுவே மக்கள் மத்தியில் மக்கள் மனதில் மிகவும் ஆழமாகப்பதியும் ஒரு விடயம். அந்த வகையில் ஏனைய ஊடகங்களைவிட சினிமா என்கின்ற ஊடகமானது பெருந்திரளான சனக் கூட்டத்தை தன்னகத்தே கொண்டுள்ளது. ஒரு சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயத்தை தொலைக்காட்சியிலோ வானொலியிலோ அச்சு முறையிலோ சொல்வதைவிட சினிமாப்பாணியில் சொல்ல விழைவது மக்கள் மத்தியில் அதிக தாக்கத்தை ஏற்படுத்த வல்லது.

இந்திய சினிமா எவ்வளவோ வளர்ந்து விட்டது. அங்கே திரைப்படங்கள் என்பன வணிகமயப்படுத்திய ஒன்றாகக் காணப்படுவதனால் காதல் சார்ந்த கதையோ அல்லது சண்டைக் காட்சிகள் சார்ந்த கதையோ மக்கள் மத்தியில் பிரபல் யமாகக் கூடியது. ஆனால் இலங்கையைக் குறிப்பாக யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் மக்கள் மத்தியில் தற்போது சிறந்த வலுவான கதைக் களத்துடன் கூடிய கதைகள் சமூகத்திற்கு மிகவும் தேவையான ஒன்றாக மட்டும் அல்லாமல் நிலைத்து நின்று எம்மை, எம் திறமையை நிரூபிக்க வேண்டிய கடப்பாட்டிலுமுள்ளது. இன்னும் சிறிது காலத்திற்குப் பிறகு தொழில்நுட்பம் வளர்ந்த பிற்பாடு மக்களுக்கு தேவையான காதல்கதைகளை அல்லது மசாலா படங்களை அல்லது வணிகமயப் படுத்தப்பட்ட படங்களை நாம் தயா ரிக்கலாம். இருப்பினும் தற்போது சமூகம் திசை மாறிச் சென்று கொண்டிருக்கின்றது. அந்த சமூகத்தை ஒரு நிலைப்படுத்தி ஒரு வழிக்குக் கொண்டு செல்ல சிறந்த விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய படங்கள்தான் அதிகம் தேவைப்படுகின்றன.

இதற்கெல்லாம் முற்றுப் புள்ளியாக குறும்படங்கள் மூலமாக எங்கள் ஊர் இளைஞர்கள் வெளியில் தலைகாட்டத் தொடங்கியிருக்கின்றார்கள். அவ்வாறான தரமான படம் தான் கார்த்திக் சிவா இயக்கத்தில் வெளிவந்த




“களை” 40 நிமிட குறும்படம். கடந்த ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி செல்வா திரையரங்கில் திரையிடப்பட்ட இந்தத் திரைப்படம் மக்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றிருக்கிறது. மேலும் செல்வா திரையரங்கில் மீண்டும் செப்டெம்பர் 2 ஆம் திகதி திரையிடப்பட்டிருந்தவேளை மக்களின் கோரிக்கைக்கு அமைவாகவல் வெட்டித்துறையில் அமைந்துள்ள நிமலேந்திரா திரையரங்கிலும் செப்டெம்பர் 10 ஆம் திகதி அளவில் மீண்டும் திரையிடப்பட்டிருக்கின்றது.

“களை” சமுதாயத்தில் நிச்சயமாக பிடுங்கி எறியப்பட வேண்டிய ஒன்று. இலங்கையை குறிப்பாக யாழ்ப்பாணத்தை நேரடியாக தாக்கிவரும் கஞ்சா, ஹெரோயின் போன்ற போதைப்பொருள் பாவனைதான் இந்தப் படத்தின் கதைக் கரு. அதனை மையமாக வைத்தே கதைக்கரு நகர்த்தி செல்லப்பட்டிருக்கின்றது.

கதைச் சுருக்கம்: இந்த உலகில் பணம் மிகவும் அவசியமான ஒன்று. காதலில் ஜெயிப்பதற்குக் கூட பணம்தான் தேவை என்கின்ற எண்ணத்தில் கதாநாயகனாக வரும் மாணவன் ஒருவன் எப்படியாவது பணம் சம்பாதிக்க வேண்டும் என்கின்ற நிலையில் கஞ்சா கடத்தல் தலைவர் ஒருவரிடம் வேலைக்குச் செல்கின்றவேளை கதாநாயகன் மாணவன் என்பதனால் வேலைக்கு எடுக்க தயங்கும் தலைவரிடம் தனது திறமையைக் காட்டி வேலைக்கு அமர்கின்றான். வேலைக்கு வந்த சில காலத்திலேயே தலைவருக்கு அடுத்த இடத்தை பிடித்து அந்த கூட்டத்தின் முக்கிய பங்காக மாறுகின்றான். அந்தக் கூட்டத்தில் இவனது வளர்ச்சியைப் பிடிக்காத சிலர் இவனை வஞ்சிக்க முயல்கின்றனர். நம்பிக்கைத் துரோகத்தில் சிக்கிய இவன் மீண்டு வந்தானா? இவனது கல்வி என்ன வானது? கஞ்சா கடத்தல் கூட்டத்தின் தற்போதைய நிலை என்ன? என்பதனை ஆவணப் படவடிவாக்கத்தில் கொண்டு வந்து மிகவும் நேர்த்தியாக கதை சொல்லப்படுகின்றது. முக்கியமாக போதைப் பொருள் பாவனை பற்றிய தகவல்கள் அனைத்துமே தற்போதைய உண்மை நிலவரத்தை கூறு வனவாகவே உள் ளன. பிரவீன் சிவா ஒளிப்பதிவில் பத்ம யன் சிவா இசையமைப்பில் கதை விறு விறுப்பாக நகர்ந்து கொண்டிருக்கின்றது. எங்குமே தொய்வு ஏற்படவில்லை. இந்தப்படத்தின் முக்கிய அம்சமாக பத்மயன் சிவாவின் இசையைக் குறிப்பிடலாம். குறிப்பாகச் சொல்லப்போனால் கதையாடல் பாங்கு யாழ்ப்பாண பேச்சுவழக்கை ஒட்டியே இருந் தாலும் சினிமாவிற் கென்ற மொழியைப் பயன்படுத்தி இருந்தமை, கதை நகர்த்தப்படும் விதம், கதையில் தொய்வு இல் லாமல் செல்லும் இசை, கமரா ஆங்கிள் மற்றும் தொழில்நுட் பங்களைப் பயன்படுத்தி இருக்கின்றவிதம், பருத்தித்துறைக் கடற்கரையோரங்களையும் ஏனைய காட்சிகளையும் காட்சிப்படுத்தி இருக்கின்ற விதம் என்பன இந்திய சினிமா அளவிற்கு எங்கள் ஊர்க் கலைஞர்கள் வளர்ந்து விட்டார்கள் என்பதனை மட்டும் அல்லாமல் எங்களது வளங்களையும் வனப்புகளையும் வெளிப்படுத்த தொடங்கிவிட்டோம் என்றே கூறவேண்டும். இவ்வாறான எங்களது படைப்புகளை அங்கீகரித்து மக்கள் மத்தியில் கொண்டுபோய் சேர்ப்பது நமது கடமையாகும். வாழ்க்கையில் பணம் முக்கியமான ஒரு விடயம் தான். ஆனால் அதைக் குறுக்கு வழியில் அடைய நினைத்தால் வாழ்க்கையும் குறுகிப் போய்விடும் என்பதனைத் தெளிவாகக் காட்டுகிறது. களை யாழ்ப்பாணத்தின் நிதர்சனம்.

தேவயசிவீரசிங்கம்
ஊடகக் கற்கைகள் பிரிவு
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பணம் பந்தியிலே
இசை : கே.வி.மகாதேவன்
இயற்றியவர் : கா.மு.ஷெரீப்
பாடகர்: சீர்காழி எஸ்.கோவிந்தராஜன்



பணம் பந்தியிலே குணம் குப்பையிலே - இதைப்
பார்த்து அறிந்து நடக்காதவன் மனிதனில்லே
பிழைக்கும் மனிதனில்லே
பணம் பந்தியிலே குணம்

ஒண்ணுந்தெரியா ஆளானாலும்
பணமிருந்தாலே - அவனை
உயர்த்திப் பேச மனித கூட்டம் நாளும் தப்பாதே
ஒண்ணுந்தெரியா

என்ன அறிவு இருந்திட்டாலும்
பணமில்லாத ஆளை
என்ன அறிவு இருந்திட்டாலும்
பணமில்லாத ஆளை - உலகம்
எந்த நாளும் மனிதனாக மதிக்க மாட்டாதே
பணம் பந்தியிலே குணம்

ஆளை ஆளு புகழ்வதெல்லாம்
பணத்துக்காகத் தான் - பணம்
அகன்று விட்டால் புகழ்ந்த கூட்டம்
இகழும் உண்மை தான்
ஏழ்மை நிலை வந்தால்
நேசர் யாரும் இல்லை
ஏழ்மை நிலை வந்தால் நேசர்
யாரும் இல்லை - இதை
எண்ணிப் பார்த்து நடக்காதவன்
அடைவான் தொல்லை
பணம் பந்தியிலே குணம்

உன்னால் உயர்ந்த நிலையடைந்தோர்
நிறைய பேர்கள் உண்டு - அவர்கள்
உனது நிலை தாழ்ந்த பின்பு
ஒதுங்குவார்கள் கண்டு
மண்ணாய் அவரை மதித்து
நீயும் துணிவுமே கொண்டு
மண்ணாய் அவ்வரை மதித்து
நீயும் துணிவுமே கொண்டு - நாளும்
முயன்று மேலும் பாடுபட்டால் வெற்றியும் உண்டு

பணம் பந்தியிலே குணம் குப்பையிலே - இதைப்
பார்த்து அறிந்து நடக்காதவன் மனிதனில்லே
பிழைக்கும் மனிதனில்லே
பணம் பந்தியிலே குணம் குப்பையிலே

# செக்க சிவந்த வானம்

திரைவிமர்சனம்



தமிழ் சினிமாவில் ஒரு சிலருக்கு மட்டுமே படம் வெற்றி தோல்வி தாண்டி ஒவ்வொரு படத்திற்கான எதிர்ப்பார்ப்பும் விண்ணை முட்டும். அப்படி படத்திற்கு படம் எதிர்ப்பார்ப்பை எகிற வைப்பவர் தான் மணி ரத்னம். அவருடைய இயக்கத்தில் வெளிவந்துள்ளது செக்கச் சிவந்த வானம்.

ரகுமான் இப்படத்தின் இசை வெளியீட்டு விழாவில் கூறியிருப்பார், இது நாயகன் ஸ்டைல் படம் என்று. மேலும் மணிரத்னம் புல் போர்மில் உள்ளார் என்றும் தெரிவித்தார். அவரின் வார்த்தைகள் உண்மையானதா? பார்ப்போம்.

பிரகாஷ்ராஜ் தமிழகத்தின் மிகப்பெரும் புள்ளி, விஜய் சேதுபதி ட்ரைலரில் சொல்வது போல் மதிப்பிற்குரிய கிரிமினல் தான் பிரகாஷ்ராஜ்.

இவரை ஆரம்பத்திலேயே ஒரு கும்பல் கொல்ல முயற்சி செய்கின்றது. அதை தொடர்ந்து அவரின் மூன்று மகன்களும் யார் அப்பாவை இப்படி செய்தார்கள் என தேட ஆரம்பிக்கின்றனர்.

ஒருவரின் மீது ஒருவருக்கு சந்தேகம், இடையில் பெரியவர் இடத்தை யார் பிடிப்பது என்று போட்டியும் கூட.

ஒரு கட்டத்தில் பிரகாஷ் ராஜ் இறக்க, அவரை கொல்ல முயற்சி செய்தது யார், அந்த இடம் யாருக்கு என்பதே படத்தின் மீதிக்கதை.

அரவிந்த்சாமி, அருண் விஜய், சிம்பு, விஜய் சேதுபதி என 4 நடிகர்களை வைத்து இவர்கள் அனைவருக்கும் சரியான கதாபாத்திரம் கொடுத்து அதை வெற்றிக்கரமாக முடிப்பது சாதாரண விடயமில்லை. அப்படி ஒரு விடயத்தை மணிரத்னத்தை தவிர வேறு யாராலும் செய்ய முடியாது என்று இந்த வயதில் நிரூபித்து நிமிர்ந்து நிற்கின்றார்.

அரவிந்த்சாமி படத்தின் 4 கதாபாத்திரங்களில் கை ஓங்கி நிற்பது இவருக்கு தான், முரடன் அப்பா சொல்வதை மட்டுமே கேட்டு சுதந்திரம் என்றே இல்லாமல் அடிதடி என்று வாழ்ந்தே, வாழ்க்கையை ஓட்டுகின்றார். அவர் அப்பாவின் இடத்தை பிடிக்க விரும்புவது, அதற்கான விடயங்களை மேற்கொள்வது, அதன் இழப்பு, சோகம், வருத்தம் என செம்ம ஸ்கோர் செய்கின்றார்.



வெளிநாட்டு ஜாலி பறவைகளாக அருண்விஜய், சிம்பு, எல்லோருக்கும் ஒரே நோக்கம் பிரகாஷ்ராஜ் இடத்திற்கு யார் வருவது என்பது தான், அருண் விஜய் செம்ம ஸ்டைலிஷாக இருக்கின்றார், இவரை வைத்து எத்தனை பெரிய அக்ஷன் காட்சிகளையும் அசால்ட்டாக எடுத்துவிடலாம், அதிலும் நீச்சல் குளத்தில் விழுந்து எழுந்து செல்லும் காட்சி பிரமிப்பு.

சிம்பு கடைக்குட்டி, அண்ணனால் தனக்கு ஒரு வலை சுற்றப்படுகின்றது என அறிந்து அவர் ஒரு கேங்கை தேற்றி களத்தில் இறங்குகின்றார். நீண்ட நாட்களுக்கு பிறகு சிம்புவிற்கு பல எமோஷனில் நடிக்கும் ஒரு வாய்ப்பு, அதுவும் தன் அம்மாவிடம் நீ எனக்கு மட்டும் அம்மாவா இருமா' என்று அழும் இடத்தில் சுப்பர். இந்த சிம்பு தான் இத்தனை நாட்கள் மிஸ்ஸிங்.

விஜய் சேதுபதி அட மணி ரத்னம் படத்தில் மீண்டும் ஒரு வைலன்ஸ் சைட் மௌன ராகம் கார்த்திக் என்றே சொல்லலாம்.

அவருக்கே உரிய ஸ்டைலில் வசனத்தில் வரும் காட்சிகளில் எல்லாம் சிக்ஸர் தான், கடைசி வரை 'நீங்க நல்லவரா, கெட்டவரா?' என்று ஓடியன்ஸ் கேட்கும் படியே அவர் கதாபாத்திரம் கொண்டு போனது ரசிக்க வைக்கின்றது. இவர்களை தவிர ஜோதிகா, ஐஸ்வர்யா



ராஜேஷ், அதிதி ராவ் என பெரிய பட்டாளமே இருந்தாலும், பிரகாஷ்ராஜ், ஜெயசுதா நடிப்பு தனித்து நிற்கின்றது. கேங்ஸ்டர் கதை தளபதி, நாயகனுக்கு பிறகு மணிரத்னம் தொட்டு இருக்கு களம்.

ஆனால், இன்றும், தன் இடம் தனக்கு தான் என நிரூபிக்கின்றார், 'இதெல்லாம் எதுக்கு சொடக்கு போட்டால் இந்த உயிர் இப்படி போய்டும், நீ நான், நாளைக்கு பிறக்க போறவன் வரைக்கும் சைபர்' தான் என வரும் வசனம் எல்லாம் ஆயிரம் அர்த்தம்.

படத்தின் ஐந்தாவது ஹீரோ ரகுமான் தான், பாடல்கள் மாண்டேஜாக வந்தாலும், பின்னணியில் படத்தை தூக்கி வேற லெவலுக்கு கொண்டு செல்கின்றார். அதேபோல் சந்தோஷ் சிவனின் ஒளிப்பதிவு பல இடங்களை மிக அழகாக படம்பிடித்து காட்டியுள்ளது.

படத்தின் திரைக்கதை, இத்தனை கதாபாத்திரத்தை வைத்து அதை அழகாக கொண்டு சென்றவிதம்.

நடிகர், நடிகைகள் நடிப்பு, முடிந்தளவு எல்லோரும் ஸ்கோர் செய்துள்ளது.

கிளைமாக்ஸ் டுவிஸ்ட் ட்ரைலரை பார்த்து அப்படியே படம் செல்கின்றது என்று நினைக்கும் தருணத்தில் தடம் மாறும் கிளைமாக்ஸ், படத்தின் இசை, ஒளிப்பதிவு என டெக்னிக்கல் விஷயங்கள்.

மணிரத்னம் படத்திற்கே உண்டான கொஞ்சம் அதுவும் இரண்டாம் பாதியில் மெதுவாக நகரும் சில காட்சிகள் (ஆனால், கதைக்கு அதுவும் தேவை தானே).

ஐஸ்வர்யா ராஜேஷ், அதிதிராவ் இவர்கள் எல்லாம் நட்சத்திர அந்தஸ்திற்காகவே தவிர பெரிதும் கவரவில்லை.

**மொத்தத்தில் ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமென்றால் மணிரத்னம் இஸ் பேக்.**

# சங்கரை தூண்டிய சம்பவம்

தமிழ் சினிமா தாண்டி இந்திய சினிமாவே வியக்கும் பிரமாண்ட படங்களை எடுப்பவர் இயக்குநர் ஷங்கர். இவர் இயக்கியது சில படங்களே என்றாலும் பெரும்பாலும் மறக்கமுடியாத சாதனை படங்கள் தான்.

அப்படி உருவான படம் தான் முதல்வன். ஒரு நாள் முதல்வராகும் சாமானியன் என்ற புதிய கற்பனையில் உருவாக்கியிருந்தார்.

இவருக்கு இந்த ஐடியா உருவாக காரணம் என்ன வென்றால், ஜீன்ஸ் படத்தின் சூட்டிங்குக்காக இங்கிலாந்து சென்றிருந்தனர்.

அப்போது உலக அழகி பட்டம் வென்ற ஐஸ்வர்யா அங்கு வந்திருப்பதை அறிந்த அங்கிருந்த அரசு அதிகாரிகள் அவரை கௌரவிக்கும் வண்ணம் வரலாற்று சிறப்பு வாய்ந்த பிக்பென் கடிகாரத்தின் சாவியை ஒரு நாளைக்கு கொடுத்தனர். அங்குள்ள வழக்கப்படி அந்த சாவி வைத்திருக்கும் நபர் தான் அந்த நகரத்தின் தலைவர் போல சிறப்பு வாய்ந்த பதவியாகும்.

இதை பார்த்த ஷங்கருக்கு இதே போல சாதாரண நபர் ஒருநாள் முதல்வராக இருந்தால் எப்படி இருக்கும் என்ற எண்ணத்தில் தான் அந்த கதையை எழுத தொடங்கினாராம்.

இந்த தகவலை ஷங்கர் சில வருடங்களுக்கு முன்பு கொடுத்த பேட்டியில் கூறியிருந்தார்.

மேலும் இதே முதல்வன் படத்தில் வரும் கவனிக்கப்படாத ஒருவசனம் ஒரு படத்தில் செம டிரெண்டான பாடலாக மாறி ஹிட்டடித்தது.

# எழுவர் விடுதலை நம் கரிசனத்தின் தொடக்கம் ஆகட்டும்!

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 27 ஆண்டுகளாகச் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் உள்ளிட்ட எழுவரையும் விடுதலை செய்வதற்கு தமிழக அமைச்சரவை பரிந்துரை செய்திருப்பது வரவேற்கத்தக்க முடிவு.

முதல்வர் பழனிச்சாமியின் ஆட்சிக் காலகட்டத்தில், தமிழக மக்களின் உணர்வுக்கு மதிப்பளிக்கும்வகையில் எடுக்கப்பட்டிருக்கும் வரலாற்று முடிவு இது என்று சொல்லலாம்.

ராஜீவ் காந்தி 1991 மே 21 அன்று ஸ்ரீபெரும்புதூரில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு இரத்தக் கறையாகவே படிந்துவிட்டது.

பொதுவாக வன்முறைக்கு எதிரான பாதையிலேயே பயணித்து வந்திருக்கும் நவீன தமிழக வரலாற்றில், துயரமான ஒரு கரும்புள்ளி என்றே இந்த அரசியல் படுகொலையைச் சொல்ல வேண்டும்.

ஈழப் போராட்டம், விடுதலைப் புலிகள் தொடர்பான தமிழக மக்களின் பார்வையிலேயே மாற்றம் உண்டானது.

பின்னாளில், ஈழப் போராட்டத்தின் மிக மோசமான தோல்விக்கும்கூட இதுவும் ஒரு காரணமாகிவிட்டது.

ராஜீவ் படுகொலையின் பிரதான குற்றவாளிகள் என்று இந்திய அரசால் குற்றம் சாட்டப்பட்டவர்கள் எவரும் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாத நிலையில், அந்தக் கொலையின் முழுப் பின்னணியும்கூட பொதுச் சமூகத்தின் முன் கொண்டுவரப்படாமலேயே போனது இன்னொரு துயரம்.

இந்த வழக்கில் பிரதான குற்றவாளிகளைப் பிடிக்க முடியாத சூழலில், பிடிபட்டவர்களைக் கடும் குற்றவாளிகளாக்கும் போக்கு, இந்த வழக்கின் தொடக்கத்திலிருந்தே வெளிப்பட்டது.

முன்னாள் பிரதமர் கொலை இந்திய அரசுக்கு விடுக்கப்பட்ட சவாலாகவும் பார்க்கப்பட்ட நிலையில், மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்பு அது ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டாலும் விடுதலைக்கான சாத்தியம் என்பது எழுவருக்கும் மறுக்கப்பட்டே வந்தது.

ராஜீவ் கொலை வழக்கின் அடுத்தடுத்த நிலைக் குற்றவாளிகள் 14 ஆண்டுகளுக்குள் விடுவிக்கப்பட்ட நிலையில், 26 ஆண்டுகள் கடந்தும் குற்றவாளிகள் சிறையிலேயே வாட வேண்டியிருப்பது இங்கு ஒப்பிடப்பட வேண்டியதாகிறது.

இந்நிலையில், ஏழு பேரையும் விடுதலை செய்வது குறித்து முடிவெடுக்க ஆளுநருக்குத் தமிழக அரசு பரிந்துரைக்கலாம் என்று சில நாட்களுக்கு முன்பு தீர்ப்பளித்தது உச்ச நீதிமன்றம். இதைத் தொடர்ந்து, தமிழக அமைச்சரவை கூடி எழுவரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று ஆளுநருக்குப் பரிந்துரைத்துள்ளது. தமிழகத்தின் பிரதான கட்சிகளான அ.தி.மு.க, தி.மு.க உட்பட பெரும்பான்மை அரசியல் கட்சிகள் இவ்விடயத்தில் ஒருமித்த முடிவை எடுத்திருப்பது ஆக்கபூர்வமான விடயம். 2014இல் அப்போதைய தமிழக முதல்வர் ஜெயலலிதா நிறைவேற்றிய துணிச்சலான சட்ட மன்றத் தீர்மானம் இங்கு நினைவுகூரப்பட வேண்டியது. மறைந்த முதல்வரின் எண்ணத்தை நிறைவேற்றியிருக்கிறார் முதல்வர் பழனிச்சாமி. தமிழக அரசின் இந்தப் பரிந்துரையைத் தாமதிக்காமல் ஆளுநர் செயற்படுத்த வேண்டும்.


இந்த எழுவரும் விடுவிக்கப்படுவது தமிழகத்தைத் தாண்டியும் தேசிய அளவில் தமிழ்நாடு முன்னெடுக்கும் மிக முக்கியமான செயற்பாடாக இருக்கும். அது என்னவென்றால், சிறைகளில் உரிய விசாரணை இல்லாமலும் இந்த எழுவரைப் போலத் தொடர் மேல்முறையீடு, ஊடக கவனம், அரசியல் அழுத்தம் இல்லாமலும் சிறைகளில் அடைபட்டுக் கிடக்கும் இலட்சக் கணக்கான கைதிகளின் எதிர்காலம் மீதான கரிசனம்.

விசாரணைகளை விரைந்து நடத்தி நீதி வழங்கும் அமைப்பாக இன்னும் நம்முடைய நீதித் துறை வளரவில்லை.

நாடு முழுவதும் விசாரணைக் கைதிகளாக 2.8 இலட்சம் பேர் சிறைத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையில், இந்திய நீதிக் கட்டமைப்பின் மிக மோசமான நிலை என்றே இதைச் சொல்ல வேண்டும்.

நீதித் துறை விசாரணைக்காக சாமானியர்கள் கொடுக்கும் விலை இந்நாட்டில் இன்னும் கொடூரமானதாகவே இருக்கிறது.

அவர்கள் மீதான கரிசனத்தின் தொடக்கப் புள்ளியாக இந்த எழுவரின் விடுதலை அமையட்டும்.



முருகன்



சாந்தன்



பேரறிவாளன்



நளினி



ரவிச்சந்திரன்




ராபர்ட் பயஸ்



ஜெயகுமார்

## "விலை விடயம் இராணுவ இரகசியம்"
## ரஃபேல் பேரம்; உண்மை வெளிவரவேண்டும்



பிரான்ஸிடமிருந்து 36 'ரஃபேல்' போர் விமானங்களை வாங்கும் விவகாரத்தில் மோடி அரசின் மீது ஊழல் குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கின்றன எதிர்க்கட்சிகள்.

இரண்டு குற்றச்சாட்டுகள் பிரதானமாக முன்வைக்கப்படுகின்றன. "விமானங்களுக்கு அதீத விலை கொடுக்கப்படுகிறது. ஆளும் கட்சிக்கு வேண்டிய 'ரிலையன்ஸ்' நிறுவனத்துக்கு ஒப்பந்தத்தைத் தருமாறு சலுகை காட்டப்பட்டிருக்கிறது."

"விலை விடயம் இராணுவ இரகசியம்" என்று மோடி அரசு கூறுவதும், இந்த ஒப்பந்தத்தில் பிரான்ஸ் சார்பில் கையெழுத்திட்டவரான முன்னாள் ஜனாதிபதி ஒல்லாந், "தொழிலதிபர் அனில் அம்பானிக்குச் சொந்தமான 'ரிலையன்ஸ் டிஃபென்ஸ் லிமிடெட்' நிறுவனத்தை, தயாரிப்பில் இந்தியத் தொழில் கூட்டாளியாகச் சேர்க்க வேண்டும் என்று இந்திய அரசு தரப்பில் கூறப்பட்டது" என்று பேட்டியளித்ததும் இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு வலுச்சேர்க்கின்றன.

இந்திய அரசு, பிரான்ஸ் அரசு, தஸ்ஸோ நிறுவனம் ஆகியவை குற்றச்சாட்டுகள் தொடர்பில் விளக்கம் அளித்துள்ளன என்றாலும், இதுவரையிலான விளக்கங்கள் எதுவுமே குற்றச்சாட்டுகளைத் தகர்க்கும் வகையில் இல்லை.

முக்கியமான கேள்விகள் என்னவென்றால், ஒல்லாந் கூறியதைப் போல ரிலையன்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து தயாரியுங்கள் என்று இந்திய அரசு கோடி காட்டியதா?

உண்மையென்றால், எந்தவிதத்தில் அது கூறப்பட்டது? அதைக் கூறியவர் யார்? ஒல்லாந் முழுமையாக விபரங்களை வெளியிடவில்லை. ஆகையால், இது குறித்துப் பேச வேண்டிய, நாட்டு மக்களுக்கு பதில் அளிக்க வேண்டிய கடமை இந்தியப் பிரதமருக்கே இருக்கிறது.

ரஃபேல் போர் விமானத்தின் தாக்கும் திறன் குறித்து யாரும் சந்தேகம் எழுப்பவில்லை. போஃபர்ஸ் பீரங்கி பேரத்தில் கூறப்பட்டதைப் போல, இத்தனை கோடி ரூபாய் இன்ன கணக்கில் போடப்பட்டிருக்கிறது என்றும் யாரும் கூறிவிடவில்லை.

இந்த பேரம் எந்த முறையில் நடத்தப்பட்டது என்பதைச் சுற்றித்தான் 'சந்தேகங்களும் குற்றச்சாட்டுகளும்.

2015 ஆம் ஆண்ட ஏப்ரலில் பிரான்ஸ் நாட்டுக்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடி, தன்னுடைய பயணம் தலைப்புச் செய்தியாக வேண்டும் என்பதற்காக 36 விமானக் கொள்முதல் குறித்துத் திடீரென அறிவித்தபோது அரசின் மூத்த அதிகாரிகளைக்கூட அந்த அறிவிப்பு வியப்பில் ஆழ்த்தியது. காரணம் அவர்கள் காங்கிரஸ் கூட்டணி அரசு காலத்தில் தொடங்கிய 126 விமானங்களை வாங்குவதற்கான பேரத்தை முடிப்பதற்காகத் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஆக, இந்த ஒப்பந்த உருவாக்கத்தில் வழக்கமான ஒப்பந்தங்களைக் காட்டிலும் கூடுதலான பொறுப்பு மோடிக்கு இருக்கிறது.

புதிய அறிவிப்பு இன்று ஏராளமான சந்தேகங்களுக்கும் ஊழல் குற்றச்சாட்டுகளுக்கும் வித்திட்டிருக்கும் நிலையில் இனியும் யாரும் மௌனம் காக்க முடியாது. வெளிப்படையாகப் பேசுவதுதான் ஒரே வழி.

ஊழல் நடக்கவில்லை, தவறுகளுக்கு இடமில்லை என்றால், நாடாளுமன்றுக் கூட்டுக்குழு விசாரணைக்கு உத்தரவிடுவதில் மோடி தலைமையிலான மத்திய பா.ஜ.க.அரசுக்கு என்ன தயக்கம்?

ஆசிரியர் தலையங்கம்
த ஹிந்து

facebook

# குருவி கொடுத்த விதை



சென்றவார தொடரச்சி

என்ன வியப்பு! அதனுள் இருந்து விதவிதமான உணவுப் பொருள்கள் வந்தன. சுவையான அவற்றை எல்லோரும் மகிழ்ச்சியாக உண்டனர். மீண்டும் அந்தப் பூசணிக்காயை ஒன்று சேர்த்தனர். பழையபடி அது முழுப் பூசணிக்காய் ஆனது.

மகிழ்ச்சி அடைந்த அவன், இது மந்திரப் பூசணிக்காய். நமக்கு உணவு தேவைப்படும் போது பிளந்தால் உணவு கிடைக்கும். மீண்டும் சேர்த்து விட்டால் பழையபடி ஆகிவிடும். இனி நமக்கு உணவுப் பஞ்சமே இல்லை என்றான்.

வீட்டின் முன்புறத்தில் ஒரு பூசணிக்காய் உள்ளது. அதைக் கொண்டு வாருங்கள். அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்த்து விடலாம் என்றாள் மனைவி.

அந்தப் பெரிய பூசணிக்காயை உருட்டிக் கொண்டு வந்தான் அவன். கத்தியால் அதை வெட்டினான். உள்ளிருந்து அழகான ஆடைகள், விலை உயர்ந்த மணிகள் கொட்டின.

ஜன்னலோரம் இருந்த மூன்றாவது பூசணிக்காயையும் கொண்டு வந்து வெட்டினான். அதற்குள் இருந்து பொற்காசுகள் கொட்டின.

அதன் பிறகு அவனும் மனைவியும் குழந்தைகளும் நல்ல உணவு உண்டனர். விலை உயர்ந்த ஆடைகளை அணிந்தனர். மிகப் பெரிய வீடு ஒன்றைக் கட்டத் தொடங்கினார்கள்.

உழவன் சில நாள்களில் பெருஞ் செல்வனானதை அறிந்தார் பண்ணையார்.

அவனிடம் வந்த அவர், "டேய்! முனியா! உனக்கு எங்கிருந்து இவ்வளவு செல்வம் கிடைத்தது? உண்மையைச் சொல்" என்று கேட்டார். அவனும் நடந்ததை எல்லாம் அப்படியே சொன்னான்.

தன் மாளிகைக்கு வந்தார் அவர். எப்படியாவது மேலும் செல்வம் சேர்க்க வேண்டுமென்று நினைத்தார். வீட்டில் மேல் பகுதியில் குருவிக் கூடு ஒன்றை அவரே செய்தார். குருவிகள் அவரும் அதில் தங்கும் என்று எதிர்பார்த்தார்.

அவர் எண்ணம் ஈடேறியது. ஒரு குருவி வந்து அந்தக் கூட்டில் தங்கியது. நான்கு முட்டைகள் இட்டது. நான்கு குஞ்சுகள் வெளியே வந்தன. பாம்பு வரவே இல்லை. பொறுமை இழந்த அவர் ஒரு பெரிய கம்புடன் குருவிக் கூட்டை நெருங்கினார். மூன்று குஞ்சுகளை அடித்துக் கொன்றார். ஒன்றன் காலை உடைத்துக் கீழே எறிந்தார்.

பிறகு கால் உடைந்த குருவியிடம் அன்பு காட்டுவது போல் நடித்தார். வேளை தவறாமல் உணவு அளித்தார்.

கால் சரியான அந்தக் குருவி கூட்டைவிட்டுப் பறந்து போனது.

மூன்று விதைகளுடன் குருவி மீண்டும் வரும். அரசனைவிட செல்வன் ஆவேன் என்ற எண்ணத்தில் காத்திருந்தார் அவர்.

அவர் எதிர்பார்த்தபடியே கதவைத் தட்டியது குருவி. அவரிடம் மூன்று விதைகளைத் தந்தது. ஒன்றை வீட்டின் பின்புறம் நடு. இரண்டாவதை வீட்டின் முன்புறம் நடு. மூன்றாவதைக் கிணற்றோரம் நடு என்று சொல்லி விட்டுப் பறந்து சென்றது.

எண்ணம் நிறைவேறியது என்று மகிழ்ந்தார் அவர். மூன்று தானியங்களையும் நட்டார். மறுநாளே மூன்று பெரிய பூசணிக் காய்கள் காய்த்து இருந்தன.

தோட்டத்தில் இருந்த பூசணிக்காயை வீட்டுக்குள் கொண்டு வந்தார். அதை வெட்டினார்.

அதற்குள் இருந்து எண்ணற்ற பூச்சிகள் வெளிவந்தன. அவர் வயலில் விளைந்திருந்த பயிர்களை எல்லாம் ஒரு நொடிக்குள் தின்றுவிட்டு மறைந்தன.

வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டார் அவர். முன்புறத்தில் இருந்த இரண்டாவது பூசணிக்காயை வெட்டினார்.

அதற்குள் இருந்து தீ வெளிப்பட்டது அது அவரையும் அந்த மாளிகையையும் ஒருநொடிக்குள் சாம்பல் ஆக்கியது.

கொடிய பண்ணையார் ஒழிந்தார் என்று ஊர் மக்கள் மகிழ்ந்தனர்.


மூன்றாவது பூசணிக்காயை உடைக்க யாருமே முன்வரவில்லை. அதற்குள் பாம்பு, தேள், பூரான் போன்ற எண்ணற்றவை இருப்பதாகப் பேசிக் கொண்டார்கள்.

**முற்றும்**

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1516

### பிரேம்குமார்

துன்பம் வரும் வேளையில் சிரிக்க வேண்டுமாம்



அப்பிடி பார்த்தா நான் எல்லாம் எப்பவுமே சிரிச்சிட்டேதான் இருக்கனும்

### சுரேஸ்குமார்

சிலை என்று தெரியாமல் உதவி செய்யும் குழந்தை



### காசிநாதன் கோகுலன்

இன்டர்நெட் இல்லாத நம் வாழ்க்கை இப்படித்தான் இருந்தது சந்தோசமாக, ஆரோக்கியமாக



### நிசாந்தன்


கதறி அழவும் முடியாமல் கண்ணீரை அடக்கவும் முடியாமல்



கலங்கியபடி வீதியில் நடந்து சென்ற கனமான நாளை ஒருவரும் கடக்காமல் இருக்க முடியாது

### குமார் ஸ்ரீ

மரத்தை வெட்டி ஜன்னல் செய்துவிட்டு



காற்று வருமென்று காத்திருக்கும் தேசம் இது

### வருன் கிருஷ்ணா

நூறு தடவை உதவி செய்திருந்தாலும் கடைசி உதவியை வைத்தே எடை போடுகிறான்



மனிதன் என்ற பிறவி


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 150

## முயலும் ஆமையும் முயலாமையும்





எமது கற்பனையில் உதயமாகும் சிலவற்றையே எம்மால் முயற்சிக்க முடிகிறது. முயற்சிகளில் சிலவற்றையே எம்மால் வெற்றிகொள்ள முடிகிறது. ஆனால் நாம் வெற்றி கொண்ட அனைத்துமே முயற்சிகளின் முடிவு தான். நடைமுறை வாழ்க்கையில் பல ஆமைகள் வென்றிருக்கின்றன. பல முயல்கள் வென்றிருக்கின்றன. ஆனால் முயலாமை வென்றதாக வரலாறு இல்லை.

நாம் விழும் ஒவ்வொரு தடவையும் வெற்றிகரமாக எழுந்துவர நாமாக முயற்சி எடுப்போம். நாம் தூக்கிவிட்ட ஒருவர் எம்மையும் தூக்கிவிட வருவார் என்ற எதிர்பார்ப்பு அர்த்தமற்றது. நடைமுறைச் சாத்தியமும் அற்றது. எமக்கு கை கொடுக்க இன்னொருவர் வரக்கூடும். அவருக்கு நாம் ஒரு கைமாறும் செய்யமுடியாமலும் போகக் கூடும். உதவிகளும் ஊக்குவிப்புக்களும் பிரதிபலன்களை எதிர்பார்த்து செய்யப்படுபவை அல்ல. அவற்றைச் செய்ய வேண்டியது ஒரு மானிடக் கடமை.

குடும்ப சமூக அமைதிக்கான நெறிப்படுதல்களுக்கான முயற்சிகளும் ஒரு நுட்பமான தொடர் போராட்டமே. எமது கைதவறி பொருட்கள் விழுந்து உடைந்து விடும் பொழுது மனவேதனை கொள்கிறோம். ஆனால் எமது "நாதவறி" வார்த்தைகள் தவறி உறவுகள் குடும்பங்கள் உடைந்து விடும் பொழுது அதன் தாக்கத்தை உணர மறந்துவிடுகிறோம். "நா" காக்க முயற்சிப்பதும் ஒரு பெரு முயற்சியே.

சில உண்மைகள் உணரப் பட உணர்த்தப்பட காலதாமதம் ஆகலாம். உண்மை நிலை உணரப்படும்வரை உணர்த்தப்படும்வரை அது "பொய்" போலத் தோன்றுவது ஒன்றும் புதிர் அல்ல, புதிதல்ல. அதனை உணர்த்த எடுக்கும் முயற்சிகள் சிலசமயம் இலகுவானதாக இருக்காது. இருந்தும் அதற்காக முயற்சிக்காமல் இருக்க முடியாது. எமது முயற்சியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்கு உறுதுணையாக இருக்கும். நாம் வெற்றிபெறுவோம் என்று எம்மை நாம் நம்பாதபொழுது பிறர் எம்மை நம்புவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

எமது முயற்சிகளின் பொழுது பல சவால்கள் முளைவிடும். இது சர்வநிச்சயமானது. அந்த சவால்கள் தான் எம்மை சரியான பாதையில் நெறிப்படுத்தும் வழி வாய்க்கால்களாக அமையும். எனவே சவால்களை எதிர்கொள்ள முயலாமல் இருந்துவிட முடியாது.

பிறரின் உண்மையான முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்போமாயின் எமது முயற்சிகளின் வெற்றிக்காகவும் பல கரங்கள் ஒன்றிணையும் முயற்சிகள் திருவினையாக்கும்.

நாம் முயலாக இருக்கலாம். ஏன் ஆமையாகக் கூட இருக்கலாம். ஆனால் முயலாமை என்ற பொறிக்குள் அகப்படாமல் இருந்து கொள்ள வேண்டும். ஆரோக்கிய வாழ்வு என்ற இலக்கை அடையவும் முயற்சி எடுப்போம். வெல்வோம் என்று நம்புவோம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

## மாதவிடாய்க்கு முன்னான அசௌகரியங்களை எவ்வாறு தடுக்கலாம்?

**மாதவிடாய்க்கு முன்பான அறிகுறித்தொகுதி என்றால் என்ன?**

இது பெண்களில் மாதவிடாய் ஏற்படுவதற்கு இரு கிழமைகளுக்கு முன்பான காலப்பகுதி ஏற்படும். சாதாரண நிலையிலும் வேறுபட்ட உடலியல் மற்றும் உணர்வு மாற்றங்களாகும். இவை மாதவிடாய் ஆரம்பித்தவுடன் குறைந்து நிற்கும் போது முற்றாக மறைந்து விடும்.

பெண்களில் 75% மானோர் இந்தப்பிரச்சினைக்கு தமது இனப்பெருக்கும் காலப்பகுதியில் உள்ளாகின்றனர். எனினும் 5-10% ஆன பெண்களை மிகக் கடுமையாக இது பாதிக்கிறது.

20வயதிற்கும் 40வயதிற்கும் இடைப்பட்ட குறைந்தது ஒரு பிள்ளையாவது பெற்றவர்கள், மன அழுத்தம் குடும்பசகிதம் உடையோர், மன அழுத்த குடும்பசரிதை உடையோர், மனஅழுத்தம், உணர்வுப் பிரச்சினைகளுக்குள்ளான பெண்களே அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

30-40 வயதுகளில் காணப்படும் பெண்களே கடுமையான அறிகுறிகளை வெளிக்காட்டுகின்றனர்.

**இந்தப்பிரச்சினைக்கான அறிகுறிகள் எவை? அறிகுறிகளை இருவகைப்படுத்தலாம்.**

- களைப்பு, நித்திரைக்குழப்பம், தலையிடி, பசியில் ஏற்படும் மாற்றம், உடல் அங்கங்களில் வீக்கம், தோலில் மயிரில் ஏற்படும் மாற்றம், வலி மிகுந்த மார்பகங்கள், தாகம், நிறைகூடுதல், வயிற்று நோ, முகப்பரு.
- உணர்வு மாற்றம் - மன நிலை மாற்றம், மன அழுத்தம், கோபம், பதகளிப்பு, உணர்வுத் தளம்பல், மனச்சிக்கல், முடிவெடுக்கும் தன்மையில் குழப்பம், அழுகை, மாறாட்டம், சமூகத்திலிருந்து ஒதுங்கல், கவனக்குறைபாடு, பாலியல் உணர்வில் மாற்றம்.

**இதற்கான காரணம் என்ன?**

இதற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும் மாதவிடாய்க் காலத்தில் ஏற்படும் ஓமோன் மாற்றங்கள், பெண்ணின் நிறை, உடற்பயிற்சி மனநெருக்குதல் ஆகியன இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்டுள்ளன. அதிகரித்த உடல்நிறை, குறைந்த உடற்பயிற்சி, அதிகளவில் உப்பு உள்ளடங்கிய உணவு, மதுபானம், கோப்பி அதிக மன நெருக்கடி இந்தப்பிரச்சினையை அதிகரிக்கச் செய்கின்றன.

**எனக்கு இந்தப்பிரச்சினை இருப்பதை எவ்வாறு தெரிந்துகொள்ளலாம்?**

இதற்கு விசேட பரிசோதனைகள் கிடையாது. மேற்கூறப்பட்ட அறிகுறிகள் மாதந்தோறும் உங்கள் மாதவிடாய் சக்கரத்தின் பிற்பாதிக் காலப்பகுதியில் ஏற்பட்டு உங்களின் நாளாந்த வாழ்க்கையைப் பாதிப்பின் இந்தப் பிரச்சினை இனங்காணப்படலாம். அறிகுறிகள் பற்றிய நாள்குறிப்பை ஒவ்வொரு மாதவிடாய்ச் சக்கரத்தின் போதும் பேணுதல்.



**எப்போது வைத்திய ஆலோசனையை நாட வேண்டும்?**

உங்களுடைய நாளாந்தவாழ்க்கை குழப்பமடையும் போது கடுமையான அறிகுறிகள் தோன்றும் போது.

**இந்தப் பிரச்சினையை வராது தடுக்க முடியுமா?**

இல்லை தடுக்க முடியாது. ஆனால் வாழ்க்கை முறை மாற்றம் மூலம் இந்த அறிகுறிகளைக் குறைக்கலாம்.

**இந்தப் பிரச்சினைக்கான சிகிச்சை முறைகள் எவை?**

வாழ்க்கை முறைமாற்றம் தேவையான அளவு உடற்பயிற்சி செய்தல், சமநிலையான போஷாக்கான உணவுகளை உட்கொள்ளல், சீனி, உப்பு, கோப்பி, மதுபானம் போன்றவற்றை உட் கொள்வதைக் குறைத்தல் அல்லது நிறுத்துதல், அதிகளவு பழங்கள், மரக்கறி, தானியம், தீட்டாத அரிசி விதைகள் போன்றவற்றையும் கொழுப்பில்லாத மீன், இறைச்சி ஆகியவற்றையும் உண்ணுதல்.

கல்சியம் நிறைந்த உணவு, யோக்கட், பச்சைக்கீரை வகை போன்றவற்றைச் சேர்த்தல், கொழுப்பு, எண்ணெய் வகைகளைக் குறைத்தல், உணவுண்ணும் முறை / தடவைகளை மாற்றுதல்/ (ஆறுதடவை சிறிதளவு உணவு அல்லது மூன்று முறை பிரதான உணவும் 3 முறை உப உணவும் உட்கொள்ளல்)

கல்சியம், மக்னீசியம், உயிர்ச்சத்து D.E.B6 நிறைந்த உணவு வகைகளை உண்ணுதல் தேவையானளவு நீர் பருகுதல். மன அழுத்தத்தைக் குறைக்கும் வழிவகைகளைக் கையாளுதல். (தியானம், யோகாசனம், இசை, மூச்சுப்பயிற்சி.) ஒழுங்கான உறக்கம்.

வாழ்க்கைத் துணைக்கு இந்தப் பிரச்சினை பற்றி அறிவுறுத்தல், வைத்திய ஆலோசனையை நாடுதல். (இங்கு பயன்படுத்தப்படும் மருந்து வகைகள் அதிக பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. எனவே வைத்திய ஆலோசனைப் படி கண்காணிப்பின் கீழ் பயன்படுத்தவும்.)

**எவ்வகையான உடற்பயிற்சிகள் நன்மை பயக்கும்?**

ஒழுங்கான காற்றுச் சுவாச உடற்பயிற்சிகள் களைப்பையும் மன அழுத்தத்தையும் நீக்கி புத்துணர்ச்சியூட்டக் கூடியன. வேகநடை, ஓடுதல், துவிச்சக்கரவண்டி ஓட்டம், நீச்சல் போன்றவற்றைச் செய்யலாம். ஒவ்வொரு நாளும் குறைந்தது 30நிமிடம் செய்வது நல்லது.

**இந்தப்பிரச்சினைக்கு சத்திர சிகிச்சை முறையும் உண்டா?**

மேற்கூறிய சிகிச்சை முறைகள் பலனளிக்காவிடத்து சத்திர சிகிச்சையை நாடலாம். நீங்கள் போதியளவு குழந்தைகளைப் பெற்ற பின் இரு சூலகங்களையும் அகற்றும் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளலாம். இதனால் சூலகங்களின் ஓமோன் குறைபாடு ஏற்பட்டு எலும்பு தேய்தல் போன்ற பிரச்சினைகள் தோன்றலாம்.

**வைத்திய கலாநிதி**
**யோ.சிவகரன்**

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**